
# மண்

இதழ் 218


ஜேர்மனி / 2023

பங்குனி - சித்திரை / Mar - Apr



Erdbeben 06.02.2023 (Earthquake in Turkey and Syria)

பூமி நடுக்கம் - துருக்கி, சிரியா நாடுகள் 06.02.2023


இன்றைய தினம் பிறந்த
நாளைக் கொண்டாடும்
அஞ்ஜான்தேவ் மற்றும் அதித்தியா
என்பவர்களுக்கு எம் நல்லாயன் இல்ல
சிறுவர்கள் சார்பாகவும்
அருட்சகோதரிகள் சார்பாகவும்
பிறந்தநாள் வாழ்த்துக்களை
கூறுகின்றோம்.
Happy Birth Day
2023 * 01 * 23



# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர் போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

| | |
|---|---|
| முகவரி: | V. Sivarajah<br>Am Windhoevel 18a<br>47249 Duisburg<br>Germany |
| தொலைபேசி: | 0203/8073898<br><br>015254799233 |
| மின்னஞ்சல்: | v.sivarajah@arcor.de |
| வங்கிவிபரம்: | Mann (Erde) Verein e.V. Duisburg<br>Stadtsparkasse Duisburg<br>Kontonummer: 225 000 421<br>Bankleitzahl: 350 500 00<br>IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21<br>SWIFT-BIC: DUISDE33XXX |

# ஆசிரியர் பக்கம்...

இந்து சமுத்திரத்தில் நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள போதிலும், நாடொன்றுக்குத் தேவையான அனைத்து வளங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும் நாடுதான் இலங்கை. கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் இந்நாடு அந்நியச் செலாவணி பற்றாக்குறையோடு கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது.

இந்நிலையில் கடந்த வருடத்தின் பிற்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றது முதல் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பமாகின. அதனைத் தொடர்ந்து நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெறத் தொடங்கியது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்காக அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள வேலைத்திட்டங்களில் ஒன்றாக விளங்கும் புதிய வரிக்கொள்கைக்கு ஆட்சேபனை தெரிவித்து தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான முயற்சிகளில் தொழிற்சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. பொருளாதார நெருக்கடியின் விளைவான தாக்கங்களையும் அசௌகரியங்களையும் அடிப்படையாகக் கொண்டு இத்தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவே சில தொழிற்சங்கங்கள் முயற்சிக்கின்றன.

ஆனால் தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுப்பதற்கான நேரகாலம் இதுவல்ல என்பதுதான் சமூக ஆர்வலர்களதும் நாட்டின் மீது பற்று கொண்டவர்களதும் கருத்தாக உள்ளது. கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் நாடு மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்தது. இந்நாடு சுதந்திரத்தின் பின்னர் முகம்கொடுத்த மிகமோசமான பொருளாதார நெருக்கடியாக அது அமைந்திருந்தது.

நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி அந்தளவுக்கு மோசமான அசௌகரியங்களையும் தாக்கங்களையும் நாட்டுக்கும் மக்களுக்கும் அளித்தது. அவ்வாறான நெருக்கடிகளுக்கும் தாக்கங்களுக்கும் இதற்கு முன்னர் இந்நாட்டு மக்கள் முகம்கொடுத்தாகத் தெரியவில்லை.

இவ்வாறான சூழலில்தான் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டங்களில் ஒன்றாக விளங்கும் புதிய வரிக்கொள்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் இத்தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க தொழிற்சங்கங்கள் முயற்சி செய்கின்றன.

அவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுமாயின் மக்கள் சேவைகள் பாதிக்கப்படும். அதன் விளைவாக அப்பாவி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர். இது ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகுவதாகவே இந்நடவடிக்கை அமையும். தொழிற்சங்க நடவடிக்கைகளால் மக்களுக்கு நன்மை கிடைக்கப்பெறப் போவதுமில்லை. அதேநேரம் தொழிற்சங்க நடவடிக்கைகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களும் தாக்கங்களும் இலகுவாக சீர்செய்யக் கூடியவையாகவும் இருக்கப் போவதில்லை.

மேலும் இத்தொழிற்சங்க நடவடிக்கையும் அது தொடர்பான கோரிக்கையும் நாட்டை மீண்டும் தீவிர பொருளாதார நெருக்கடிக்குள் இட்டுச் செல்லவே வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் கடந்த வருடத்தில் முகம்கொடுத்தது போன்றதொரு பொருளாதார நெருக்கடியும் அதனை அடிப்படையாகக் கொண்ட அசௌகரியங்களும் இந்நாட்டில் மீண்டும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதுதான் மக்களின் விருப்பமாக உள்ளது.

அதன் காரணத்தினால் நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து தொழிற்சங்கங்கள் செயற்பட வேண்டும். அதைவிடுத்து பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை சீரகுலைக்கும் வகையில் செயற்படலாகாது. நாட்டின் மீதும் மக்கள் மீதும் உண்மையான பற்று கொண்ட எவரும் அவ்வாறு செயற்பட மாட்டார்கள் என்பதுதான் மக்களின் கருத்தாகும்.

இப்பொருளாதார நெருக்கடிக்கு முழுநாடுமே முகம் கொடுத்துள்ளது. அதிலிருந்து மீட்சி பெறுவதற்காக அனைத்து தரப்பினரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். அதில் தொழிற்சங்கங்களும் அடங்கும். இந்நிலையில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதானது, பொருளாதார நெருக்கடியினால் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ள நாட்டையும் மக்களையும் மேலும் பாதிக்கவே வழிவகுக்கும் என்பதே இன்றைய யதார்த்தமாகும்...

ஆசிரியர் (15.03.2023)

## நல்மொழிகள்!..

1- கண்டிக்காத பிள்ளை கெடும்..கடன்பட்டால் வாழ்க்கை கெடும்..
2- உழைப்பவனுக்குக் கிடைக்கும் இடம் எல்லாம் பஞ்சுமெத்தை..
3- நெருப்பையும் வெறுப்பையும் எப்போதும் தள்ளி வையுங்கள்..
4- வாழ்க்கை சரியாக அமையாவிட்டால் வாழ்நாள் முழுவதும் போராட்டம்தான்..

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

### நன்றி மறவேல்..

குழந்தைகளாகிய உங்களை வளர்த்தது யார்?.. உங்களுக்கு ஆடைகளையும், பசிக்கும்போது உணவையும், தூக்கம் வரும்போது தாலாட்டுப்பாடிக் கதை சொல்லியும் தூங்கப்பண்ணியது யார்?.. பெரியவர்களானதும் உங்களை அறிவாளிகளாக்கப் பள்ளிக்கு அனுப்பிக் கல்வி கற்பதற்கான ஏற்பாடு செய்தது யார்?..உன் பெற்றோர்களான தாயும் தந்தையும் தானே?.. உன்னை அறிவாளியாக்க கல்வி புகட்டுவது ஆசிரியர். உனக்குக் கஸ்டம் வரும்போது ஆறுதல் கூறி, உதவி தேவையானால் செய்கிறவன் யார். உன் உயிர்த்தோழன் இல்லையா?..இத்தகையவர்களை நீங்கள் உங்கள் வாழ்நாளில் மறக்கவே கூடாது. உனக்கு உபகாரம் செய்தவர்களை நீ மறக்கவே கூடாது என்கிறது ஆத்திசூடி.

### பருவத்தே பயிர் செய்..

உழவர்கள் நிலத்தை எப்போது உழுவார்கள் தெரியுமா?.. மழைக்காலத்தில், மழைபெய்யும் சமயத்தில், நிலத்தை உழுது, பண்படுத்தித் தயாராக வைத்திருப்பார்கள். மழை பொழிய ஆரம்பித்ததும் விதைகளைத் தூவி , நாற்றங்காலிட்டு, நடவு நட்டு, எருப்போட்டுப் பயிர் செய்வார்கள். மாரிகாலத்தில்தான் ஏரி, குளம், ஆறு குட்டைகளில் தண்ணீர் நிரம்பி இருக்கும் அவற்றின் நீரை வயலில் பாய்ச்சிப் பயிர் செய்வதற்குரிய பருவம் அதுதான். கோடையில் நீர் நிலைகள் காய்ந்து கிடக்கும். அது பயிர்த்தொழில் செய்வதற்கான காலமல்ல. இந்த நியதி உழவர்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும்தான். எந்தக் கரியத்தையுமே அக்காரியத்தைச் செய்வதற்கான பருவத்தில் செய்ய வேண்டும். பருவத்தே என்றால் ஏற்ற காலத்தில் என்று பொருளாகும்.

## நல்நெறிபற்றி........

(வி நந்தகுமார்)

**நாளாந்த நல்லெண்ண நல்லொழுக்கங்கள்**
**சிறந்த சமுதாயங்களை உருவாக்கும்**

அன்பிலே வாழ் ஆனந்தம் பெறுவாய்
ஆத்திரம் அறிவாற்றலை மறைக்கும்
இனிது பேசி இன்பமாய் வாழ்
ஈட்டிபோல் சொற்கள் இழுக்கை ஏற்படுத்தும்.
உன் செயலே உன் விதி.
ஊக்கம் உயர்வைத்தரும்.
எண்ணும் எழுத்தும் ஏற்றம் உண்டாக்கும்.
ஏமாற்றாதே ஏமாறாதே.
ஐயம் நீக்கி அறிவு பெறுவாய்.
ஒரு முறை பேசுமுன் இரு முறை யோசி.
ஓடி விளையாடு குற்றம் செய்யாமல் கூடி விளையாடு.
முன்கூட்டியே மும்முறை யோசி முன்னேற்றம் அறிவாய்.
குனிந்தால் சுமப்பாய் நிமிர்ந்தால் உயர்வாய்.
முகமலர்ச்சி முன்நின்றால் முழுவதும் வெற்றியாகும்.
ஒன்றுபட்ட வாழ்வில் உண்டு நன்மை அதிகம்.
நிலையான அன்பில் சமாதானம் அமையும்.
மரம் நல்லதனால் அதன் கனியும் நல்லதாகும்.
மனம் கசப்பானால் வரும் வார்த்தைகள் கசப்பாகும்.
இரக்கம் இருக்குமானால் இல்லறம் சிறக்கும்.
புகழ்ந்து கூறலாம் எதையும் இகழ்ந்து கூறாதே.
நன்றி மறவாத வாழ்வு நம்மை அறியாமல் உயரும்.
பொறாமை பொல்லாத நோயைக்கொண்டு வரும்.
வார்த்தைகள் அசிங்கமானால் வாழ்க்கையும் அசிங்கமாகும்.
மன்னிப்பு ஒரு மகத்தான செயல்....

## பொன்மொழி!..

மற்றவர்களைத் திருத்துவதற்கு முன்னர்
நாம் எமது தவறுகளைத் திருத்தக் கற்றுக் கொள்ள வேண்டும்!..




# முல்லா கதைகளில்...

முல்லா ஒருநாள் அடுத்த கிராமத்திற்குச் சென்றுகொண்டிருந்தார். கிராமத்துக்குள் நுழைந்தபோது ஒரு வீட்டில் திருவிழாப்போல பெருங்கூட்டமும் கும்மாளமாக இருந்தது. என்ன விசேசம்?.. எனக்குத் தெரியாமல் போய்விட்டதே என்று தனக்குள் சொல்லிக்கொண்ட முல்லா வீதியில் வந்த ஒருவரிடம் என்ன?..இங்கே பெரிய விருந்து நடைபெறுகின்றதே?..என்று விசாரித்தார்.

அநாதைகளுக்குக் காசு சேர்க்கிறார்களாம். அதற்காகவே இந்தக் கூட்டம் என்று வீதியில் வந்தவர் சொன்னார். இதைக் கேட்டதும் முல்லாவிற்குத் தலையைச் சுற்றுவது போல இருந்தது. அநாதைகளுக்குக் காசு சேர்த்து இப்படி விருந்து போட்டா?..பணத்துக்குக் கணக்குக் காட்டுகிறார்கள்?..என்று கேட்டார்.

அதற்கு வீதியில் வந்தவர் இது எல்லாம் பெரிய இடத்து விவகாரங்கள் இவற்றைக் கண்டாலும் காணாதது போல இருப்பதுதான் நல்லது புத்திசாலித்தனம் என்று சொல்லிச் சென்றுவிட்டார். புத்திசாலித் தனத்திற்குச் சொன்ன புதிய விளக்கமும் முல்லாவிற்கு ஆத்திரமாகவே இருந்தது.

அவசர..அவசரமாக முல்லா அந்த வீட்டிற்குள் நுழைந்தார். அங்கு தலையாளிபோல நடந்துகொண்ட ஒருவரைக் கூப்பிட்டார். அநாதைகளைக்

காட்டிப் பணம் சேர்த்து உங்கள் வாய்க்கு உருசியாக ஆடடித்துச் சாப்பிடுகிறீகளே!..உங்களுக்கு வெட்கம் இல்லையா?.. இன்றைக்கு நீங்கள் இந்த விருந்திற்காகச் செலவழித்த தொகை எத்தனை அநாதைகளுக்கு ஒரு நேரச் சாப்பாட்டிற்கு உதவும் என்பது தெரியுமா?.. என்று கேட்டார்.

விருந்தில் நின்ற பலருக்கோ அநாதைகளுக்காகச் சேர்க்கின்ற பணத்திலேதான் விருந்து நடந்துகொண்டிருக்கின்றது என்பது தெரியாமல் நடந்துகொண்டிருப்பதால் அங்கு யாருக்குத்தான் முல்லா சொன்னது விளங்கியிருக்கும்!..

குறிப்பு:-

இக்கதையின் மூலம் நல்ல விடையத்தைச் செய்யும்போது சுருக்கமாகவும் அதிகசெலவுகள், ஆடம்பரம் இல்லாமல் எளிமையாகச் செய்து அதில் கூடிய அளவு பணத்தை மீதப்படுத்திச் சேர்த்து ஆநாதைகளுக்கு உதவுதலே சிறந்தது என்ற உண்மையை அறிந்துகொள்வோம் மாணவமணிகளே!..

## ஒரே எழுத்தை இரண்டு இடங்களில் எழுதினால் வார்த்தை வந்துவிடும்..

1- வாச - ர் - ள் (வாசகர்கள்)
2- தங் - ப்பதக் - ம் (தங்கப்பதக்கம்)
3- - ருப்ப - (திருப்பதி)
4- - தை - தைப்பு (பதைபதைப்பு)
5- - ருத்துக் - ணிப்பு (கருத்துக்கணிப்பு)
6- - னம் - ழம் (பனம்பழம்)
7- ப - க்கவ - க்கம் (பழக்கவழக்கம்)
8- - ருமான - ரி (வருமானவரி)
9- சோ - றுக்க - றாளை(சோற்றுக்கற்றாளை)
10- - த்தம் - துசு (புத்தம்புதுசு

## அம்மாவிற்கு என் பரிசு!..

அன்பான அம்மாவிற்கு
அன்பு வார்த்தைகள் பரிசு...

நல்ல செயல்களால்
அம்மாவிற்கு என் பரிசு...

புரிந்துணர்வுகளால்
அம்மாவிற்கு என் பரிசு...

மொத்தத்தில் நானே
அம்மாவிற்குப் பரிசு..

**செல்வி ஆர்த்தி இராஜேந்திரம்**
**எசன் தமிழ்மொழிச்சேவை**
**பாடசாலை - யேர்மனி.**

## கால்டுவெல் (07.05.1814 - 28.08.1871)



# மேலை நாட்டவர்களால் மேன்மையடைந்த தமிழ்மொழி !..

தென்னிந்தியாவில் நெடுங்காலமாக இருந்துவரும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துலு ஆகிய ஐந்து மொழிகளும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்றும், அவற்றுள் ஆகப் பழமை வாய்ந்தது தமிழ் மொழியே என்றும் ஆதாரங்களுடன் விளக்கி அவற்றைத் "திராவிட மொழிகள்" என்று அழைத்தார் கால்டுவெல் என்னும் வெள்ளைக்காரர். இவர் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர். 07.05.1814ல் பிறந்தவர். சமயப்பரப்பாளர், மொழியியலாளர் ஆவர்.

கால்டுவெல் தமிழையும், டாக்டர் குந்தாக்கர் என்பவர் மலையாளத்தையும் டாக்டர் கில்டெல் என்பவர் கன்னடத்தையும், அறிஞர் பிரெவ்ன் என்பவர் தெலுங்கையும் ஆராய்ந்தனர். அந்த ஆராய்ச்சிகளை எல்லாம் ஒன்று சேர்த்து " A Comparative grammar of the dravidian Languages " அதாவது " திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் " என்ற நூலை எழுதினார் கால்டுவெல்.

அந்த மொழிதான் ஆரிய மொழியின் இலக்கணம் வேறு, திராவிட மொழிகளின் இலக்கணம் வேறு என்பதை ஆதாரங்களுடன் உலகிற்கு உணர்த்தியது. தமிழர்கள்கூடச் செய்யாத அந்த அரிய பணியை மேலை நாட்டவரான கால்டுவெல் செய்ததை தமிழ் வரலாறு என்றும் நினைவில் வைத்திருக்கும். சுருக்கமாகச் சொன்னால் திராவிட மொழிகளுக்கு புத்துயிர் அளித்தவர் கால்டுவெல்.

இன்று தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களில் திராவிட மொழிகள் பற்றிய துறை சிறப்பாகச் செயல்படுவதற்குக் காரணம் கால்வெல்தான். தமிழ்நாட்டில் அவர் வசித்த 53 ஆண்டுகளில் மூன்றே மூன்று முறைதான் தாம் பிறந்த ஊருக்கு ஓய்வெடுக்கச் சென்றார். அந்தளவிற்கு அவர் தமிழ் நாட்டையும் தமிழரையும் நெசித்தார். ஒரு மேலை நாட்டவரால் மேன்மையடைந்தது தமிழ் மொழி என்று சொல்லுமளவுக்கு வாழ்ந்து காட்டிய கால்டுவெல், கொடைக்கானல் மலையில் இருந்தபோது 1891ஆம் ஆண்டு தனது 77வது வயதில் காமானார்.

அவர் சுவாசித்த தமிழும், நேசித்த தமிழ் மக்களும் இன்றுவரை அவரை மறக்கவில்லை. அவரது நல்லுடல் இடையன் குடி என்ற ஊருக்குக் கொண்டு சென்று அவர் கட்டியிருந்த கோவிலிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

கால்டுவெல் இயற்றிய தமிழ் நூல்கள்

நற்கருணை தியான மாலை (1853) - தாமரைத் தடாகம் (1871)

ஞான ஸ்நானம் (கட்டுரை) - நற்கருணை (கட்டுரை)

பரதகண்ட புராதனம்

.................................................................................................................

## தமிழில் உள்ள ஓரெழுத்துச் சொற்கள்..

ஆ - பசு

ஈ - கொடு, படை, பூச்சி, ஈ, ஈனு, தேனீ

ஊ - இறைச்சி

ஏ - அம்பு

ஐ - தலைவன்

கா - சோலை

கூ - பூமி

கை - ஒழுக்கம், கரம்

கோ - அரசன்

சா - இறந்துபோ

சீ - இகழ்ச்சி

சே - உயர்வு

சோ - மதில்

தா - கொடு

தீ - நெருப்பு

தூ - தூய்மை

தே - கடவுள்

தை - தைத்தல், தைமாதம்

நா - நாவு

நீ - முன்னிலை ஒருமை

நோ - அன்பு, வறுமை

நை - இழிவு

பா - பாடல்

பூ - மலர்

பே - மேகம்

பை - இளமை, பசுமை, கொள்கலம்

போ - செல்

மா - மரம்

மீ - வான், மிகுதி

மூ - மூப்பு

மே - அன்பு

மை - அஞ்சனம்

மோ - முகத்தல்

வா - அழைத்தல்

வீ - மலர்

வை - புல், இடு

வௌ - கவர்

நொ - நோய்

து - உண்




## கடையேழு வள்ளல்கள் யார்!..

1- பேகன்:- மயிலுக்குப் போர்வை அளித்தவர்.
2- பாரி:- முல்லைக்கொடி படரத் தேரை வழங்கியவர்.
3- காரி:- தன் குதிரையையும் ஏனைய செல்வங்களையும் வாரி வழங்கியவர்.
4- ஆண்டிரன்:- நாகம் வழங்கிய அரிய ஆடையை சிவபெருமானுக்கு அளித்தவர்
5- அதியமான்:- நீண்டநாள் வாழக்கூடிய அரிய நெல்லிக்கனியை தான் உண்ணாமல் ஔவைப் பாட்டிக்குக் கொடுத்தவர்.
6- நள்ளி:- தன்னை அண்டி வந்தவர்களுக்குத் தான் யார்?. என்பதை வெளிப்படுத்தாமல் உதவி செய்தவர்.
7- ஓரி:- விற்போரில் வல்ல ஓரி, கொல்லிமலைக் கவிஞர்களுக்கு தன் நாட்டையே பரிசளித்தவர்.

## அடிவாரம் நீரே!..

போன வருடம் மணமில்லாப் பூவாய்
உம்மிடம் தந்தையே - நான்
சாக்கடையாய் வாழவிரும்பாத நீர்
சாதனை மங்கையாய் வடிவமைத்தீர்..

சட்டையில்லா உம் முதுகில்
பட்டாடை உடுத்தவேண்டியவள் நான்
சாட்டையால் அடித்தேன் - முதல்
போட்டிப் பரீட்சையில்..

வாழக் கற்றுக்கொடுத்த நீர்
வழியைப் பறித்துச் செல்வதா
சுக்கு நூறாகியது உழைப்பு
மனமில்லா மரக்கட்டையானீர்..

வீழ்ந்த பின்புதான்
சுமந்த கருக்கலின் சுமை
தட்டி எழுப்பியது என்னை
வேகமாய் ஓடினேன்..

உம் அழியா நிழல்
நினைவுக்கு வந்தது
உள்ளம் உருகிப்போனேன்
கண்கள் அருவியானது..

இந்த வருடம்
மணம் கமழும் பூங்கொத்தாய்
சரணடைவேன் தந்தையே
சரித்திர மங்கையாய்..

**செல்வி கே.சிந்துஜா**
**"அருளகம்" சிறுவர் காப்பகம்**
**வவுனியா.**

## அம்மா!..

பத்துமாதம் கருவில் சுமந்து
இரத்தத்தைப் பாலாகத் தந்த அம்மா

பிள்ளைகள் பிறந்து ஆறுமாதம்வரை
அன்பாகத் தாய்பாலைத்தந்த அம்மா

பிள்ளைகளின் மனப்பயத்தை
அன்புகாட்டி மறைத்த அன்பு அம்மா

பிள்ளைகள் பிறந்ததிலிருந்து
அம்மாவுடன் இருக்கும் வரைக்கும்
கருணைகாட்டி அன்பாய் வளர்த்தஅம்மா

பிள்ளைகளை அன்பாகவும் பாசமாகவும்
வளர்த்தெடுப்பவள் அம்மா

பிள்ளைகளின் கல்விக்காக
அரும்பாடு படுபவள் அம்மா

பிள்ளைகளுக்கு அன்பைக்காட்டி
சுவையான உணவுகளை ருசிக்கவே
சமைத்துத் தருபவள் அம்மா

பிள்ளைகளை ஒழுக்கமாகவும்
நல்ல பண்பாகவும் வளர்ப்பவள்
அம்மா!..

**செல்வன் பு நிதுஜன்**
**திருஞானசம்பந்தர் குருகுலம்**
**களுதாவளை - மட்டக்களப்பு**

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 36

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 7 | | 3 | | 6 |
| | | | | 4 | 9 | 7 | 2 | |
| 1 | | | 2 | | | | 4 | |
| | | 7 | | | | | | |
| | | | 5 | | 4 | | 8 | |
| | 8 | 4 | | | | | 6 | |
| 3 | | | | | 5 | | | 4 |
| 2 | | | | 8 | | | 7 | |
| | | 6 | | | 1 | | | |

## சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 129
## (பங்குனி - சித்திரை- 2023)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ-வ

01-04 மாதங்களில் ஒன்று.

13-15 நீர் வாழ் உயிரினம்.

வ-இ

08-06 பொழுது ஒன்று.

11-09 பழங்களில் ஒன்று.

கீ-மே

11-03 நாடு இல்லாமல் அலைவோர்.

13-09 சந்திரனின் மறுபெயர்.

மே-கீ

01-09 வீட்டில் ஒரு உறவுக்காரி.

08-16 துணிவகைகளில் ஒன்று.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

# படித்ததில் பிடித்தது!.

தமிழன் திசைகளை எட்டாகப் பிரித்தான்....
கிழக்கு - மேற்கு
வடக்கு - தெற்கு
வட கிழக்கு - வட மேற்கு
தென் கிழக்கு -தென் மேற்கு

திசையை எட்டாகப் பிரித்த
தமிழன் இசையை ஏழாகக்
கொடுத்தான்...
ச ரி க ம ப த நி

இசையை ஏழாக கொடுத்த
தமிழன்
சுவையை ஆறாக பிரித்தான்...
இனிப்பு - கசப்பு
கார்ப்பு - புளிப்பு
உவர்ப்பு - துவர்ப்பு

சுவையை ஆறாக பிரித்த
தமிழன் நிலத்தை ஐந்தாக
பிரித்தான்...
குறிஞ்சி (மலைப்பகுதி)
முல்லை ( வனப்பகுதி)
நெய்தல் ( கடல் பகுதி)
மருதம் ( நீர் மற்றும் நிலம்)
பாலை (வறண்ட பகுதி)

அழி நிலத்தை ஐந்தாக
பிரித்த தமிழன்காற்றை
நான்காக பிரித்தான்...
தென்றல் - வாடை
கோடை - கொண்டல்

கிழக்கிலிருந்து வீசும்
காற்று - கொண்டல்
தெற்கிலிருந்து வீசும்
காற்று - தென்றல்
மேற்கிலிருந்து வீசும்
காற்று - கோடை
வடக்கிலிருந்து வீசும்
காற்று - வாடை

காற்றை நான்காக பிரித்த
தமிழன் மொழியை
மூன்றாக பிரித்தான்...

இசை ( இசைத்தமிழ்)
நாடகம் ( நாடகத்தமிழ்)
இம்மூன்றும் தமிழுக்கு
இணையான கூறுகள்
என்பதை முத்தமிழ்
என்ற கருத்து கோட்பாடு
வெளிப்படுத்தி
நிற்கின்றது...
இம்மூன்று மொழிகளுக்கும்

தமிழர்கள் கொடுத்த
முக்கியத்துவத்தையும்
முத்தமிழ் கோட்பாடு
வெளிப்படுத்தி
நிற்கின்றது...

**- பிரேம் -**

மொழியை மூன்றாக
பிரித்த தமிழன்
வாழ்க்கையை
இரண்டாகவகுத்தான்...
அகம் - புறம்
கணவன் மனைவி
வாழும் வாழ்க்கை
அக வாழ்க்கை...

வெளியில் இருக்கும்
வியாபாரம் மற்றும்
சுய ஒழுக்கம் எல்லாம்
புற வாழ்க்கை...

வாழ்க்கையை
இரண்டாகவகுத்த
தமிழன்...
ஒழுக்கத்தை மட்டும்
ஒன்றாகவைத்தான்...

ஒழுக்கத்தை ஒன்றாக
வைத்தான் அதை...
உயிரினும் மேலாக
வைத்தான்...
இதைத்தான் அய்யன்
வள்ளுவர் இரண்டு
அடியில் அழகாகச்
சொன்னார்...

"ஒழுக்கம் விழுப்பந்
தரலான்
ஒழுக்கம் உயிரினும்
ஓம்பப்படும்...

**படித்ததில் பிடித்தது.**

## மாணவமணிகளே!..

இதோ உங்கள் அறிவு வளர்ச்சிக்காக ஒரு கணக்குப்புதிரும் மறைந்திருக்கும் படத்தையும் கண்டுபிடிக்க வேண்டும். முயற்சி செய்து பாருங்கள். முடியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்..


கணக்குப்புதிர்..

சதுரத்தில் சில இலக்கங்கள் காணப்படுகின்றன. நீங்கள் விடுபட்ட எண்களைக் கண்டுபிடிக்க வேண்டும். எந்தப் பக்கத்தால் கூட்டினாலும் கூட்டுத்தொகை 130 வரவேண்டும். எழுதிய இலக்கங்களை மீண்டும் எழுதக்கூடாது..

| | | | | |
|---|---|---|---|---|
| 24 | | 20 | 33 | |
| | 25 | | | 29 |
| 30 | 18 | | | |
| | 31 | 14 | | 35 |
| | | 32 | 15 | |

படம் வரைதல்..

இப்படத்தில் ஒரு குதிரையோடு ஒரு குதிரை ஓட்டுபவனும் (அவன் இருக்கிறான்) காணப்படுகின்றான். எங்கே அப்படத்தைக் கண்டுபிடித்து வர்ணம் தீட்டிப்பாருங்கள்..



## அறிய வேண்டிய ஐந்து...

1- பஞ்சபூதங்கள் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்.
2- பஞ்சாங்கம் - வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம்.
3- பஞ்சலோகம் - இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளி.
4- பஞ்சாமிர்தம் - சர்க்கரை, தயிர், தேன், பால், நெய்.
5- பஞ்சாயுதம் - சக்கரம், தண்டு, தனு, சங்கு, வாள்.

## பருவங்கள்...

1- பாலர் பருவம் - பாசம் பாலில் பருகும் பருவம்.
2- மழலைப் பருவம் - அன்பைக் குரலில் கொழிக்கும் பருவம்.
3- சிறுவர் பருவம் - சுற்றிப் பார்த்து வியக்கும் பருவம்.
4- வளர்இளம் பருவம் - வினவும் பருவம், துருவும் பருவம்.
5- விடலைப் பருவம் - துடுக்கும் , துணிவும் பழகும் பருவம்.
6- காளைப் பருவம் - கருத்தும் , கொள்கையும், காதலுமான பருவம்.

## "இ" விடுகதைகள்..

1- இவர்கள் ஓசை இல்லாமலே அடித்துக்கொண்டிருப்பார்கள் யார் இவர்கள்..
2- இதயம்போல துடிக்கும் இரவுபகலாய் விழித்திருக்கும் அது என்ன..
3- இணையான நண்பர்கள் இணையாத நண்பர்கள் யார் இவர்கள்..
4- இலை இல்லாமல் பூ பூக்கும் காய் காய்க்கும் அது என்ன..
5- இமைக்காமல் இருந்தால் எட்டிப்பார்ப்பான் அவன் யார்..
6- இசைத்தால் வணங்கும் இம்சைசெய்தால் கடிக்கும் அது என்ன..
7- இருட்டு வீட்டிலே குருட்டு எருமை மேயுது அது என்ன...
8- இந்த ஊரிலே அடிபட்டவன் அடுத்த ஊரிலே போய்ச் சொல்வான் யார் அவன்.
9- இரத்தத்திலே வளர்ந்து இரத்தம் இல்லாதது அது என்ன...
10- இருக்க நேரமில்லை தத்தித்தத்தி ஓடுவான் அவன் யார்..

**(இமைகள், கடிகாரம், தண்டவாளம், சப்பாத்திக்கள்ளி, கண்ணீர், நாகபாம்பு, பெருஞ்சாளி, தந்தி, நகம், கங்காரு)**

## சூரியனைச்சுற்றியுள்ள கோள்கள்...

1- பூமி (ஏர்த் - Earth)
2- புதன் (மேர்குரி - Mercury)
3- வெள்ளி (வீனஸ் - Venus)
4- செவ்வாய் (மார்ஸ் - Mars)
5- வியாளன் (யூபிட்டர் - Jupiter)
6- சனி (சாட்ரூன் - Saturn)
7- யுரேனஸ் (Uranus)
8- நெப்டியூன் (Neptune)

## சார்க் நாடுகளின் பெயர்கள்...

1- M - மாலைதீவு
2- B - பங்களாதேஷ்
3- B - பூட்டான்
4- S - சிறீலங்கா
5- P - பாக்கிஸ்தான்
6- A - ஆப்கானிஸ்தான்
7- I - இந்தியா
8- N - நேபாளம்

## இந்தியாவைப் பற்றியது..

-தலைநகம் - டெல்லி
-மாநிலங்கள் - 28
-யூனியன் பிரதேசங்கள் - 6
-தேசியப்பாடல் - "வந்தே மாதரம்"
-தேசிய கீதம் "ஜன கண மன"
-தேசிய நாணயம் - ரூபா- பைசா
-உலக மக்கள் தொகையில் -2வது
-உலகப் பரப்பில் - 7வது இடம்
-மனிதவளர்ச்சிகுறியீடு -131வதுஇடம்
-அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் - 22
-செம்மொழிகள் - 6

## உலகில் மிகப்பெரிய முட்டை...

உலகில் மிகப்பெரிய முட்டை என்றால் அது தீக்கோழியின் (நெருப்புக்கோழி) முட்டைதான்..

- சராசரி நீளம் - 15 செ.மீ
- சராசரி அகலம் - 13 செ.மீ
- சராசரி எடை - 1.4 கிலோ

ஒரு கோழியின் முட்டையைவிட 20 மடங்கு கனமானதாகும்..

## மனிதன்...

1- மனித பற்கள் சுறா மீனின் பற்களுக்கு நிகரான வலிமைகொண்டது.
2- மனிதன் நாளொன்றுக்கு வாயில் சுரக்கும் உமிழ்நீரின் அளவு ஒரு லீட்டர்.
3- மனிதன் பிறக்கும்போது 300 எலும்புகள் வளர்ச்சியடைய 206ஆகக்குறையும்.
4- மனித இரத்தம் 8 வகை A+, A, B+, B, O+, O, AB+, AB.
5- முதிர்ச்சியடைந்த மனிதனின் உடலில் எலும்பு மஜ்ஜையில் இருந்து சராசரியாக ஒரு நாளைக்கு 500 கோடி இரத்த சிவப்பணுக்கள் உற்பத்தியாகின்றன.
6- முதிர்ச்சியடைந்த மனித மூளை சராசரியாக 1.3 கி.கிராம் - 1.4 கி.கிராம் இருக்கும். மனித உடலின் எடையில் 2% எடையைக் கொண்டிருக்கும்.

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## உய்வு..

காற்றாடி நூலின் துணையோடு உயர்ந்து..உயர்ந்து வானின் உச்சியில் ஏறியது. " பார்த்தீர்களா நான் எவ்வளவு உயரத்தில் இருக்கிறேன் " என்று தன் பெருமையைப் பறைசாற்றியது. பழைய வரலாற்றை அடியோடு மறந்து காற்றாடி "நூல் இனி எதற்கு" என்று கூறிக்கொண்டே நூலைப் பட்டென்று அது அறுத்துக் கொண்டது. கொஞ்ச நேரத்தில்.. ஊரின் எலையில் ஒரு முள் மரத்தில் விழுந்து, கிழிந்து உருக்குலைந்து கிடந்தது காற்றாடி. காற்றாடியின் கதை தெரிந்த முள் மரம் சொன்னது..

**"ஏற்றி வைத்தவனை மறக்கிறவன் இறக்கி வைக்கப்படுவான்"**

## பாய்ச்சல்..

மரத்தை வெட்டி வீழ்த்திவிட்டுக் கோடரியும் கயிறும் விறகுவெட்டிக்குப் பக்கத்தில் மனம்விட்டுப் பேசிக்கொண்டிருந்தன. காட்டுக்குள் நுழைந்த ஒரு மரங்கொத்தி மாறி..மாறி நான்கு மரங்களைத் தன் அலகால் கொத்திவிட்டுப் பறந்து போனது. இந்த மரங்கொத்தியைப் பார்த்தாயா?.. நான்கு மரங்களை மாறி...மாறித் தன் அலகுகால் வெட்டியது, ஒரு மரத்தையாவது அதனால் உருப்படியாக வீழ்த்த முடிந்ததா?.. என்று கயிற்றைப் பார்த்துக் கேட்டது கோடாரி. " மரங்கொத்தியால் அது முடியாது " என்றது கயிறு. ஏன்? அப்படிச் சொல்கிறாய்.. கயிறு சொன்னது..

**"நாலு மரத்தையும் வெட்டுகிறவன் ஒரு மரத்தையும் விழுத்துவதில்லை"**

# குறளும் பொருளும்...

## இடுக்கண் அழியாமை:-

621. இடுக்கண் வருங்கா னருக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்

622. வெள்ளத் தனைய வடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்.

623. இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

624. மடுத்தவா யெல்லாம் படுப்ப ரிடும்பைக்
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து.

625. அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்.

626. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்றா தவர்.

627. இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாத மேல்.

628. இன்பம் விழையா விடும்பை யியல்பென்பான்
றுன்ப முறுத லிலன்.

629. இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன்.

630. இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
னொன்னார் விழையுஞ் சிறப்பு.

# குறளும் பொருளும்...

## துன்பங்கண்டு கலங்காமை :-

621. துன்பம் வரும்பொழுது மகிழ்க. அத்துன்பத்தை நெருங்கி வெல்ல வல்லது அதைப் போன்றது வேறு இல்லை.

622. வெள்ளம் போன்ற அளவற்ற துன்பம் அறிவுடையவன் தன் உள்ளத்தினால் நினைத்த அளவில் கெடும்.

623. துன்பங்கண்டு வருந்திக் கலங்காதவர் அத் துன்பத்திற்கே துன்பத்தைக் கொடுத்து அதை வென்றுவிடுவர்.

624. தடைப்பட்ட இடங்களில் எல்லாம் வண்டியை இழுத்துச் செல்லும் எருதைப்போல விடாமுயற்சி உள்ளவனை அடைந்த துன்பமே துன்பப்படும்.

625. இடைவிடாமல் மேன்மேலும் இடுக்கண் வந்தபோதிலும் கலங்காதிருப்பவன் அடைந்த துன்பமே துன்பம் அடையும்.

626. செல்வம் வந்தபோது பற்றுக்கொண்டு காப்பாற்றாதவர் வறுமை வந்தபோது இழந்தேமே என்று அல்லல் படுவரோ?..

627. துன்பத்திற்கு இலக்கானது உடம்பு என்று உணர்ந்து தனக்கு வந்த துன்பத்தைத் துன்பமாக நினைக்கமாட்டார் மேலோர்.

628. இன்பத்தை விரும்பாதவன் துன்பத்தை இயல்பென்று எண்ணி, தனக்கு வரும் துன்பத்திற்கு வருந்தமாட்டான்.

629. இன்பம் வந்த காலத்தில் இன்பத்தை விரும்பாதவன் துன்பம் வந்த காலத்தில் துன்பம் அடைய மாட்டான்.

630. துன்பத்தை இன்பமாக எண்ணுபவன் தன் பகைவரும் விரும்பும் சிறப்பை அடைவான்.

# அப்பா மாறவேயில்லை...

ஓரிரு நாட்கள் கழித்து என் வங்கிக் கணக்கை எதேச்சையாகப் பார்த்தேன். அந்த அக்கவுண்ட் என் கல்லூரி காலத்தில் இருந்து நான் பயன்படுத்துவது. என் அப்பா என் செலவுக்காக என்று அதில் தான் பணம் போடுவார். பணியில் சேர்ந்த தகவலும், சம்பள விவகாரங்களும் அப்பாவிற்கும் தெரியும். அதனால் இனி மாதச் செலவுக்காக அதில் பணம் போட மாட்டார் என நினைத்திருந்தேன். அதோடு இனி அப்பா காசு நமக்கெதுக்கு என்ற ஆணவமும் என் தலையில் ஏறிக்கொண்டதால் அந்த வங்கிக் கணக்கைப் பார்க்கவில்லை.

முதல் மாதச் சம்பளம் வாங்கி அது தீரும் நிலை வந்து பழைய அக்கவுன்டில் ஏதாவது இருக்கிறதா என்று அக்கவுன்டைப் பார்த்தால்அதில் வழக்கம் போல, அந்த மாதமும் 30 ஆம் தேதியே ஐயாயிரம் ரூபாய் போட்டிருந்தார். அதற்கடுத்த மாதங்களிலும் இதுவே தொடர்ந்தது. அது மட்டுமின்றி அந்த வருடமும் வழக்கம் போலவே, தீபாவளிக்கும், பொங்கலுக்கும் என் பிறந்த நாளுக்கும் நான் வீட்டிற்கு வரும் முன்னமே துணிமணிகள் எடுத்து வைக்கப்பட்டிருந்தது. கையில் கொஞ்சம் காசு வந்தவுடன் நான் தான் மாறியிருந்தேன்.

அப்பா மாறவேயில்லை...

தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தை அன்பின் முன்னே.

ஒரு கட்டடத்தின் வெளித் தோற்றம் அம்மா பார்க்க அழகாக இருப்பார், வீடும் அப்படித்தான் இருக்க வேண்டும், ஆனால் அந்த வீட்டின் அஸ்திவாரம் அப்பா அதன் பலன் வெளியே தெரியாது, ஆனால் உறுதியாக இருக்கும்.

நான் போகும் பாதை எல்லாம் என் தந்தை போட்டு வைத்தது,
எனை சேரும் செல்வம் எல்லாம் அவர் பார்த்து விதைத்தது!
கையில் கொஞ்சம் காசு வந்தவுடன் நான் தான் மாறியிருந்தேன்.

அப்பா மாறவேயில்லை.

இது போல் ஆயிரம் அப்பாக்கள்.

படித்ததில் மிகவும் பிடித்தது.

# குறுக்கெழுத்துப்போட்டி-192
## (பங்குனி - சித்திரை- 2023)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-07 பங்குனி 8ல் உலகம் முழுவதும் கொண்டாடப்படும் நாள்.
18-21 பகுதி..பகுதி எனப்பொருள்படும்.
33-35 எண்ணெய் அளக்க இதுவும் பயன்படும்.
39-41 இது இல்லாவிடின் குப்பையில் உணவு என்பார்கள்.
47-49 இதனால்தான் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.
வ-இ
14-11 இறுதியாக உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி நடைபெற்றநாடு.
18-16 வீட்டிலுள்ளது. பாதுகாப்பு நிறைந்தது.
28-25 யேர்மனியில் மாதாந்தம் வெளிவந்துகொண்டிருக்கும் ஒரு சஞ்சிகை.
32-30 இது கட்டமுடியாமல் இறந்தவர்களும் உண்டு.
47-45 ஒற்றுமைக்குப் பெயர்போன பறவை.
கீ.மே
24-03 தொழிலாளர்களைச் சுரண்டி வாழ்பவர்.
33-05 மாதங்களில் ஒன்று.
43-22 அரச சபைகளில் இவர்களும் இருப்பார்கள்.
47-33 பெண்களுக்குரிய அலங்காரப் பொருள்.
மே-கீ
01-22 இலங்கையில் வரண்ட மாவட்டங்களில் ஒன்று.
02-16 இது கண்டால் பலிக்கும் என்றும் ஒரு நம்பிகைக நம்மவர்களிடம்உண்டு
23-44 பனையை மூலமாகக்கொண்டு பெறப்படும் உணவுப்பொருள்.
24-38 எது முதல் வந்தது என்ற கேள்வி இந்த உணவுப்பொருளுக்கு உண்டு.
28-42 பூ வகைகளில் ஒன்று.
(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

# பெண் என்றால்!...

- திருமதி கொங்கா ஸ்டான்லி -

பெண் எனப்படுவதே பேராளுமை
கண்ணென்று காத்தல் கடமை
திண்மை மிக்கவள் பெண்ணென்றால்
உண்மை சொல்லி உலகாளுவள்
பாரே பெண்களைப் பார்த்துப்
போற்றும்!..
தேரிலும் வைத்து. ஊர்வலம்
வரவைக்கும்
பெண்ணைப் போதைப்
பொருளாக்கும் மாக்கள்
பெண்ணும் ஒரு உணர்வுள்ள
மனிதப்பிறப்பு என நினைப்பது
இல்லை!..
ஆண்களின் சம்பளம் போல்
சமங்கு. வேண்டும் கோரிக்கை
பெண்களும் அதேவேலை
செய்வதால் நீதிக்கேள்வி
அரசாங்கம் அதற்கு
செவிகொடுக்குமா!..
கொடுத்தால் பாரதியின் கேள்விக்கு
பதில் கிடைக்கும்
அகப்பை பிடிப்பதும்
அடுப்பங்கரையுமல்ல
கணணியின் மவுஸ் பிடிப்பதும்
பெண்ணின் வேலையாம்
ஆணுக்கு நிகராகப் பெண்ணும்
தொழில் புரிகிறார்
பெண்ணால் எதையும் செய்ய
முடியும்என்பது உறுதி !...
பெண்ணென்றல் பிள்ளை பெறும்
இயந்திரமன்று
இன்று செயற்கை முறையிலும்
கருத்தரிப்பு நடக்கிறது
இன்றைய நவீன உலகில்
இதென்ன புதுமை
பெண்ணுக்கும் சில
இலக்கணம் என்று மரபு
பெண்ணதை மீறுவது அழகன்று
அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு
இல்லாவிட்டால்
சங்ககாலப் பெண்ணிற்கு நிகரல்லவே
சங்க காரப் பெண்கள் மானம்
வீரமுள்ளவர்கள்
இக்காலப் பெண்கள் கெட்டித்தனம்
உள்ளவர்கள் உண்மைதான்
மாற்றுக் கருத்தில்லை ஆனால்
பெண் பெண்ணாக இருப்பதே.
மேன்மை தரும்!...

.....................................................................

**பாசம்!..**

கிழிந்த சேலையில் கட்டிய தூளி
பசியால் பாலகன் அழுகுரல்
அறுந்து விழுந்தது துணியல்ல
அன்னையின் பாச இதயம்!..

**குடும்பம்!..**

பூனையும் புலியும் ஒரே குடும்பம்
நாயும் நரியும் ஒரே குடும்பம்
கழுதையும் குதிரையும் ஒரே குடும்பம்
மனிதன் மட்டும் குரங்கா?..
மிருகமா?.. தெரியவில்லையே!..

- சிவா -

# மகளிர் தினம்!...

-இரா சம்பந்தன்-

புதுமைகள் மலர்ந்திடவும்
பூவையர் நிமிர்ந்திடவும்
சமத்துவம் நிலைத்திடவும்
மார்ச் 8 - ஆம் நாள் மலர்ந்து
மறுமலர்ச்சி தந்ததே
மகளிர் தினமென்றே !

ஆணாதிக்கச் சமூகத்தின்
அடக்குமுறைத் தளைகள் களைந்து
சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத்
துணிந்தநாள் மகளிர் தினமாய் !

அர்த்த நாரீஸ்வரம்
அன்றே காட்டியது
பெண்களின் சமத்துவம்
வருணங்கள் வகுத்தவரே
வஞ்சியர் கரங்களில்
விலங்குகள் பூட்டினர் .

மூளைச் சலவைக்குள்
முடங்கிக் கிடந்தவர் ,
ஊளையிடும் நரிகளை
உதறித் தள்ளி ,
உதயத்தைத் நோக்கியே
எட்டியடி வைத்தனர் .

பூட்டுகள் தெறித்திட
புன்னகை சிந்தியே
புறப்பட்ட நங்கையர்
நாட்டிலே நன்மைகள் விளைய
நலந்தரும் பதவியி லமர்ந்தனர் .

அடுப்படியி லென்றும்
அகப்பை பிடித்துக் கிடக்காமல்
செருக்களம் சென்று
வாளெடுத்து வீசியவர்
வரலாற்றின் பக்கங்களில் . . . .

சுடுகலன் தாங்கியே
படுகள மாடிய
மங்கையர் மாவீரம்
மண்ணெங்கும் வியாபகம் . . . .

அன்று உத்தமி யென்றால்
உடன்கட்டை யேறென்றே
பத்தினிப் பெண்களைப்
பற்றியெரியும் தீயிலிட் டனரே !

அந்நிலை யகன்றாலும்
கண்ணுக்குத் தெரியா
கனலினிலிடும் செயல்கள்
பெண்ணுக் கெதிராய்ப்
புவியெங்கும் நிகழ்கிறதே !

வன்புணர்வும் வன்முறையும்
வாட்டியே வதைக்க
பெண்ணவள் கண்ணீரிலே . . . .

பொன்னும், பொருளும், கேட்டே
மின்னலி டையாரைக்
காயப்படுத்தும் செயல்கள்
கண்டிக்கத் தக்கவை !

தாய்மையின் தத்துவங்களை
வாய்மையால்ப் போற்றுவோம்
வஞ்சியர் திருநாளில்
வணங்கியே வாழ்த்துவோம்!.. .

# சித்திரைப் பெண்ணாள் வருகின்றாள்!..

**- கீத்தா பரமானந்தன் -**

சித்திரைப் பெண்ணேநீ வருகவே!
இத்தரையும் இன்பத்தில் நிறையவே!
முத்தாகி மிளிரட்டும் வாழ்க்கையுமே
முழுமதியாய்ச் சிந்திடுவாய் ஒளியையே
வித்தாகி இன்பங்கள் உள்ளத்திலே
விழைச்சலாய்ப் பெருகட்டும் பூமியிலே
தித்திப்பைத் தாங்கியுமே வரவேண்டி
திசையெங்கும் பூத்தூவி நிற்கின்றோம்

நெஞ்சார வரவேற்கும் உந்தனுக்கே
நேசமுடன் காத்திருக்கு உலகமுமே!
அஞ்சுதலைப் போக்கியுமே உவகையுடன்
அகிலத்தில் சமத்துவத்தை வளர்த்திடடி
அஞ்சுகமே சித்திரையாம் ஆரணங்கே!
ஆனந்தம் கொள்ளுதடி எதிர்பார்ப்பு
இதயமெலாம்
சஞ்சலங்கள் சரிவுகளை நீக்கிடவே
சந்தோசம் தாங்கியுமே வந்திடடி!

நல்லாட்சி அரசுகளும் நிலைபெற்று
நலமோடு மக்களும் சிரித்திடவே
பொல்லாத கயமைகளும் ஒழித்திடவே
பொறுப்புகளை இளையோரும் ஏற்றிடவே
முல்லைகளாய் மனங்களும் மலர்ந்திடவே
முறுவலுடன் எந்நாளும் தொடர்ந்திடவே
இல்லங்களில் இல்லாமை ஒழிந்திடவே
இன்முகமாய்ச் சித்திரையே இதந்தருவாய்

கலையோடு கல்வியுமே வளம்பெறணும்
கனிவான சமுதாயம் மலர்ந்திடணும்

**உயர்ச்சி!..**

வாழ்த்திப் பேசமுடியாவிட்டாலும்
பிறரைத் தாழ்த்திப் பேசுவதை
குறைத்துக் கொண்டால்
வாழ்க்கையில் உயரலாம்!..

**மரம்!..**

நான் குனிந்து பார்த்தபோது
நீ சிறிய தாவரம் - நான்
நிமிர்ந்து பார்த்தபோது - இன்று
நீ நிழல்தரும் விருட்சம்!..

**நிரந்தரம்!..**

பிறரை நம்பி வாழ்பவருக்கு
வறுமை என்றும் நிரந்தரம்
உழைத்து வாழ்பவருக்கோ
நிம்மதி என்றும் நிரந்தரம்!..

**வெற்றி!..**

தினம் தினம் தேடல்களும்
தினம் தினம் முயற்சிகளும்
மேற் கொள்ளப்பட்டால்
கூட்டுத்தொகை வெற்றியாகும்!..

**நேசிப்பு!..**

உன்னைக் கருவறையில்
சுமந்த அன்னையையும்
உன் கருவைச் சுமக்கும்
மனைவியையும் கடைசிவரை
நேசி!....

**- சிவா -**

நிலையாகத் தொடர்ந்திடுவோம் ஓரணியில்
நின்றிடுவோம் ஒற்றுமைக் கரமிணைத்து
விலையற்ற இயற்கையைப் போற்றியுமே
விருப்பமுடன் ஆற்றிடுவோம் நற்செயல்கள்
மலையெனவே நம்புகிறோம் சித்திரையே
மலராகி சுகந்தத்தைப் பரப்பிடடி!

இன்னலின் பிடிக்குள்ளே உலகமுமே
இரவுபகல் தவிப்புடனே மனங்களுமே
மின்னலென மறைந்திடட்டும் அத்தனையும்
மின்மினியாய் வந்துமே அணைத்திடுவாய்
கன்னலினைப் பொழிந்திடவே நாடுகிறோம்
கனவுகளை நிறைத்திடவே வேண்டுகிறோம்
வன்னமுறு ஆரணங்கே வந்திடுவாய்
வனப்புகளை அள்ளியுமே தந்திடுவாய்

ஊரெங்கும் பூவாசம் உனக்காக
உலவிடுதே தென்றலும் உனைத்தழுவ
ஆரவாரம் சிட்டுகளின் ஆலோலம்
ஆகாயம் பூமியெங்கும் பூபாளம்
வாராதோ நாளுமெனும் மனக்கோலம்
வஞ்சியாம் சித்திரைப் பெண்ணுனுக்காய்
சீராட்டக் காத்திருக்கோம் வந்திடடி
சித்திரையே இளவேனில் பெண்மகளே

உள்ளத்தை உரைத்திட்டேன் உணர்வுடனே
உயர்வுகளைத் சொரிந்திடடி சொந்தமுடன்
வெள்ளமாய்க் களிப்புகள் நித்திலத்தில்
வேணுகானம் இசைக்கட்டும் நித்தியமும்
அள்ளிவந்து செழிப்புகளால் சீராட்டும்
அவனியின் அழகெல்லாம் உன்னாலே
கள்வடியும் தேனாகி வந்திடுவாய்
களிப்புடனே காதலுடன் சித்திரையே!..

## அனைத்துலகப் பெண்கள் தினம்!..

சோதனையில் வாழும் பெண்கள்
சாதனை படைத்திட வேண்டும்
வேதனை காணுமென்று எப்பவும்
போதனை செய்யாது உழைக்கும்
வயதில் அப்பவே உழைத்திட
வேண்டும்...

களைப்பின்றி முதுமை
காத்து இளமை
முயற்சியுடன் முயன்றிட வேண்டும்
பெண்ணெனும் பெருமையுடன் மண்
பார்த்துக் குனியாது விண் பார்த்துத்
தலை நிமிர்ந்திட வேண்டும்...

அரசியல், சமூகம்,பொருளியல்
வென்றியிட வேண்டும்
குறைந்த நேரம் கூடிய சம்பளம்
நிறைந்திட வேண்டும்
சமத்துவம் பேசிக் கைகள் தாங்கிட
சரிபாதியின்றி முழுதாக
ஓங்கிட வேண்டும்...

பாலினப் பாகுபாடின்றி ஓரினமாய்
விழுதாகப் பதிந்திட வேண்டும்
பெண்களிற்கு வாக்குரிமை தந்தது
புகழ்ந்து தொழுதிடல் வேண்டும்
கிளாரா ஜெட்கின் எனும் பெண்மணி
என்றும் போற்றிடவே மார்ச்-8
சர்வதேசப் பெண்கள் தினம்
என்றென்றும் சுதந்திரமாகக்
கொண்டாடப்படல் வேண்டுமே....

**திருமதி ராணி சம்பந்தர்**

# நலன் காக்க வா சித்திரையானே!..

(கலைவாணி.ஏகானந்தராஜா)

தொன்று தொட்ட பண்பாடு தமிழர் வரலாற்றில்
இன்றும் மறப்பதற்கில்லை இனிய காலமது
நெட்டநெடுங் காலம் முன் நாம் தமிழ் புத்தாண்டில்
எட்டிவரும் நாட்களிலே ஓட்டரைதட்டி கூட்டிக்களுவி
புத்தாண்டு நாளதிலே புனித மருத்து நீராடி
புத்தம் புதிய ஆடையணிந்து பூசைகாண கோவில் சென்று
வீட்டு சுவாமி அறையில் விளக்கேற்றி கும்பம் வைத்து
கட்டு வெத்திலையும் கனிந்த வாழைப்பழம் நெல்லுடன்
முட்டாசு கட்டி அப்பா முதல் கைவிசேஷம் வழங்க
ஒட்டுமொத்தமாய் ஒவ்வொருவரும் ஆசிபெற்று
லட்டுமுதல் தட்டுமுட்ட பலகாரங்கள் பகிர்ந்துண்டு
கொட்டமடித்து கொண்டாடிய நாட்கள் எங்கே -பின்

நிலைகுலைந்து நிலத்தைவிட்டு நாடுநாடாய் சிதறுண்டு
அலையிலே அடிபட்ட வெள்ளமாய் புலம்பெயர்ந்தோம்
புலம்பெயர்ந்தும் புத்தாண்டை புனிதமாய் கொண்டாட
நலமிருந்தும் நலிந்திடும் மனங்களாய் பலரிங்கு
நிலத்தினில் உறவுகளை நினைத்துநினைத்து மாய்ந்து
கலங்கியே தினம்தினம் காலங்கள் கழிந்தனவே
காலம் கனியுமென்றே காத்திருந்த வேளையிலே
கோலம் மாறியே கொரோனாவும் வந்துசேர்ந்ததே
உயிர்களைக் காவுகொண்டு உணர்வுகளை புதைத்து
ஆயிரமாயிரமாய் இழந்தோம் அத்தனையும் சகோதரரே
இரண்டு ஆண்டுகள் இருண்ட புத்தாண்டுகளாய்
மிரண்டு போனவர்கள் மீண்டு வருவதெப்போ

அரிசி கொதித்து அடுப்பிலே வீழ்ந்த கதையாக
அரசின் கொடுமையால் அவலங்கள் மீண்டும் - தாயகத்தில்
சிந்தனையில்லா சிங்கள அரசினால் மக்கள்
சித்திரைப் புத்தாண்டில் சினங்கொண்டவராய்
கத்திக் கதறுகின்றனர் கால் வயிற்று உணவுக்காய்
பத்தி எரிகிறது வயிறு பாரின் நிலை கண்டு

நிலத்திலும் புலத்திலும் புலர்கின்ற புத்தாண்டே நீ
பார்வையாளனாக வந்திடாதே பாவிகள் எம்மை
பலங்கொண்ட மானிடராய் பாரெங்கும் அமைதியுடன்
குலவிடும் அன்புடன் கூடி வரும் மகிழ்வுடன்
நலங்காக்கும் தாயாக நாடி வா சித்திரையாளே!...

..............................................................................................................................................

## மா மனிதன் லெனின் !..

அதிகார யுகத்தில் உழைக்கும் மக்களுக்காக உரத்துக் குரல்கொடுத்து உள்ளவர்
உள்ளதை உள்ளபடியே அடையும்படியான உன்னத மாற்றத்திற்க்காய் உளப்
புரட்சியைத் திரட்சியாய்க் கொடுத்த புரட்சி யுகப் புண்ணியவான்

அகிலத்தில் அன்பில்லை நீதியில்லை
அமைதியில்லையென
அடுக்கிக்கொண்டு போகுமளவிற்க்கு
நீதிகளுக்காய் அன்றாடம்
அனைவரும் போராடவேண்டிய
அழுக்கான சூழலில் இன்றும்
அலறியழ வேண்டும்போல பல
லெனின்களைப் பிரசவிக்க
வைக்கிறது இவ்வுலகம்...



அக்களிப்பான பூங்காவான
அருமருந்தான உலகத்தில்
அழிவுகளும் அதர்மங்களும் ஒழிய
ஆன்மீகவாதிகளே அரசியல்வாதிகளே
அறத்தையும் தர்மத்தையும்
அகத்தில்க்கொண்டு உழையுங்கள்
அருளால் மக்களை ஆண்டுகொள்ளுங்கள்
இருளான இவ்வுலகில் ஏழ்மையும் சமத்துவமும்
சமாதானமும் எங்கும் மலர்ந்து
நறுமணம்பரப்பி மண்ணுலகு
அகமகிழட்டும் ஆயுளுக்கும்....

**திரேஸ் மரியதாஸ்**
**இலண்டன் - சட்டன்**

## தனித்திரு.. பசித்திரு.. விழித்திரு..!

ஆயிரம் வாசல் வழி
உன் இதயம் நுழைந்து
பின்புற வாசலில் ஓசையின்றி
வெளியேறுகிறது..

எத்திசையிலும்
மக்கள் திரள்
ஆழ் கடலில் உன்னை மூழ்கடிக்கும்..

ஓவென்ற பேரிரைச்சல்
கடலலையாய்ப் பொங்கி
உன் உயிர் மூச்சு சுவாசத்தை
வடக்கயிற்றில்
கட்டி இழுத்துச் செல்லும்..

மனித நடமாட்டமற்ற
காற்றழுத்தம் இல்லாத
வெற்று வெளியில்
நீ காற்றில் மிதக்கையில்
கழுகாகப் பறந்து செல்..

பறப்பன நடப்பன ஊர்வன
என நீ வாழத் தொடங்க
உயிரொடு அறிவும்
கூடு விட்டு கூடு பாயும்..

உன் தனிமையில்
உன்னை அறிவாய்
உன் பசியில்
உன்னை உணர்வாய்
நீ விழித்திருக்கையில்
இறைமை தொடுவாய்..

ஆயிரம் காலத்துப் பயிர்
உன் இனிமை
தனித்திருக்கும் நிலா
தனித்திருக்கும் வானம்
நீயும் தனித்திரு
சாவிலும் உயிர்ப்பாய்!

**சத்யா பிரான்சிஸ்....**

........................................

## சிறுவர் தினம்!..

தலைவரை வரவேற்க
குழந்தைகள் அணிவகுப்பு
கடும் வெய்யில் அகோரம்
மயங்கி விழுந்த சிறுவர்கள்!..

## மதிப்பு!...

உப்புக் குறைந்தால்
மரியாதை போய்விடும்
உப்பு கூடினால்
மதிப்புப் போய்விடும்!..

## பணம்!..

பணம் கோடியாகச் சேர்த்து
பிணமாக மாறுவதை விட
குணம் சேர்த்து மகிழ்ச்சியாக
வாழ்வதே சிறந்த வாழ்வு!..

**- சிவா -**

## காசு தாங்க!..

- கவி மீனா -

காசு கையிலை இருந்து விழுந்து
உருண்டு ஓடி ஒழியுது
பையிலை போட்டாலும் காணாமலே போகுது
இன்று என்னிடம் நாளை உன்னிடம்
மறுநாள் யாரிடம்?
மனிதன் அச்சடித்த காசு தானுங்க
மனிதனையே ஆட்டி படைக்குது

காசு இல்லாத ஆதி காலத்திலே மனிதன்
நின்மதியாய் வாழ்ந்தான்
இன்று காசு இல்லாட்டி அவனு
தெருவிலைதான் கையேந்தி நிற்பான்
பிள்ளை பிறந்தாலும் காசு வேணும்
பிள்ளை வளரவும் காசு வேணும்
கல்வி கற்க காசு வேணும்
கடைக்கு போகவும் காசு வேணும்
வேலைக்கு போகவும் காசு வேணும்
கல்யாணம் வந்தால் சீதனமாய்
கொட்டி அளக்க காசு வேணும்
காசு கொடுத்தது பத்தாமல் போனால்
சண்டையிலே மண்டை உடையும்
இல்லாட்டி குடும்பம் பிரியும்

இந்த ஒரு சாண் வயிற்றை
நிரப்ப தினமும் காசு வேணும்
மானத்தை காக்க ஆடை அணிக்கும் காசுதான் வேணும்
கோயிலுக்கு போனாலும் காசு வேணும்
சாமி கும்பிடவும் காசு வேணும்
தான தருமம் செய்யவும் காசுதானே வேணும்

நோய் பிடித்தால் காசு வேணும்
மரணம் வந்தாலும் காசு வேணும்
நெத்தியிலே காசை ஒட்டி
கொட்டி கொட்டி செலவு செய்தால்தான்
பிணமும் சுடுகாடு போகும்

காசு இல்லாட்டி மனிதன்
வாழ்க்கையும் நாறி போகும்
செத்த பிணமும் நாறிதான் போகும்
காசு தாங்க இன்று கடவுள்
காசு இல்லாட்டி வாழ்வும் இல்லை
மனிதனுக்கு சாவுமில்லை!..

.............................................................................

## அம்மா!..

விலை மதிப்பற்றது அறிவு
பலமான ஆயுதம் பொறுமை
அற்புதமான மருந்து சிரிப்பு
அழகான வாழ்வுக்கு அம்மா!..

## பாதை!..

தேயிலைக் கூடையுடன் அம்மா
பசியுடன் மலைகளில் ஏறுகையில்
அரை வயிற்றுப் பசியுடன் நான்
பாடசாலைநோக்கி கல்லுப்பாதையில்
மலைகளிலிருந்து கீழிறங்குகிறேன்!..

- சிவா -

# இதழிலக்கம் 217க்கான அட்டைப்படக்கவிதை.




தைத்திங்கள் தொண்ணூறில் தரணியிலே தடம்பதித்துக்
கையெழுத்துச் சஞ்சிகையாய் காலூன்றியே - மண்ணில்
முப்பத்தி இரண்டகவை முனைப்பாய் நடைபயின்றின்றும்
செப்புகிறாய் தமிழின் சீர்!...
தட்டச்சினில் பதிவாகித் தடம்மாறிடாத நற்பணிகளுடன்
எட்டிப்பிடித்துப்பல எல்லைகளைத் தாண்டி - எழுச்சியாய்
வண்ணக் கணினிப்பதிவாய் வடிவமதில் நற்பொலிவோடு
திண்ணத்தை இயம்புதின்று!...
கலையிலக்கிய இதழாய்க் காசினியின் தகவல்களுடன்
விலையில்லாத் தாய்த்தமிழின் விருச்சமாகி - தாயக
மண்ணின் துயர்போக்கும் மனிதாபிமான உதவிகளெலாம்
புண்ணுக்கு மருந்தாய்ப்போம்!...
தொய்வில்லா அறத்தோடும் தொடருகின்ற சேவைநலனும்
கைகொடுக்கும் உறவுகளின் உதவிகளாய் - என்றுமே
தொடரும் காலமெல்லாம் தோள்கொடுக்கும் தூயவரால்
படருமே உந்தன் பணி!..
உலகிலொரு தமிழிதழாய் உதவிக்கரம் நீட்டிடுமுன்
விலகிடாத சேவைதனையும் வியந்தே - வற்றிடாத
ஊற்றாய் உவந்தளிக்கும் உறுதியான மாண்பினுக்காய்
போற்றுமே என்றும் புவி!...
அல்லல்கள் நீங்கித்தேசத்தில் அனைவரும் மகிழ்திருக்க
தொல்லையிலா வாழ்வுக்குத் தோள்கொடுத்து - தாயகத்து
மாற்றுத் திறனாளிகளின் மனவுறுதியை உயர்த்தியதாலும்
ஏற்றுவோம் என்றும் உனை!...

**அம்பலவன் புவனேந்திரன்..**

# சிந்தும் விழிநீரில் சிரியாவும் துருக்கியும்!...

உலகத்தை உலுக்குகிற சம்பவங்களாக
உள்ளத்தை பீதியிலாழ்த்தும் உக்கிரெயின்
கலகத்தில் மீழவொண்ணாக் காரிருளில்
கண்ணுக்கு முன்னாலே துயரம் குவிந்த
நிலநடுக்கத்தில் துருக்கியுடன் சிரியாவுமே
நெரிசல் இடிபாடுகளுக்குள் புதையுண்டு
நிலவுகின்ற பேரிழப்பில் நீங்கிடா துயிர்
நீத்தவுறவுக் காயமும்மனதால்த் தேய்ந்து

இடிபாடுகளுள் கிக்கியே உயிர்களோடு
இன்னலுடன் துடிப்பவரை குளிரும்தாக்க
துடிக்கும் மரணவலியில் தேசமெங்கும்
தோய்ந்திருக்கும் மாந்தர்க்கு ஏக்கவலி
பிடிப்போடு நம்பிக்கை நலியாவண்ணம்
பிறதேச மீட்புகளும் நீளும்வண்ணம்
மடிப்பிச்சை யேந்திநிற்கும் மனிதமின்னும்
மனிதநேயச் செயற்பாடு தொடருதின்னும்

உலுக்கிய அளவுகெக்டர் எட்டாயுயர
உலகெங்கும் அதிர்வலை பதிவாகிடவே
துலக்கிய செய்தியெங்கும் பரவுமுன்னே
துளிர்காலை நாலுமணி துயரம்பாடர
நிலத்தினில் காலூன்றத் தயக்கத்தோடு
நிர்க்கதியாகவே இருதேசம் பரிதவிக்க
புலத்தினில் பெயர்த்திடும் உயிர்காப்போடு
பூத்துவரும் செய்திகளும் ஆறுதலோடு

செயற்கையால் மானிடத்தின் சீரழிப்பை
செரித்திடவே முடியாது பூமித்தாயும்
இயற்கையைப் பேணிப் போற்றாவிடில்
இங்ஙனமே நிகழுமென்று குமுறியதோ
தயக்கமின்றி நிகழ்த்திடும் அக்ரமத்திற்கு
தனிமனித செயற்பாடே சாபமானதோ
மயக்கநிலை தெளிந்தால் மாறுமுலகு
மரிப்புகளைத் தடுத்திட மலரும்மாண்பு

**-அம்பலவன்புவனேந்திரன்..**



## திருப்பாடுகளின் வெள்ளி !...

- ஜெயா நடேசன் -

தத்துவ ஞானம் புத்தொளி பெற்றது. யூத நிலத்திலே
எத்தனை உண்மை வந்து பிறந்தது இயேசு பிறந்ததிலே
இத்தனை நாளும் மானிடம் வாழ்வது இயேசுவின் வார்த்தையிலே
கவியரசு கண்ணதாசன் பாடல் வரிகள்

ஒரு வாழ்வின் சாவு என்றுதான் இயேசுவின் வாழ்வில் மனுக்குலத்தின் வாழ்வு பிரதி பலிக்கிறது வாழ்வுக்குள் சாவு அதிகரிக்கிறது. ஆனால் அதை வெல்வதுதான் உண்மை வாழ்வு.மனித வாழ்வு உடல் உணவு உடைகளால் மட்டும் விளக்கப்படுவதில்லை. இவை உலக வாழ்வுக்கு தேவை .ஆனால் மனித வாழ்வுக்கு தேவையானது.இவை மட்டுமல்ல மனிதன் உறவால் பண்பால், அன்பால் தன்னைப்போல் பிறரை நேசிக்கும் உயிர் குணத்தால் உலகை வென்று வாழ இயலும் என்பதை இன்றைய நாள் தெளிவாக்குகின்றது. ஏழையை ஏளனம் செய்கிறவர்....

அவரை உண்டாக்கியவரை இகழுகிறார்.பணம் வசதி அனைத்துமிருந்தும் அன்பு மனித நேயமும் இல்லையெனில் அம்மனிதன் வாழ்ந்தும் இறந்தவனே இவ்வுண்மையை உணர்ந்தவளாக இயேசு இன்று சிலுவையில் தொங்குகிறார். இறைவனின் அன்பின் ஆழம் அகலம் சிலுவையன்பு இன்று தியாகத்தின் நாள் இயேசு செய்த மூன்று செயல்கள் தம்மை சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்தக் குரல் எழுப்பி கண்ணீர் சிந்தி மன்றாடி வேண்டினார்.மூன்று செபங்கள் மௌன செபம்,சக்தி செபம்,கண்ணீர் செபம் இதன் விளைவாக இயேசு கொண்டிருந்த இறைப்பற்று கலந்த அச்சத்தை முன்னிட்டு கடவுள் அவருக்கு செவி சாய்த்தார்.

## தவக்காலச் சிந்தனை !...

தவக்காலம் என்பது அன்பின் காலம்.அருளின் காலம்,மனமாற்றத்தின் காலம் எனக் குறிப்பிடுகின்ற இத்தவக் காலத்தில் செப,தப,தானம் என்பன செய்ய அழைக்கப்படுகின்றோம். தவக்காலமானது வருடந்தோறும் வந்து போகும் வழக்கமான நிகழ்வாக அமையக்கூடாது. இன்றைய உலகம் நெருக்கீடுகள் அவலங்கள் நிறைந்தது போட்டி,பொறாமை,ஊழல்கள்,பாலியல் வன்முறைகள்,போதைவஸ்து பாவனைகள்,களவு குத்து வெட்டு,கொலை வாழ்வுற்கு சவால்களாக அமைந்துள்ளன. மனிதன் நிம்மதி அற்று அலைகிறான்.

இந்நிலையில் நமது அன்றாட வாழ்வின் சிலுவைகளை சுமந்து கொண்டு தம்மை பின் தொடருமாறு இயேசு அழைக்கின்றார்.அறிய முடியாத

வடுக்களோடும் நொறுங்கிய உள்ளத்தோடும் இத்தவக்காலத்தை எதிர் கொள்வோம்.இறைவனுக்கும் எமக்கும் இடையிலான உரையாடலானது தூ ய்மையானதாகவும்,உண்மையானதாகவும் இருக்க வேண்டும். எமக்காக மட்டுமல்ல கைவிடப்பட்டவர்கள், உலக சமாதானத்திற்கா க,எமது நாட்டிற்காக, நோயாளிகள்,பசி பட்டினி,இறந்தோருக்காக செபிப்போம்.எமது உடலை ஒறுத்து தியாகம் செய்து பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு கேட்க வேண்டுமென இத்தவக்காலம் எம்மை அழைக்கின்றது. நீங்கள் தர்மம் செய்யும்போது வலக்கை செய்வதை இடக்கை அறியாதிருக்கட்டும் ஏழை எளியோர்க்கு கரம் கொடுங்கள் என அழைக்கின்றது !..

.................................................................................................................................................

## மரணத்தின் பின்பு !..

**- பிரகாஸ் -**


புலம்பெயந்து வாழும் எங்கள் மரணத்துக்கு பின்பு முற்றாக இலங்கை தொடர்புகள் அழிந்துவிடும் . ஏன் என்றால் நாங்கள் திருமணம் செய்ய பெண் எடுப்பதும் ,மாப்பிள்ளை எடுப்பதும் எங்களுடன் முடிவடையும் , ஊருக்கு பணம் அனுப்புவதும் எங்களுடன் முடிவடையும், இலங்கைக்கு விடுமுறையில் செல்வதும் எங்களுடன் முடிவடையும்.அப்பப்பா, அம்மப்பா ,அம்மமா ,அப்பமா ,மாமா ,மாமி என்று நேரில் போய் பார்ப்பதும், கோவில் திருவிழாக்களுக்கு போவதும் எங்களுடன் முடிவடையும்.எங்கள் ஆயுளுக்கு பின் எங்கள் பிள்ளைகள் ஏன் அங்கு போவாகள்? எம் அடுத்த சந்ததி இங்கே வாழ்க்கை துணையை தேடிக்கொள்ளும் ,

அங்கு பணம் அனுப்ப அவர்களுக்கு யாரும் இல்லை , போன் கதைக்க யாரும் இல்லை , அவர்கள் அங்கு (tour) சுற்றுலா போகும்போது எதாவது ஹோட்டலில் இருந்து நிலாவரை கிணத்தையும், கீரிமலை ,சிகிரியா எல்லாத்தையும் ரசித்துவிட்டு ஒரு வேற நாட்டுகாரர் மாதிரி மட்டும் (enjoy) அனுபவிக்க முடியும். அதோடு நிறைய காசும் ஒரு நாள் விமானபயணம் செய்து அங்கு ஏன் போவார்கள் ? அவர்களுக்கு வரும் girl அல்லது boy friend விருபுவார்களா ? என்ன கொடுமை !!!! எங்களுடன் எங்கள் பிறந்த நாடு மறக்கப்படுகிறது... இப்போது நாங்கள் மலேசிய ,சிங்கபூர் வாழ் தமிழரை எப்படி பார்க்கிறோமோ அதைப்போல எங்கள் பேரப்பிள்ளைகள் இனி யாழ்ப்பாணத்தையும் ஒரு தமிழ் இனம் வாழும் இடமாக உலகப்படத்தில் காட்டுவார்கள் !! ஆக்கம் பிரகாஸ் ... ( தவிர்க்க முடியாத உண்மை )

14ம் பக்க கணக்குப்புதிர் விடை...

| | | | | |
|---|---|---|---|---|
| 24 | 37 | 20 | 33 | 16 |
| 17 | 25 | 38 | 21 | 29 |
| 30 | 18 | 26 | 34 | 22 |
| 23 | 31 | 14 | 27 | 35 |
| 36 | 19 | 32 | 15 | 28 |

14ம் பக்க மறைந்திருக்கும் படத்தைக் கண்டுபிடித்தல் விடை..



---

## தெரிந்துகொள்வோம்:-

1- ஆசியாவில் மொத்தம் 49 நாடுகள் உள்ளன. மொத்தம் 2.300 மொழிகள் பேசப்படுகின்றன.

2- ஆசியாவில் மிகப்பெரிய தீவு போர்ணியோ.

3- உலகில் 11 வீதமான மக்கள் இடதுகைப்பழக்கம் கொண்டவர்களாம்.

4- ஆங்கில எழுத்துக்களில் அதிகமாகப் பயன்படுத்தும் எழுத்து E.

5- உலகின் மிகவும் பொதுவான மொழிகள் ஆங்கிலம், ஸ்பானிஸ், சீனமண்டரின்.

# ஞாபகம் வருதே!..வருதே!..

அந்த 60 வயது நபர் தனது முன்னாள் பள்ளிக்குச் சென்று, பதிவேட்டைக் கண்டுபிடித்து, அதில் உள்ள தனது பழைய வகுப்புத் தோழர்களின் ஒவ்வொரு பெயர்களையும் நகலெடுத்தார்.

மொத்தம் 120 பெயர்கள் இருந்தன. அவர் ஒரு மாதம் முழுவதும் இரவும் பகலும் முயன்றார், ஆனால் அவரது வகுப்பு தோழர்களில் 75-80 பேரின் தகவல்களை மட்டுமே சேகரிக்க முடிந்தது.

ஆச்சரியமான முடிவுகள்..

--அவர்களில் 20 பேர் இறந்துவிட்டனர்.
--7 பேர் கணவன்.'.மனைவியை இழந்தவர்களாக இருந்தனர்,
--13 பேர் விவாகரத்து பெற்றிருந்தனர்.
--10 பேர் போதைக்கு அடிமையானவர்கள்.
--5 மிகவும் மோசமாக வெளியே வந்ததால் அவர்களுடன் யாராலும் தொடர்பு கொள்ள முடியவில்லை.
--6 நபர்கள் நம்பவே முடியாத அளவுக்கு பணக்காரராக மாறினார்கள்.
--சிலருக்கு புற்றுநோய் இருந்தது,
--சிலர் நினைவு செயலிழந்தவர்களாக இருந்தனர்,
--சிலர் நீரிழிவு நோயாளிகள்,
--சிலருக்கு ஆஸ்துமா,
--சிலர் இதய நோய் நோயாளிகள்.
--அவர்களில் ஒரு சிலர் கை - கால் அல்லது முதுகுத்தண்டு வடத்தில் காயங்களுடன் படுக்கையில் இருந்தனர்.
--சிலருடைய பிள்ளைகள் மனநலம் பாதித்தவர்களாக, அலைந்து திரிபவர்களாக மாறிவிட்டனர்.
--ஒருவர் சிறையில் இருந்தார்.
--இரண்டு விவாகரத்துக்குப் பிறகு ஒருவர் மூன்றாவது திருமணம் செய்ய முயன்றார்.

ஆலோசகர் கேட்டார்:-

"இப்போது சொல்லுங்கள் உங்கள் மனச்சோர்வு எப்படி இருக்கிறது?--



Valentinesday...

## காதலர் தினம் எப்படி வந்தது!..

காதல் மின்னலைப் போன்றது. அது எப்போது வரும்?.. என்று யாருக்கும் தெரியாது. எந்தவித நிபந்தனையும் எதிர்பார்ப்பும் இல்லாமல் ஈர்ப்பு, அன்பு, அக்கறை இந்த மூன்றும் சங்கமிக்கும் ஒரு புள்ளியே காதல்..

ஆண்டுதோறும் பெப்ரவரி மாதம் வந்ததுமே நினைவுக்கு வருவது காதலர் தினம்தான். காதலிக்கும் இளவயதினர் காதலர் தினத்தன்றுதான் தங்களது காதலைத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்புவார்கள்.

ரோமனிய அரசனின் ஆட்சிக் காலத்தில்தான் காதலர் தினம் கொண்டாட்டம் தொடங்கியதற்கான சான்றுகள் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கிளாடியுஸ்மிமி என்ற அரசனின் ஆட்சிக் காலத்தில் ரோமாபுரி நாட்டில் இனி யாரும் திருமணம் செய்து கொள்ளக்கூடாது எனவும், ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட திரு மணங்களை ரத்துச்செய்ய வேண்டும் எனவும் ஒரு அதிரடி உத்தரவை விட்டுள்ளார்.இந்நிலையில் அந்தநாட்டுப் பாதிரியார் "வலண்டைன்" அரசனின் அறிவிப்பை மீறி இரகசியமாக அனை வருக்கும் திருமணங்களை நடாத்தி வைத்தார்.

இதை அறிந்த மன்னன் வலண்டையினைக் கைது செய்து மரணதண்டனையை நிறைவேற்ற நாளும் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இதற்கிடையில் சிறைக்காவலரின் பார்வை இழந்த மகள் அஸ்டோரிசுக்குமிடையே காதல் ஏற்பட்டுள்ளது. ஆனால் சிறைக்காவலருக்கு இது தெரியவர அஸ்டோரியசை வீட்டுக் காவலில் வைத்தான் மன்னன். அப்போதுதான் வலண்டைன் அஸ்டோரிசுக்கு தனது முதல்க் காதல் வாழ்த்து அட்டை மூலம் செய்தி அனுப்பினான்.

இதே நேரத்தில்தான் வலண்டைன் கல்லால் அடிக்கப்பட்டு சித்திரவதை செய்த நிலையில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் கொல்லப்பட்டார். அந்த நாள் கி.பி 270 ஆண்டு பெப்ரவரி 14ம் நாள். இந்த நாளே "வலண்டைன்" தினம் காதலர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

**உலக மகா காதல்!..**

காதலர் தினம் ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி 14ம் திகதி வந்து போகும். அன்று இந்தநாள் உலகளவில் கொண்டாடப்படும் மகத்தான நாளாக உருவெடுத்துவிட்டது. இது பற்றிய சில சுவையான தகவல்களைப் பார்ப்போம்.

**காதலுக்கு உகந்தநாள்..**

உலகம் முழுவதும் ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 60 லட்சம் சோடிகள் காதலர் தினத்தன்று நிச்சயம் செய்துகொள்வதாகச் சில தரவுகள் சொல்கின்றன. ஏராளமானோர் பெப்ரவரி மாதத்திற்காகக் காத்திருந்து 14ஆம் திகதியன்று காதலைச் சொல்வது, காதலை ஏற்பது, நிச்சயம் செய்து கொள்வது எனத் திட்டமிட்டுக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

அடுத்த படியாகப் புத்தாண்டு தினமான ஜனவரி 1ஆம் திகதியன்று நிறையச் சோடிகள் தங்கள் காதலை உறுதிப்படுத்துகின்றனர்.

**கப்பிள் கோல்ஸ்..**

(Couple goals) தொட்டதெல்லாம் வைரலாகும் இணைய யுகத்தில் கடந்த சில ஆண்டுகளாக அதிகம் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளில் இதுவும் ஒன்று அதுதான் "கப்பிள் கோல்ஸ்"!.. காதல் செய்வது எப்படி?.. எனத் தொடங்கி காதலில் சொதப்புவது எப்படிவரை இன்ஸ்டகிராமில் பதிவு செய்து "Couplegoals" என்கிற இணையவழி மூலம் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வையும் ஆவணப்படுத்திவருவது சோடிகளின் வழக்கமாகிவிட்டது.

இந்தக் கப்பிள் கோலஸ் அலப்பறைகள் காதலர் தினத்தன்று சற்றுத் தூக்கலாகவே இருக்கும். சொக்லெட், பரிசுகள், ரோசாப்பூக்கள் எனக்குவிந்து கிடக்கும். கப்பிள் கோல்ஸ்களால் காதலர்கள் மனங்கள் மகிழ்ச்சிபெறும்..

**தென்கொரியாவில்..**

ஆண்டு முழுவதுமே காதலர் தினம்தான். அங்கு மாதத்தின் ஒவ்வொரு 14ஆம் திகதியும் "ரோசா தினம்" , "முத்த தினம்" , "அழைப்பு தினம்" என்று முறைவைத்துக் கொண்டாடுகிறார்கள். "முரட்டுச் சங்கிள்"களுக்கு மட்டும் அன்று கறுப்பு தினமாம்.

**பிரிட்டனில்..**

பிரிட்டனின் - " வேல்ஸ்" பகுதியில் ஜனவரி 25ஆம் திகதியைக் காதலர் தினமாகக் கொண்டாடுகிறார்கள். அன்று கைகளால் செய்யப்பட்ட மரக் கரண்டிகளைப் பரிமாறிக்கொள்வதை 16ஆம் நூற்றாண்டிலிருந்து கடைப்பிடித்து வருகிறார்கள்.

**தாய்வானில்..**

யூலை 7ஆம் திகதியன்று காதலர் தினத்தைக் கொண்டாடுகிறார்கள். அன்றைய தினம் மலர்களைக் கொடுத்து காதலை உணர்த்துகிறார்கள். ஒற்றை ரோசாவைத் தந்தால் காதலுக்கான முன் அறிவிப்பாம். 11 ரோசாக்களைக் கொடுத்தால் காதல் கைகூடிவிட்டது என அர்த்தமாம். காதலைத் தொடர 99 ரோசாக்களும், திருமணத்துக்கு ஒப்புதல் பெற 108 ரோசாக்களையும் கொடுத்து மணம் முடிக்கிறார்கள்.

**புறக்கணிக்கும் சில நாடுகளில்..**

காதலர் தினத்தை உலகம் முழுவதும் கொண்டாடினாலும் இந்தோனிஷியா, சவுதிஅரேபியா, உஸ்பெகிஸ்தான், ஈரான், பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான், மலேசியா உள்ளிட்ட சில நாடுகளில் இத்தினத்தைக் கொண்டாடத் தடை இருந்து வருகின்றது.

**தங்கம் அதிக அளவில் வைத்திருக்கும் முதல் 10 நாடுகள்**

| | |
|---|---|
| அமெரிக்கா | 8,133.47 டன் |
| ஜெர்மனி | 3,358 டன் |
| இத்தாலி | 2,451 டன் |
| பிரான்ஸ் | 2,436 டன் |
| ரஷியா | 2,298 டன் |
| சீனா | 1,948 டன் |
| சுவிட்சர்லாந்து | 1,040 டன் |
| ஜப்பான் | 845 டன் |
| இந்தியா | 757 டன் |
| நெதர்லாந்து | 612 டன் |

## தங்கத்தின் விலை மலைபோல ஏறிவிட்டது!..

உலகில் அதிகளவு தங்கத்தை வைத்திருக்கும் முதல் 10 நாடுகள்!.. 1921ம் ஆண்டில் 21-00 ரூபா, 2022ம் ஆண்டில் 40.000-00 ரூபா(இந்திய ரூபாவில் இங்கே)

தங்கம், வீடு, காணி இவை யாவும் இருந்தால் அவை எப்பொழுதும் பெறுமதிதான் என நம்மவர்கள் கூறுவார்கள். குப்பையிலை கிடந்தாலும் தங்கத்தின் தரமோ, பெறுமதியோ என்றும் குறைந்ததாக இருக்கமாட்டாது. இதனால்தான் தமிழ்ச்சமூகம் தங்கத்துக்கு இவ்வளவு மதிப்புக் கொடுக்கின்றது.

பெருமளவு தங்கத்தை இருப்பில் வைத்திருக்கும் நாடுகளைப் பார்த்தால் அத்தனையும் வசதிபடைத்த நாடுகள்தான். அவர்கள் எப்படிச் சேர்த்து வைத்திருக்கிறார்கள் என்பது கேள்விதான். அதாவது பல வருடங்களின் முன்பு ஆபிரிக்கா, ஆசியா நாடுகளை தமது அரசாட்சியில் வைத்திருந்தபோது அங்குள்ள வளங்களைச் சுருட்டியதைப் போல பெருமளவு தங்கத்தையும் சுருட்டிக்கொண்டுவந்து தமது நாடுகளை செல்வந்த நாடுகளாக மாற்றினார்கள் என்பதுதான் உண்மை.

ஏன் இன்றும் ஆபிரிக்கா கண்டத்தில் தங்கம் விளையும் நாடுகளின் தங்க வயல்களை இந்த ஆதிக்க, வசதிபடைத்த, ஆயுத பலம்பொருந்திய நாடுகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்து பெருமளவு தங்கத்தைச் சுரண்டிக்கொண்டே இருக்கிறார்கள். இது பற்றி விரிவாகவும் ஆராயலாம்..

அடுத்து இந்த தங்கப் பவுண் தமிழர் வாழ்வியலிலும் எத்தனையோ ஏற்றத்தாழ்வுகளைத் தோற்றுவித்து வருகின்றது. பணம் உள்ளவன் தங்கத்தை வேண்டிப் பதுக்கி சந்ததி சந்ததியாக சந்தோசமாக வாழ்கிறான். தமது வாரிசுகளுக்குத் தங்கத்தை அள்ளிக்கொடுத்து அழகுபார்த்து இன்புறுகிறார்கள். ஏன் ஆண்கள் கூட இரண்டு, மூன்று தங்கச் சங்கிலிகள்,

பத்துவிரலுக்கும் தங்கமோதிரங்கள் எனக் கதை நீள்கின்றது.

ஆனால் ஏழையான பல லட்சம் பெண்கள் எமது நாட்டில் ஒரு பவுண் இல்லாமல் கலியாணம் செய்யமுடியாமல் முப்பது, நாற்பது வயதிலும் முதிர்கன்னிகளாக வாழ்ந்தே காலத்தை முடிக்கிறார்கள். ஏழைகள் ஏழைகளாகவே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இன்று நமது தேசத்தில் ஒரு பவுண்விலையும் இரண்டு லட்சத்தைத் தாண்டிவிட்டது. இந்த நிலையில் ஏழை மக்களின் கண்ணீர் வாழ்வு தொடர்கதைதான்!..

---

# பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் சில...

1- ஒரு பெண் அவளுக்குப் பிடித்த துறையைத் தேர்தெடுப்பது, ஏன் தொழிலைச் செய்வதுகூட மாபெரும் சவால்தான். ஆகவே தைரியமும் வலிமையும்தான் பெண்ணின் வளர்ச்சியை மேலும்..மேலும். உயர்த்தும்.
2- பணிபுரியும் இடங்களில் பாலியல் சுரண்டல்கள் மட்டுமல்ல சற்று தாமதித்து வீடு சென்றால் இந்தச் சமுதாயத்தின் பார்வை வேறுவிதமாக உள்ளது.
3- ஒரு பெண்ணாகத் தொழில் செய்யும்போது இந்தச் சமுதாயம் எழும்பும் பல கேள்விகளுக்கெல்லாம் செவிசாய்க்க வேண்டும்.
4- பணிபுரியும் இடத்தில் கொஞ்சம் உயர்ந்த பதவிகளுக்குச் சென்றுவிட்டால் நம்மைச் சுற்றியுள்ள சமுதாயம் நம் மேல் வைக்கும் விமர்சனங்களுக்கு முகம்கொடுப்பதும் ஒரு பிரச்சனையாகவே உள்ளது.
5- ஒரு பெண்மீது எழும் எதிர்மறையான கருத்துக்களும் இடர்களும்தான் அவளை இன்னும் பல மடங்கு பலமாக்குகின்றது.
6- பெண்களுக்கே கட்டுப்பாடுகள் அதிகம். அவற்றை எல்லாம் தகர்த்து தனக்கென்ற தனி அடையாளத்தை உருவாக்கப் பெண்கள் வெளியில் வரவேண்டும்.
7- வெளி உலகத்திற்கு ஒரு பெண் தான் யார்?..எனக்காட்ட தன் திறமைகளை கூராக்க வேண்டும். முயற்சியையும் மன உறுதியையும் வெளிக்கொண்டு வந்து செயற்பட்டால் ஒரு ஆணுக்கு இணையான தைரியமும் திறமையும் ஒரு பெண்ணுக்கும் இருக்கும் என்பது யாவரும் அறிந்ததே.
8- ஒரு பெண்ணுக்கு ஏற்படும் எந்தப் பிரச்சனையையும் தைரியமாகவும் நம்பிக்கையுடனும் எதிர்கொண்டால் அப் பிரச்சனைகளிலிருந்து இலகுவாகக் கடந்து செல்லலாம்.

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன் ...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க..கோதாரிப்போன கொரோனா வந்து லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கிவருவது கவலை. இந்தக் கவலை முடியமுன் நிலநடுக்கமும் வந்து சுமார் 50.000 பேரை கொன்றுவிட்டதை எண்ணி இந்த மயிலன் வேதனையுடன் அஞ்சலி தெரிவிக்கின்றான். உங்களில் எத்தனைபேருக்கு இந்தக்கவலை வந்ததோ யான் அறியேன் பலருக்கு கவலை வராது ஏனென்றால் இந்த அழிவு எங்கட நாட்டில வரவில்லைத்தானே?.. .

நம்மட நாட்டில அரசியல் குழப்பங்கள் முட்டி மோதி எங்கும் எப்போதும் பிரச்சனை..பிரச்சனை என்றே மக்கள் படும்பாடு அல்லோல கல்லோலம்தான். பாராளுமன்றக் கதிரைகளையும் உள்ளூராட்சிமன்றக் கதிரைகளையும் பிடித்து சொகுசுவாழ்வு வாழ எத்தனைப்பேர் வாக்களார்களைவிட வேட்பாளர்கள் கூடப்பேர் கண்டியளோ. அந்தளவுக்கு கதிரைச் சண்டை முற்றிவிட்டது. யாராவது நாட்டின் பொருளாதாரத்துக்கு நல்ல தீர்வை வைப்பார்கள் என்றால் இதுகிடையாது பாருங்கோவன்.

சரி..சரி..இனி விடையத்துக்கு வருவம். வருடாவருடம் பங்குனி-8 பொம்பிளைகளுக்கு ஒரு தினமாம். நல்லதுதானே வருடம் முழுவதும் மாடாய் அடித்து தேய்து உருக்குலையும் பெண்களுக்கு கட்டாயம் இத்தினம் முக்கியம் பாருங்கோ. ஒவ்வொருநாளும் பெண்கள் தினம் கொண்டாடினால் இந்த மயிலனுக்குச் சந்தோசம்தான் பாருங்கோ. சுமார் நூறுவருடங்களுக்கு முன்பு எத்தனையோ கொடுமைகள், போராட்டங்கள், அடக்குமுறைகள், ஏற்றத்தாழ்வுகள் எனப் பல கொடுமைகளால்தான் பெண்கள் விழிப்படைந்து கொதித்தெழுந்து இந்தத் தினத்தை வென்றெடுத்து வருடத்தில் ஒருநாளாவது சுதந்திரம் என்று கொண்டாடி வருகிறார்கள் என இந்த மயிலனின் அறிவு.

உலகில் பல நாடுகளில் அன்றைய தினம் விடுமுறையாக இருக்க இன்னும் சில நாடுகளில் விடுமுறை இல்லை. காரணம் அந்த நாடுகளின் பெண்கள் விழிப்படையவில்லை. அல்லது விழிபடையாமல் வைத்திருப்பதுதான்

அந்த நாடுகளின் நோக்கம். அடுத்தது சமயம், சாத்திரம், கலாச்சாரம், பண்பாடு என முதன்மைப்படுத்திப் பெண்களை அடிமையாக வைத்திருப்பதே இவர்களின் நோக்கமாகும். கல்வி, பொருளாதாரம் கணனித்துறைகளில் முன்னேறினாலும் அவர்களை உயர் பதவிகளில் அமர்த்துவது கிடையாது.

குறிப்பாக ஆப்கானிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளில் பெண்களின் அடக்குமுறை பற்றி ஒரு பட்டியலே உள்ளது பாருங்கோ. கல்வி, உயர்கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல், குடும்பம் என சம வாய்ப்புகள் கிடையாது. வாழ்நாள் முழுவதும் குழந்தைகளைப் பெற்றெடுப்பதும், பிள்ளைப்பராமரிப்பு, அடிமைகளாகக் கிடந்து வீட்டுவேலைகளைச் செய்வதே இவர்களின் தலைவிதியாக உள்ளது. வளர்ந்த நாடுகளில் இப்பிரச்சனைகள் குறைவாக இருந்தாலும் இவர்களுக்குச் சரிநிகரான உரிமைகள் இன்றும் மறுக்கப்பட்டு வருவதையே காண்கிறான் இந்த மயிலன். எனவே இப்பிரச்சனைகள் குறைய கல்வி, ஆளுமை, முயற்சி, அரசியல் முன்னேற்றங்கள் இன்னும் பெண்களுக்குத் தேவை என்றுதான் இந்த மயிலன் எண்ணுகிறான் பாருங்கோ..

நமது தாய்நாட்டில் இன்றும் படுமோசமான அடக்குமுறைகள் இருந்துகொண்டே வருகின்றது. படித்தவர்-படிக்காதவதவர் என்ற வேறுபாடில்லாமல் இன்றும் அனைத்துக் குடும்பங்களிலும் பெரும் பிரச்சனைதான். சாதியம், சமயம், பிரதேசம், கல்வி, நிறம், தொழில், கலாச்சாரம், அரசியல்,சீதனம் எனப் பல வழிகளிலும் சிறுமைப்படுத்தி பெண்கள் அடிமைத்தனத்தில் இருந்து மீளமுடியாமல் தவிக்கின்றனர். இது நமது தமிழ்ச் சமூகத்துக்கு ஒரு சாபக்கேடு என்றுதான் இந்த மயிலன் எண்ணுகிறான்.

இன்று நம்நாட்டில் சிறு குழந்தைகள் முதல் வயதுபோன மூதாட்டிவரை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகிறார்கள். குடும்ப உறவுகளாலும் பாலியல் கொடுமைக் குள்ளாகின்றனர். பாலியல் கொலைகள்,தற்கொலைகள் அதிகரித்து வருகின்றனபாலியல் அடிமைகளாக பல அரசியல் வாதிகளும் உயர் பதவிகள் வகிப்போரும் இன்றும் வைத்திருக் கிறார்கள். நாட்டில் வறுமை என வெளிநாடுகளுக்கு குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை எனச்சென்றால் அங்கும் பாலியல் கொடுமைகள் நிறையவே அரங்கேறி வருகின்றன. இன்னும் பல பெண்கள் பாலியல் அடிமைகளாக பிறநாட்டவருக்கு விற்பனை செய்யப்பட்டும் இருக்கிறார்கள் பாருங்கோவன்.

பெண்கள் முன்னேறிவிட்டார்கள் என்று பல ஊடகங்களும் பலரும் புலம்பி வந்தாலும் எங்கும் பெண்கள் அடிமைத்தனத்திலிருந்து இன்னும் விடுபடவில்லை என்றுதான் இந்த மயிலன் கூறுகின்றான். நமது நாட்டில

இன்று எத்தனை ஆயிரம் சிறுமிகள் வறுமைகாரணமாக பாடசாலை செல்லவில்லை. சிறுமிகள் முதல் பெண்கள் பாலியல் தொழிலிலும் ஈடுபடுகிறார்கள் என்று இந்த மயிலனுக்குச் செய்தி கிடைத்துள்ளது. முன்னாள் போராளிகள் வறுமையால் வாழமுடியால் தவிக்கிறார்கள். கணவன்மாரை இழந்து பெண்தலைமைத்துவத்தில் பல ஆயிரம் பெண்கள் குடும்பத்தை நடத்தமுடியாமல் பரிதவித்து நிற்கிறார்கள். போரில் பிள்ளைகளை உறவுகளை இழந்து காணாமல் ஆக்கப்பட்டுப் போராடுகிறார்கள். என்பதை நாம் உணருகின்றோமா?..

இன்னும் சில இடங்களில் போதை வஸ்த்துக்கு அடிமையாகிய பெண்களும் உண்டு. அதைவிடக் கேவலம் பெண்களே போதைவஸ்த்துகளையும் தடைசெய்யப்பட்ட குடிவகைகளையும் விற்கிறார்களாம். பெண்களே பாலியல் நிலையங்களை நடத்துகிறார்களாம். இப்படி இவர்கள் ஈடுபட்டுச் சமூகத்தைச் சீரழிக்கும் வேலைகளில் பெண்களே செய்வது என்ன வகையில் நியாயம்.

இவர்கள் ஏன் இந்த நிலைக்கு ஆளானார்கள். ஆண்களின் ஆதிக்க வெறியா, பணவெறியா, பாலியல் வெறியா என நாம் யோசிக்க வேண்டும். பணம்!..பணம்!.. பண்ணும் ஒரே குறிதான் பாருங்கோ. சமூகத்தின் சகல மட்டத்திலும் பணம், பொருள், அரசியல், புகழ் என அலையும் கூட்டத்தினராலேயே அதிகமான சீழைிவுகள் இடம்பெறுகின்றன

மயிலன் வாழும் புலம்பெயர் நாடுகளில் தமிழ்ப்பெண்களுக்கெதிரான வன்முறைகள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன. இல்லை என்று கூறமுடியாது. கல்வி, பணம், தொழில், பாதுகாப்பு அதிகமாக இங்கு இருப்பதால் பெண்கள் ஓரளவு நல்ல நிலையில் இருக்கிறார்கள் என்பது உண்மைதான். இருந்தாலும் ஆங்காங்கே சாதிய, சமூக, சமய, நிறம், மதம், மொழி போன்ற பல வேறுபாடுகளை நம்மவர் தூக்கிப்பிடித்து வளரும் பிள்ளைகளின் வாழ்வை நாசமாக்குவோரும் உண்டுதான் பாருங்கோ. பல சம்பவங்களை இந்த மயிலன் கண்டும் அறிந்தும் இருக்கிறான்.

எல்லாச் சமூகங்களிலும் பெண்களுக்கு எதிரான நிலைப்பாடுகள் உண்டுதான். பொருளாதார வசதிகளைப் பொறுத்து குறைந்து-கூடிக்காணப்படுவதுதான் உண்மையாகும். பெண்கள் கல்வியில், பொருளாதாரத்தில், அரசியலில் உழைப்பில், அறிவியலில, கணனி, தொழில், விளையாட்டில் எனப் பல துறைகளிலும் இன்னும்..இன்னும் முன்னேறினால்தான் அவர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபடமுடியும் என்பதே இந்த மயிலனின் கருத்தாகும். அதற்கு ஆண்கள் சமூகமும் அரசும் நல்ல நடவடிக்கை எடுத்தால்தான் அவர்கள் முன்னேறமுடியும். இல்லையேல் வருடாவருடம் வரும் திருவிழாக்கள் போல் இந்தப் பெண்கள் தினமும் வந்து போகும்.. அப்ப இந்த மயிலனும் வந்து போவான். நன்றி!..வணக்கம்!..

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| சி | த் | தி | ரை |
| த் | ல் | க | ப |
| தி | த் | அ | ட் |
| ம | ட் | டி | டு |

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | க | ளி | ர் | தி | ன | ம் |
| ன் | ன | லா | ர் | டா | ட் | க |
| னா | வு | த | க | ட் | ட | ம் |
| ர் | ஒ | மு | ம் | ர | க | அ |
| வ | டி | ட் | வ | பு | ன | ல் |
| ல | ய | டை | உ | ப் | பு | லி |
| பு | ல் | ம் | க | கா | த | ல் |

# சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 9 | 1 | **7** | 8 | **3** | 5 | **6** |
| 8 | 6 | 5 | 3 | **4** | **9** | **7** | **2** | 1 |
| **1** | 7 | 3 | **2** | 5 | 6 | 9 | **4** | 8 |
| 6 | 1 | **7** | 8 | 3 | 2 | 4 | 9 | 5 |
| 9 | 3 | 2 | **5** | 6 | **4** | 1 | **8** | 7 |
| 5 | **8** | **4** | 9 | 1 | 7 | 2 | **6** | 3 |
| **3** | 9 | 8 | 7 | 2 | **5** | 6 | 1 | **4** |
| **2** | 4 | 1 | 6 | **8** | 3 | 5 | **7** | 9 |
| 7 | 5 | **6** | 4 | 9 | **1** | 8 | 3 | 2 |




**காலையில் பாகற்காய் ஜூஸ் குடிப்பதால் ஏற்படும் நன்மைகள் என்னென்ன?**

பாகற்காயில் எண்ணற்ற பயன்கள் அடங்கியுள்ளது. இவை கசப்பு சுவை மிகுந்ததாக இருந்தாலும் கூட உடலுக்கு பல்வேறு நன்மைகளை அளிக்க கூடிய உணவாக இருக்கிறது பாகற்காய். இதில், ஆன்டிஆக்ஸிடன்ட்கள் மற்றும் மினரல்கள் பாகற்காயை ஆரோக்கியமான ஒன்றாக வைத்திருக்கின்றன. வைட்டமின் சி, இரும்பு, மெக்னீசியம், பொட்டாசியம், கால்சியம், பீட்டா கரோட்டின் மற்றும் ∴பைபர் போன்ற முக்கிய ஊட்டச்சத்துக்களின் பவர் ஹவுசாக இருக்கிறது பாகற்காய்.

நாள்பட்ட நீரிழிவு, மலச்சிக்கல், இருமல், ஆஸ்துமா உள்ளிட்ட பல கோளாறுகளுக்கு சிறந்த மருந்தாக இருக்கிறது.

அதிலும், பாகற்காயில் ஜூஸ் குடிப்பதால் உடலுக்கு பலவிதமான நன்மைகள் கிடைக்கிறது. ரத்த சர்க்கரையை கட்டுப்படுத்துவதில் பாகற்காய் பெரும்பங்கு வகிப்பது ஆய்வுகள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளன. காலையில் பாகற்காய் ஜூஸ் குடிப்பதால் ஏற்படும் நன்மைகள் என்னென்ன?எனவே ரத்தத்தில் குளுக்கோஸ் அளவை குறைக்க வேண்டிய அவசியம் உள்ள நீரிழிவு நோயாளிகள் பாகற்காய் ஜூஸை அருந்துவது மிகவும் நன்மை அளிக்கும்.

இதில், பாகற்காய் ஜூஸை சீரான இடைவெளியில் குடித்து வருவது புற்றுநோய் செல்கள் பெருக்கத்தை கட்டுப்படுத்தி கட்டி உருவாவதை நிறுத்துகிறது.

மார்பக, பெருங்குடல் மற்றும் புரோஸ்டேட் புற்றுநோய் ஆபத்தும் இதன் மூலம் கணிசமாக குறைகிறது. குறைவான கலோரி மற்றும் ∴பைபர் சத்து நிறைந்திருப்பதால் பாகற்காய் ஜூஸ் அருந்துவது எடை இழப்பிற்கு உதவுகிறது.




## முருங்கை கீரையின் மருத்துவ குணங்கள்!

1-முருங்கை மரத்தை பொறுத்த வரை முருங்கைக்காய், முருங்கைப் பூ, முருங்கைக்கீரை இவை அற்புதமான மருந்துப் பொருளாகும். இதில் விட்டமின் ஏ, பி, சி சத்துக்களும், சுண்ணாம்புச்சத்து, புரதம், இரும்பு, கந்தகம், குளோரின், தாமிரம், கல்சியம், மக்னீஷியம் போன்ற சத்துக்களும் உள்ளன.

2-முருங்கைக்கீரையோடு, பூண்டு, மஞ்சள், உப்பு, மிளகு சேர்த்து அரைத்து உண்டால் நாய்க்கடி குணமாகும். முருங்கைக்கீரையை வேகவைத்து அதன் சாற்றை குடித்து வந்தால் உடல் சூடு தணியும்.

3-வெப்பத்தின் காரணமாக உடலில் ஏற்படும் மலசிக்கல் நீங்கும். முருங்கை இலையை எடுத்துவிட்டு காம்புகளை நறுக்கி மிளகு ரசம் வைத்து சாப்பாட்டுடன் சேர்த்து உண்டு வந்தால் கை, கால் உடம்பின் வலிகள் யாவும் நீங்கும்.

4-முருங்கை இலைகளில் இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து ஆகியவை இருக்கின்றது.

5-முருங்கை இலைகளை நெய்யில் வதக்கி சாப்பிட்டால் ரத்த சோகை உள்ளவர்களின் உடம்பில் நல்ல ரத்தம் ஊறும். பல் கெட்டியாகும். முடி நீண்டு வளரும். நரை முடி குறையும். தோல் வியாதிகள் நீங்கும்.

6-முருங்கைக்கீரை மலச்சிக்கல், வயிற்றுப் புண், கண் நோய் ஆகியவற்றுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது.

7-வாரத்தில் ஒருமுறையோ இரண்டு முறையோ முருங்கைக்கீரையை உணவாக உபயோகித்தால் ரத்தமும், சிறுநீரும் சுத்தம் அடைகின்றன. வாய்ப்புண் வராதபடி பாதுகாப்பு உண்டாகிறது.

8-முருங்கைக்கீரை சூப் மூட்டு வலியையும் போக்க வல்லது. கர்ப்பப்பையின் குறைகளை போக்கி கருத்தரிப்பதை ஊக்குவித்து பிரசவத்தை துரிதப்படுத்தும்.

9-முருங்கை இலையை கொண்டு தயாரிக்கப்படும் பதார்த்தம், தாய்ப்பால் சுரப்பதை அதிகப்படுத்தும்.

# புலம்பெயர் தேசங்களிலிருந்து வரும் பணம் தாயகத்தில் செய்யும் நன்மைகள்..

ஒரே பார்வையில்..........ஆய்வு நோக்கம் உள்ளோர் பயன்படுத்தலாம்.

**(தீமைகள் சென்ற இதழில் வெளிவந்தன)**

**நன்மைகள்.**

"வெளிநாட்டுக் காசு இங்கேயுள்ள எம்மவரைச் சீரழித்து விட்டது." இப்படியொரு பிரச்சாரம் தொடர்கிறது.

ஊனை உருக்கி உயிரை ஒறுத்து எம்மவர் அனுப்பும் பணம் இங்கே என்னென்ன நன்மைகளைச் செய்கிறது பாருங்கள்.வெளிநாட்டுக் காசு பலரின் வாழ்வைச் சீரமைத்துள்ளது.

01. போர்க் காலத்தில் பட்டினிச் சாவைத் தராது நிறையப் பேரை உயிர் காத்துள்ளது.

02. போரில் ஈடுபட்ட தரப்பினரிடமிருந்து உயிர் தப்பி தென் பகுதிக்கோ வெளிநாடுகளுக்கோ சென்று வாழ உதவியது.

03. வெளிநாடு சென்ற ஒருவர் உழைத்து இன்னுமொரு உறவைத் தனது நாட்டுக்கோ வளர்ந்த ஒரு நாட்டுக்கோ எடுப்பார். ஒன்று இரண்டாகி, இரண்டு நாலாகி, நாலு எட்டாகி, எட்டுப் பதினாறாகி பெரும் புலம் பெயர்வின் ஊடாக நிறையப் பேர் உயிர் வாழ முடிந்தது.

04. உள்ளூரில் கரைசேராத குமருகள் கரைசேர்ந்து வாழ உதவியது.

05. இல்லாத குடும்பமொன்றின் நன்மை ,தீமைகள் ஒப்பேற முடிந்தது.

06. பல இடங்களில் பரம்பரை வறுமை ஒழிந்து பல சமூகப் புறக்கணிப்புகளிலிருந்து விடுபட இப் பணம் உதவியது.

07. ஊரில் இருந்த பரம்பரைப் பணக்காரர்களைப் புதுப் பணக்காரர்கள் பின்தள்ளி விட்டார்கள்.பணம் பரவலாகிப் பணச் சுற்றோட்டம் அதிகரித்தது.

08. பணம் இல்லாமல் படிக்க முடியாத தலைமுறைகள் பல அற்றுப் போனது. கல்விச் செல்வம் பெருகியது.

09. பொம்பிளை வடிவா இருந்தாப் போதும். சீதன பாதனம் வேண்டாம். அழகை மட்டும் சீதனமாகக் கொண்டு வெளிநாடு சென்று தாமும் வாழ்ந்து குடும்பங்களையும் பெண்கள் வாழ வைத்தார்கள்.

10. உள்ளூரில் பரம்பரை வறுமையில் வாழ்ந்த குடும்பங்களின் அடிப்படைத் தேவைகள் பல நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டன. உதாரணம்- கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தால் 30 குடும்பங்களுக்குத் தரமான வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டது.

11. கொட்டில் கோயில்கள் கூட நல்ல கோயில்களாகக் கட்டப்பட்டு ஆன்மீகம் சிறக்க வழியேற்பட்டது.

12. சைவக் கோயில் குருக்களின் குடும்பங்கள் பொருளாதார வளத்துடன் வாழ வழியேற்பட்டது.

13. கொட்டில்களிலும், பழைமையடைந்த கட்டிடங்களிலும் இருந்த சனசமூக நிலையங்கள் பெரிய கட்டிடங்களையும் கலை அரங்குகளையும் கண்டன.
14. பலருக்கு 3 வேளை உணவு கிடைப்பதே கனவாக இருந்த காலம் மலையேறிப் போனது.போசாக்கான உணவு பலருக்குக் கிடைக்கும் நிலையேற்பட்டது.
15. அரசாங்கத்தால் போதுமான பௌதீக வளங்கள் வழங்கப்படாத ஏராளம் பாடசாலைகள் பழைய மாணவர்களின் நிதி வளத்தால் உயர் வசதியுடையவையாக நிமிர்ந்தன.
16. பரம்பரையாகக் காணி பூமியற்ற மக்கள் பலர் நில உடமை, தரமான வீட்டு வசதியுடன் வாழ்கின்றனர்.
17. யூன்,யூலை மாதங்களில் உறவுகள் தாயகம் வரும் போது கொண்டாட்டங்களால் உறவுகள் அன்பில் திழைப்பார்கள். அன்பளிப்புகளும் கிடைக்கும். பணச் சுற்றோட்டமும் நிறையவே நடக்கும்.
18. ஊரை விட்டுத் தூர ஊர் தெரியாத மக்கள் கொழும்பு பார்த்ததும், வெளிநாடுகள் பல போய் வந்ததும் சாதாரணமாகியது.
19. சைக்கிள் பணக்காரப் பொருளாக இருந்த காலம் மலையேறியது. மோட்டார் சைக்கிள், கார், வான் என்பன பரவலாக வந்தது.
20. வறுமையால் வாழ்வில் இருந்த பண்பாட்டுக் குறைபாடுகள் பல நீங்கி சமூகத் திருத்தங்களும் ஏற்பட்டன.
21. சொந்த நிலமற்ற காரணத்தால் நிலஉடைமையாளர்களுக்குச் சேவகம் செய்த நிலமானியச் சமூக அமைப்பு பெருமளவு தகர்ந்தது. சமூக உயர்வு பரவலாக நிகழ்ந்தது.
22. போர் தந்த அழிவிலிருந்து மீண்டெழ அரசாங்கம் தான் உதவ வேண்டுமென்ற தேவை பெருமளவுக்கு அற்றுப் போனது. சுயமாகவே மீண்டெழுந்தார்கள்.
23. மனித வாழ்வை மகிழ்ச்சியாகக் கழிக்கப் புதுப்புது சடங்குகள் உருவாகி கலகலப்பான வாழ்க்கை முறை உருவாகியது.
24. படம் எடுக்கும் கமெரா வைத்திருப்போரைப் பணக்காரராகப் பார்த்த காலம் விடை பெற்றது. கமெரா,கணனி, லப்ரொப், ஐபோன் எல்லாமே சாதாரணமாகியது.
25. தெற்காசிய நாடுகள் உட்பட சர்வதேசம் தொடர்பான காண்கை அறிவு, கேட்டறிவு பெருகியது.
26. தமிழர்கள் 1983 யூலை இனவன்முறையால் தென்பகுதியை விட்டு தாயகத்துக்கு ஓடினார்கள். புலம்பெயர் தேசப் பணத்தால் கொழும்பு போன்ற இடங்களில் சிங்கள மக்கள் பலர் பெரிய தொகைக்குத் தமிழர்களுக்கு வீட்டை விற்று விட்டுக் கிராமத்திற்கு ஓடினார்கள்.
27. உறவுகள் வந்து போகும் போதும் ஏனைய காலங்களிலும் அகில இலங்கைச் சுற்றுலா போய்ச் சிறந்த உள ஆற்றுப்படுத்தலைப் பெறுகின்றனர்.
28. உடுத்த உடுப்புக்கு மாற்று உடுப்பு இல்லாத வறுமை நிலை பெருமளவு ஒழிந்தது. ரகம் ரகமான ஆடைகள் பலரிடம் வந்தது.

.29. உறவுகள் வரும் போது கொண்டு வரும் பலவித இலத்திரனியல் பொருள்களால் இங்குள்ளோர் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது.
30. அனைத்து வங்கிகளும் நிதிக் கம்பனிகளும் சேவை நிறுவனங்களும் இங்கு கிளைகள் அமைத்தன. இதனால் பணச் சுற்றோட்டம் கூடியது.
31. பிஸ்ஸா, கேஎவ்சி, பேர்கர் போன்ற வெளிநாட்டு உணவுகளைச் சுவைக்கும் நிலையும் கணிசமானோருக்கு வந்தது.
32. ஒரு குடும்பத்திற்கு இடர் வந்தால் பல குடும்பங்கள் சேர்ந்து உதவி செய்யும் சகோதரத்துவம் வளர்ந்தது.
33. கொவிட் -19 பெருந்தொற்றுநோய், 2004 சுனாமி போன்ற பேரிடர்களின் போது தாயகத்திலுள்ளோருக்கு நிறைந்த உதவிகள் வழங்கப்பட்டன.
34. வடக்கிலிருக்கும் வசதி படைத்தோர் பலர் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலுள்ள நலிவுற்றோருக்குத் தொடர்ந்தும் உதவும் நிலை ஏற்பட்டது.
35. புதிய புதிய முதலீடுகள ஊடாக வேலை வாய்ப்புகள், வருமானம் உழைக்கும் நிலை என்பன ஏற்பட்டது.
36. கொள்வனவுச் சக்தியுள்ள மக்கள் கூட்டத்தினரால் புதுப்புது வகையான வியாபாரங்கள் எழுச்சி பெற்றன. உதாரணம்- பேசியல், வீடியோ போட்டோ, சேப்பிறைஸ் கிவ்ற்
37. தரைப்பாதை தடைப்பட்ட காலத்தில் கப்பல், விமானம் ஆகியவற்றில் பயணம் செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது.
38. போரினால் பாதிக்கப்பட்ட நலிவுற்றோர்களான மாற்றுத் திறனாளிகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மூத்தோர் , ஆதரவற்ற பிள்ளைகள் ஆகியோருக்கு நிறைந்த உதவிகள் வழங்கப்பட்டன.
39. என்ன இடர் வந்தாலும் வெளிநாட்டிலுள்ள உறவுகள் கைகொடுப்பார்கள் நாம் வீழ்ந்து விட மாட்டோமென்ற தன்னம்பிக்கையுள்ள மக்கள் கூட்டம் இங்கே வாழ்ந்து வருகின்றது.
40. புலம்பெயர் தேசங்களில் கற்ற நுட்பங்களை உபகரணங்களைத் தாய் நிலத்தில் பிரயோகித்த போது இங்கு முன்னேற்றங்கள் பல ஏற்பட்டன.

நண்பர்களே!..
வெளிநாட்டிலிருந்து இங்கு அனுப்பும் பணம் எம்மவர்களுக்குச் செய்யும் நன்மைகள் தொடர்பாக என்னால் உணர்ந்தவற்றை பட்டியல் இட்டுள்ளேன். குறிப்பிடாதவையும் இருக்கலாம். தெரிந்தால் குறிப்பிடுங்கள்.

**தொகுப்பு... வேதநாயகம் தபேந்திரன்**
**வடமராட்சி - சிறீலங்கா..**

# கடந்த 10 ஆண்டுகளில், ஒரு குடும்பத்தின் நிதி நிலைமை சீரழிவதற்கான மிக முதன்மையான சில காரணங்கள்...

1. குடும்பத்தில் உள்ள அனைவரின் கைகளில் தவழும் தொடுதிரைக் கைபேசிகள்...
2. சமூக மதிப்பிற்காக மேற்கொள்ளப்படும் விடுமுறை சுற்றுலாக்கள்...
3. வாகனங்கள் மற்றும் மின்னணுப் பொருட்கள் சமூக மதிப்பின் அடையாளமாக மாறிப்போனது...
4. வீட்டில் சமைக்கப்பட்ட உணவைத் தவிர்த்து, வார இறுதி மற்றும் பிற நாட்களிலும் தேவையில்லாமல் வெளியே சாப்பிடுவதை முதன்மையாகவும், உயர்வாகவும், மகிழ்ச்சியாகவும், தங்கள் மேன்மையைப் பறைசாற்றும் வடிகாலாகவும் நினைக்கத் தொடங்கியது...
5. சீரழிந்த வாழ்க்கைமுறை - மருத்துவச் செலவுகளை அதிகரிக்கச் செய்வது...
6. சலூன்கள், பார்லர்கள் மற்றும் ஆடைகளை சமூக மதிப்பிற்கான பெரு நிறுவன தயாரிப்பினைக் (BRAND VALUE) குறியீட்டு உணர்வாக வளர்த்துக் கொண்டது...
7. ஒன்றாக நேரத்தைச் செலவழிப்பதை விட, அதிகப் பணத்தைப் பிறந்தநாள் மற்றும் ஆண்டுவிழாவை சிறப்பாக்க செலவழிப்பதன் மூலம்...
8. பிரமாண்டத் திருமணங்கள் மற்றும் குடும்ப விழாக்கள்...
9. வணிகமயமாக்கப்பட்ட உணவுகள், மருத்துவமனைகள், பள்ளிகள், பயிற்சிகள் மற்றும் கல்வி போன்றவற்றினால்...
10. தங்கள் வருமானத்தில் அனுபவிக்க இயலாததைக் குறித்த காலத்தில் - குறைந்த காலத்தில் அடைந்துவிட கடன் மற்றும் கடன் அட்டைகள் இன்றியமையாததாக மாறிவிட்டதால்.....
11. வீடு மற்றும் அலுவலகத்தின் உட்புறங்களில் பணம் செலவழித்து உள் மற்றும் வெளி அலங்காரம் செய்து குவியல் குவியலாகக் குப்பைகளைச் சேரச்செய்து அதன் மூலம் பராமரிப்புச் செலவுகளை அதிகரிக்கச் செய்வது...

நமது தேவைகளையும் வருமானத்தையும் புரிந்து கொள்ளாமல் மற்றவர்களின் வாழ்க்கை முறையை நகலெடுக்கிறோம்.
இது குறைக்கப்படாவிட்டால், அது பல ஆண்டுகள் கடந்தும் (பழக்கங்கள் மாறாததால்) நோயாக மாறி அதிக மன அழுத்தம் மற்றும் பதட்டத்திற்கு வழிவகுக்கும்.
இது சிந்திக்க விரும்புபவர்களுக்கு மிக நுட்பமான செய்தி.
நம்மில் பெரும்பாலானோருக்கு இவை பொருந்தும்.

**- படித்ததில் பிடித்தது.. பட்டறிவில் உணர்ந்தது!..**

# தமிழனின் உணவு!..

- கவி மீனா -

சோறுதான் தமிழனின் உணவு அந்த சோற்றுக்காகதான் அவனது உழைப்பு வயல் சார்ந்த பூமியும் விவசாயமும்தானே ஆதி தமிழனின் வாழ்க்கை அந்த வயலில் நெல்லு குதிர் விட்டால்தான் அவன் வாழ்வில் குதுகலம் அவனுக்கு மட்டுமா? அந்த ஊர் மக்களுக்கே பசியை போக்க அரிசி கொடுப்பவனே உயர்ந்தவனாக போற்ற பட்டான் அன்று வரப்புயர நீர் உயரும் நீர் உயர நெல் உயரும் நெல் உயர குடி உயரும் குடி உயர கோல் உயரும் கோல் உயர கோன் உயர் வான் என்பது ஔவை சொன்ன வாக்கு!

அன்று நாட்டின் செல்வம் பெருக அரசனின் பெட்டகம் வழிய ஏழைகளின் வயிறு நிரம்ப அரும் பாடு பட்டது இந்த நெல்லு வயலும் அசரிசி மணியும் அதனால் குத்தி ஆக்கி வந்த சோறும்தான் இதனால்தானே அன்று பாரதி பாடி வைத்தான் தனிமனிதனுக்கு சோறு இல்லையேல் ஜகத்தினை அழித்திடுவோம் என்று இந்த சோறுதானே உயிர் வாழ முக்கியம், உயிர் இருந்தால்தானே மிகுதி வேலை பார்கலாம்

பொழுது விடிஞ்சா ஊரிலை எப்ப உலை வைக்கிறது என்பதையே நோக்கமாக கொண்டு இருந்தவள் வீட்டிலை பெண், உலை வைத்து பானையை தொட்டு கும்பிம்பிட்டுதான் அரிசையை பானைக்குள் போடுவார்கள் காரணம் அந்த அரிசி கிடைத்ததுக்கு நன்றியும் சமைக்குற உணவை எல்லாரும் சாப்பிட்டு மகிழ்வாக சுகமாக இருக்க வேணும் என்பதுவே அதன் நோக்கமும்மாகும்

அது போலவே சாப்பிடும் போதும் கடவுளுக்கு நன்றி சொல்லி உண்பவரே அதிகம் பேரு இன்று அப்படியா நடக்குது ? உலை கொதிச்சு சோறு ஆக்கி வீட்டில் உள்ளவர்கள் வயிறு நிறைய சாப்பிட போட்டு போட்டு பரிமாறி மனம் ஆறியவள்தான் தமிழ் பெண் கறிகள் மாறி மாறி சமைக்கலாம் ஆடு கோழி மீன் மரக்கறி என்று கறிகள் மாறும் ஆனால் கண்டிப்பாக சோறு அதனுடன் இருக்கும் மதிய உணவுக்கு ஒவ்வொரு வீட்:டிலும் சோறு மாறாமல் இருக்கும்,

சில வீடுகளில் மூன்று வேளையும் சோறு சாப்பிடுபவரும் உண்டு, காலையிலே பழம் சோற்றுக்கு தண்ணி விட்டு கரைச்சு குடிப்பவரும் பழயதை உருட்டி உண்டவருமுண்டு வீட்டுக்கு வீடு வந்து பிச்சை கேட்பவன் கூட வாசலில் நின்று அம்மா தாயே பசிக்குது கொஞ்சம் சோறு போடுங்க அம்மா என்று தானே கேட்டதுண்டு பிற்சா நூடில்போடுங்க அம்மா அல்லது ஒரு துண்டு பாண் தாங்க அம்மா எனறு கேட்டதுண்டா?

காரணம் தமிழனின் உணவு சோறு தானுங்க! ஆனால் வெளிநாடு வந்த தமிழர்தான் பிற்சா என்கிறாங்க

பாஸ்ரா என்கிறாங்க பேகர் எனகிறாங்க பிறிற்ஸ் என்கிறாங்க மாறி மாறி எல்லாம் உண்ணுறாங்க, தமிழனின் கலாசாரம் மட்டுமல்ல இங்கு வந்தவர்களின் உணவு பழக்கங்களும் மாறிப் போச்சுது!

சோறும் அரிசி மா உணவுகளும் சிறுதானியங்களும் காய்கறி பழங்களும் உண்டுவந்த மனிதருக்கு அன்று கண்ட கண்ட நோய்கள் வரவில்லை வாழ்ந்து களைத்து கடைசியில் மாழ்பவர் உண்டு

சோறு அதிகம் சாப்பிட்டால் வண்டி வைபதும் சோற்று வண்டி என்று பகிடி பண்ணுவதுமுண்டு ஆனால் வெளிநாடு வந்த தமிழருக்கு கண்டதெல்லாம் திண்டு கண்ட கண்ட நோய்கள் எல்லாம் வந்து பிடித்து ஆயுளும் குறைந்தது அவலமும் நிறைந்ததுதான் உண்மை! இங்கு மதுவும் மருந்தும் உயிரை கொல்லுது!...அதுதான் உண்மை!..

---

## தவிர்க்கமுடியாத உண்மை!..

புலம்பெயந்து வாழும் எங்கள் மரணத்துக்கு பின்பு முற்றாக இலங்கை தொடர்புகள் அழிந்துவிடும் . ஏன் என்றால் நாங்கள் திருமணம் செய்ய பெண் எடுப்பதும் ,மாப்பிள்ளை எடுப்பதும் எங்களுடன் முடிவடையும் , ஊருக்கு பணம் அனுப்புவதும் எங்களுடன் முடிவடையும், இலங்கைக்கு விடுமுறையில் செல்வதும் எங்களுடன் முடிவடையும்.அப்பப்பா, அம்மப்பா ,அம்மமா ,அப்பமா ,மாமா ,மாமி என்று நேரில் போய் பார்ப்பதும், கோவில் திருவிழாக்களுக்கு போவதும் எங்களுடன் முடிவடையும்.எங்கள் ஆயுளுக்கு பின் எங்கள் பிள்ளைகள் ஏன் அங்கு போவாகள்? எம் அடுத்த சந்ததி இங்கே வாழ்க்கை துணையை தேடிக்கொள்ளும் , அங்கு பணம் அனுப்ப அவர்களுக்கு யாரும் இல்லை , போன் கதைக்க யாரும் இல்லை ,

அவர்கள் அங்கு (tour) சுற்றுலா போகும்போது எதாவது ஹோட்டலில் இருந்து நிலாவரை கிணத்தையும், கீரிமலை ,சிகிரியா எல்லாத்தையும் ரசித்துவிட்டு ஒரு வேற நாட்டுகாரர் மாதிரி மட்டும் enjoy பண்ணமுடியும். அதோடு நிறைய காசும் ஒரு நாள் விமானப்பயணம் செய்து அங்கு ஏன் போவார்கள் ? அவர்களுக்கு வரும் girl அல்லது boy friend விருபுவார்களா ? என்ன கொடுமை !!!! எங்களுடன் எங்கள் பிறந்த நாடு மறக்கப்படுகிறது... இப்போது நாங்கள் மலேசிய ,சிங்கபூர் வாழ் தமிழரை எப்படி பார்க்கிறோமோ அதைப்போல எங்கள் பேரப்பிள்ளைகள் இனி யாழ்ப்பாணத்தையும் ஒரு தமிழ் இனம் வாழும் இடமாக உலகப்படத்தில் காட்டுவார்கள் !!

**ஆக்கம் பிரகாஸ் ... ( தவிர்க்க முடியாத உண்மை)**

# தாயகச்செய்திகள் சில..

1.1.23- இலங்கையில் கடந்த 8 ஆண்டுகளில் மனிதர்கள் - யானைகள் மோதலில் 989 மனிதர்களும் 3.649 யானைகளும் இறப்பு அரச வனப்பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.
3.1.23- நாடளாவிய ரீதியில் உள்ள சிறைகளில் 13.000 கைதிகள்தான் அடைத்து வைத்திருக்கும் வசதி உண்டு. ஆனால் தற்போது 25.000 கைதிகள் சிறைகளில் இருக்கிறார்கள் என சிறைச்சாலைப் பகுதியினர் தெரிவிப்பு. கிறிஸ்மஸ் தினத்தையொட்டி 309 கைதிகளை ஜனாதிபதி மன்னிப்பளித்து விடுதலை.
5.1.23- பொருளாதார நெருக்கடியால் கடந்த வருடத்தில் மட்டும் சுமார் 4 லட்சம்பேர்வரை நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். 90 வீதமானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளனர். வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டவியலாளர்கள், விரிவுரையாளர்கள் என்போர் கடந்த 3 வருடங்களில் சமார் 6.000 பேர் நாட்டை விட்டு வெளியேறினர்.
7.1.23- மதுபானம் 55 பேரையும் புகைத்தல் 60 பேரையும் தினமும் பலி எடுப்பதாக சுகாதார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
10.1.23- வடகிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடி அலையும் உறவுகளில் இதுவரை 125 பேர் நோய்வாய்ப்பட்டு இறந்துள்ளனர்.
15.1.23- கடந்த ஆண்டு போதை குற்றச்சாட்டில் 90.744 பேர் கைது. இவர்களில் சுமார் 5.000 மாணவர்களும் சிறைகளில் இருக்கிறார்களாம்.
20.1.23- தற்போதய பொருளாதார நெருக்கடியால் நான்கில் ஒருவருக்கு உணவு இல்லை என ஐ. நா. சபையின் பொருளாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.
25.1.23- கடந்த ஆண்டில் 72.903 டெங்கு நுளம்பு நோயாளர்கள் காணப்பட்டனர். 150 பேர் வரை இறப்பு என சுகாதார அமைச்சு அறிவித்தது.
28.1.23- கடந்த ஆண்டில் 3.596 ஆட்கடத்தல் சம்பவங்கள், 497 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றதாக பொலிஸ் பகுதியினர் தெரிவிப்பு.
29.1.23- இலங்கை இராணுவத்தில் தற்போது 2.00.000 படையினர் உள்ளனர். இத்தொகை 1.35.000 ஆகக் குறைக்கப்படும் என அரச தகவல் தெரிவிப்பு.
30.1.23- 2022ம் ஆண்டில் 8.74.988 கடவுச்சீட்டுக்கள் (பாஸ்போட்) விநியோகிக்கப்பட்டது
31.1.23- நாட்டில் வாராந்தம் சுமார் 4.000 பெண்கள் மார்பகப் புற்றுநோயினால் பாதிப்பு இவர்களில் சுமார் 1000 பேர் இறப்பு என சுகாதார அமைச்சு தெரிவிப்பு.
1.2.23- 22.1.23 - 17.3.23 வரை நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நாடுமுழுவதும் 2.200 நிலையங்களில் 3.31.709 மாணவர்கள் தோற்றினார்கள்.
4.2.23- இலங்கையில் 75வது சுதந்திர தினம் 2.75 மில்லியன் ரூபா செலவில் கொண்டாடப்பட்டது.

5.2.23- யாழ் பெரியாஸ்பத்திரியில் முதன் முதலாக சிறுநீரகம் மாற்று சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றது.
8.2.23- 2022ம் ஆண்டில் புற்றுநோயால் 38.229 பேர் பாதிப்பு. ஆண்கள் 17.834 பேரும் பெண்கள் 20.395 பேரும் பாதிப்பு. மொத்தமாக 16.691 பேர் இறந்துள்ளனர். நாளாந்தம் 105 புதிய புற்றுநோயாளர்கள் அடையாளம். சிறுவர்களும் வருடாந்தம் 250 பேர்வரை இறக்கின்றனர்.
10.2.23- இலங்கையின் 75 வது சுதந்திர தினத்தையொட்டி 622 கைதிகளை மன்னிப்பளித்து ஜனாதிபதி விடுதலை செய்தார்.
12.2.23- இந்திய அரசு இலங்கைக்கு 50 பஸ் வண்டிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.
15.2.23- உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய பாதுகாப்பற்ற சுமார் 7 லட்சம் வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளதாக மோட்டார் திணைக்கம் தெரிவித்துள்ளது. தற்போது இலங்கையில் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்போர் 1 கோடி 27 லட்சம்பேர். இவர்களில் பெண்கள் 11.22.418 பேர். கனரக வாகனங்கள் 2.082 பெண்கள் அனுமதிப்பத்திரம் வைத்திருக்கிறார்கள். ஆணையாளர் தெரிவிப்பு.
-18.2.23- கடந்த ஆண்டில் போதைப்பொருள் கடத்தலில் 91.384 பேர் கைது.
20.2.23- வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நீதி கோரிய போராட்டம் 6 ஆண்டுகள் நிறைவுபெற்றும் போராட்டம் தொடர்கின்றது.
22.2.23- இலங்கையில் 4 பேருக்கு ஒருவர் என்ற கணக்கில் தற்போது நீரழிவு நோய் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.
23.2.23- 2022ம் ஆண்டில் பொருளாதார நெருக்கடியால் சுமார் 5 லட்டசம் பேர் வேலைகளை இழந்துள்ளனர்.
25.2.23- பொருளாதார நெருக்கடியால் கடந்த ஆண்டில் இலங்கையில் சமார் 5 லட்சம்பேர் வேலை இழந்துள்ளனர்.
1.3.23- இலங்கையில் 15 வீதமான பெண்களும் 6.3 வீதமான ஆண்களும் உடற்பருமன் அளவுக்கு அதிகமாக உள்ளனர் என சுகாதாரப்பகுதியினர் அறிவித்துள்ளனர்.
2.3.23- தற்போது நாட்டில் சுமார் 3.50.000 சிறுவர்கள் பாதுகாப்பற்ற முறையில் வாழ்கிறார்கள் என சிறுவர் பாதுகாப்பு பணிமனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
4.3.23- இலங்கையில் தற்போது சுமார் 63 லட்சம் மக்கள் (28 வீத மக்கள்) கடுமையான உணவுப்பற்றாக் குறையை எதிர்கொண்டிருக்கிறார்கள் என உணவு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.
5.3.23- கச்சதீவு அந்தோனியார் கோவில் வருடாந்த உற்சவம் பங்குனி 3, 4, 5ம் திகதிகளில் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. இந்தியா - இலங்கை பக்தர்கள் சுமார் 5.000 பேர்வரை கூடி வழிபட்டனர். இலங்கை அரசு சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டிருந்தது.

# உலகச் செய்திகள் சில...

1.1.23- ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் உரிமை அமைப்பிலிருந்து ஈரான்நாட்டை வெளியேற்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
3.1.23- வறுமை, பொருளாதார நெருக்கடி இந்தியாவில் தினசரி 115 கூலித்தொழிலாளர்கள் தற்கொலை. சென்ற ஆண்டில் 1.64.033 பேர் தற்கொலை.
5.1.23- ஆப்கானிஸ்தானில் பெண்கள் உயர்கல்வி பெறவோ பல்கலைக் கழகங்களில் படிக்கவோ தொண்டு நிறுவனங்களில் பணியாற்றவோ தலிபான் அரசு தடைவிதித்துள்ளது.
7.1.23- அமெரிக்காவில் வரலாறு காணாத பனிப்பொழிவு 25 கோடி மக்கள் பாதிப்பு.
9.1.23- சீனாவில் ஒரே நாளில் சுமார் 50 லட்சம் பேருக்குக் கோரோனா நோய்.
11.1.23 வரை நாடுமுழுவதும் 900 மில்லியன் பேர் பாதிப்பு 60.000 பேர் பலி.
10.1.23- சீனாவின் மக்கள் தொகை தற்போது 1.418 பில்லியனாகும். 2021ம் ஆண்டைவிட 8.50.000 பேர் குறைவடைந்து வீழ்ச்சி கண்டுள்ளது.
25.1.23- ஆப்கானிஸ்தானில் கடும்பனி 250 பேர்வரை இறந்துள்ளனர்.
27.1.23- அமெரிக்காவில் கடந்த ஆண்டு மட்டும் 647 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன. 4.400 பேர்வரை பலியாகியுள்ளனர்.
31.1.23- கூகிள், மைக்கிரோசொப் நிறுவனங்களில் ஆட்குறைப்பு 80.000 இந்தியர்கள் பாதிப்பு.
1.2.23- பாக்கிஸ்தானில் மசூதி ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 100 பேர்வரை பலி. 200 பேர்வரை காயம்.
5.2.23- போர், உள்நாட்டுப்போர், இன, மதக் கலவரங்களால் சென்ற ஆண்டில் மட்டும் சுமார் 10 கோடிபேர் இடம் பெயர்வு. ஐ.நா.சபை தெரிவித்துள்ளது.
10.2.23- உலகின் கடல் நீர் மட்டம் அதிகரிப்பு இதனால் கடலோர கிராமங்கள், நகரங்களில் வசிக்கும் சுமார் 90 கோடி மக்கள் பாதிப்படைவார்கள் என ஐ.நா. சபை அறிவித்துள்ளது.
17.2.23- ஐரோப்பிய நாடுகளை நோக்கி கடல்வழியே வந்த அகதிகள் படகு லிபியா அருகே விபத்துக்குள்ளானதில் பெண்கள் சிறுவர்கள் உட்பட 75 பேர் பலி. இத்தாலி கடற்பரப்பில் இன்னொரு கப்பல் விபத்தில் 60 அகதிகள் பலி.
20.2.23- உலகில் ஒவ்வொரு 2 நிமிடத்திலும் ஒரு பெண் இறப்பு கர்ப்பகாலம், பிரசவ காலத்தில் ஏற்படும் சிக்கல்களால். 2022ம் ஆண்டில் நாள் ஒன்றிற்கு 800 பேர் மொத்தம் 2.87.000 பெண்கள் இறப்பு ஐ.நா. சுகாதார அமைப்பு அறிவிப்பு.
25.2.23- கிறீஸ்லாந்து நாட்டில் ஏற்பட்ட ரயில் விபத்தில் 50 பேர்பலி100 பேர் காயம்
27.2.23- ஈரானில் மதவிவகாரங்களால் சுமார் 650 பள்ளி மாணவர்களுக்கு விஷம் கொடுக்கப்பட்டதாக குற்றச்சாட்டு. ஈரான் அரசு இதை மறுத்துள்ளது.
28.2.23- அமெரிக்கா, கனடா நாடுகளில் கடும்பனிப்பொழிவு 100 பேர்வரை இறப்பு.

Berlin Election 2023

## தேர்தல் முடிவுகள் - ஜேர்மனி - 12.02.2023
## பேர்லின் பரதிநிதிகள்சபை

Abgeordnetenhaus Wahl Berlin - 2023 (Haus of Representatives - Berlin)

யேர்மனியிலுள்ள 16 மாநிலங்களில் ஒன்றான பேர்ளின் பிரதிநிதிகள் சபையின் தேர்தல் 12.02.2023 அன்று நடைபெற்றது. இத்தேர்தலில் தற்போது யேர்மனியை ஆட்சிசெய்யும் SPD கட்சியானது தோல்வி கண்டுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான CDU கட்சி சென்றமுறையைவிட இந்த முறை 22 இடங்களை மேலதிகமாக வென்றுள்ளது.

இருப்பினும் சென்றமுறையைப் போல SPD கட்சியும் Grüne கட்சியும் linke கட்சியும் ஒன்றுசேர்ந்து மாநில பிரதிநிதிகள்சபை கூட்டரசாங்கம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மீண்டும் முதல்வராகப் பெண்மணி பிரான்சிஸ்காதான் (Franziska Giffey) வருவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் முடிவுகள்..

| கட்சி | -பெற்ற வாக்கு வீதம் | - குறைவு - கூடுதல் | - பெற்ற - ஆசனங்கள் |
|---|---|---|---|
| CDU | - 28.2% | + 10.2% | - 52 |
| SPD | - 18.4% | - 03.0% | - 34 |
| Grüne | - 18.4% | - 00.5% | - 34 |
| Linke | - 12.2% | - 01.9% | - 22 |
| A&D | - 09.1% | + 01.1% | - 17 |
| FDP | - 04.6% | - 02.5% | - 00 |
| Sonst | - 09.0% | - 03.4% | - 00 |

---

## யேர்மனிய சுகாதாரச் செய்திகள் சில..

1-வருடத்தில் சராசரியாகச் சமார் 2.70.000 பேருக்குப் பக்கவாதநோயால் பாதிக்கப்படுகிறார்களாம். (Schlagunfällen) இவர்களில் சுமார் 70.000 பேருக்கு இரண்டாவது தடவையும் இந்த நோய் வந்துள்ளதாகவும் சுகாதாரத்துறையினர் அறிவித்துள்ளனர்.

2-யேர்மனியில் தற்போது 100 வயதுக்குமேல் சுமார் 15.000 பேர் வாழ்கிறார்களாம். வயதானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றதாம். காரணம் உணவுப்பழக்கம், உடற்பயிற்சி, சுகாதாரவசதிகள், பழக்கவழக்கம் போன்ற காரணிகள் எனக்கூறப்பட்டுள்ளன.



# அணு ஆயுதங்களைவிட மிகவும் ஆபத்தானது??..

உலகில் அடுத்தபோர் நடக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுமானால் அது அணு ஆயுதப்போராகத்தான் இருக்கும் எனக் கருதப்படுகின்றது. இது வந்தால் எவ்வளவு அழிவுகள் இந்தப்பூமியில் அரங்கேறும் என்று நினைத்தாலே கோடிப்பயம்தான். ஆனால் அணு ஆயுதங்களை மிஞ்சிய ஒரு ஆபத்தான விஷயத்தை நாம் அனுதினமும் பயன்படுத்தி அதாவது பிளாஸ்ரிக் கழிவுகளை நீர் நிலைகளில் வீசி எறிந்துவிட்டு இலகுவாகவே சென்றுவிடுகின்றோம். ஆனால் அதன் மாபெரும் விளைவுகளை எண்ணிப்பார்க்கிறோமா?..என்றால் இல்லை என்றே பதில் கிடைக்கும்.

ஆம் இன்று அணு ஆயுதங்களைவிட ஆபத்தானதாக இந்தப் பிளாஸ்ரிக் கழிவுகள் காணப்படுகின்றன. நீர் நிலைகளிலோ அல்லது நாம் வாழும் இந்த மண்ணிலோ மிக நீண்டகாலம் அழியாமல் கிடந்து நமக்கு மகிப்பெரும் தீங்கு விளைவிப்பது என்றால் இந்தப் பிளாஸ்ரிக்தான். இன்று உணவுப்பொருட்களை வேண்டுவதும் குடிநீர், குளிர்பானங்கள்வரை அனைத்தும் பிளாஸ்ரிக் மயமாகவே மாறிவிட்டன.

ஒரு முறை பாவித்துவிட்டு நாம் வீசிச்செல்லும் பிளாஸ்ரிப் பொருட்களுக்கு அழிவே கிடையாது. அவை நாநூறு, ஐந்நூறு வருடங்கள்கூட நிலத்திலும் நீரிலும் கிடந்து மனிதருக்கு மட்டுமல்ல அனைத்து உயிரினங்களுக்கும் தீங்கு விளைவிக்கின்றன. ஆம் மண்ணில் எரிக்கப்படும் பிளாஸ்ரிக் கழிவுகளால் சுற்றுச்சூழல் மாசுபடுவதுடன் புவியைக் காக்கும் ஓசோன் படலத்தைக்கூடப் பாதிக்கும் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

குடியிருப்புகளிலும் நீர் நிலைகளிலும் நாம் அலட்சியமாக வீசிச் செல்லும் பிளாஸ்ரிக் பொருட்களால் இவற்றில் உயிர்வாழும் உயிரினங்களுக்கும் பேராபத்துத்தான். பூகோள சமநிலையைப் பேணுவதில் இந்தக் கடல், ஆறு, குளம், அருவி, பூமி போன்றவை முக்கிய பங்கு வகிக்கின்றன. இப்படி முக்கியத்துவம் வாய்ந்தவற்றிற்கு நாம் துரோகம் செய்யலாமா?..இன்று பிளாஸ்ரிக் கழிவுகளின் தாக்கத்தால் இவை மாசுபட்டு உயிரித்தின் வாழ்வுக்காலம் கேள்வியாக்கப்பட்டு வருவதை நாம் நினைத்துப்பார்க்கின்றோமா?..

இந்த நீர் நிலைகளில் ஆண்டுதோறும் தொன்கணக்கில் பிளாஸ்ரிக் கழிவுகள் கொட்டப்படுவதால் நீர் நிலைகளில் வாழும் உயிரினங்களின் அழிவுகள் பெருகி வருவதுடன்

எதிர்காலத்தில் உணவுத்தட்டுப்பாடும் பெருகும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். நீர் நிலைகளில் குப்பைகளை ஆய்வு செய்த போது பத்தில் எட்டுப் பொருட்கள் பிளாஸ்ரிக் கழிவுகளாகத்தான் காணப்படுகின்றன.

சுற்றுலா செல்லும் மனிதர்கள் பிளாஸ்ரிக் கழிவுகளைக் கண்டபடி வீசி எறிவதால் அவற்றை நீர் நிலைகளில் வாழும் உயிரினங்கள் உண்பதால் அவை விரைவாகவே செத்து மடிகின்றன. இதனால் நீர்நிலைவாழ் உயர்ச்சூழல் அமைப்பே சிதைந்து விடுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றைவிட அணு ஆயுதக்கழிவுகள், போர்த்தளபாட கழிவுகள் ,தொழிற்சாலைக் கழிவுகள், எண்ணெய்கழிவுகள்,இரசாயனக்கழிவுகள் எனப் பல்வேறு பிளாஸ்ரிக் கழிவுகளை நீர் நிலைகளில் கொட்டுவதாலும் மாபெரும் அழிவுகள் வந்து சேருகின்றன. இதனால் படிப்படியாகப் பிளாஸ்ரிப் பொருட்களுக்குத் தடைவிதிப்பதே தீர்வாக அமையும். பிளாஸ்ரிக் பாவனைக்கு மாறாக வேறு பொருட்களைப் பாவிக்க நாம் பழகிக்கொள்ள வேண்டும்.

பிளாஸ்ரிக்கு மாறாக எளிதில் மக்கக்கூடிய பொருட்களை உருவாக்க வேண்டும். பிளாஸ்ரிக் கழிவுகளை உரிய இடங்களில் பாகுபடுத்திப் போடுதல் மிக முக்கியம். கண்ட.. கண்ட இடங்களில் எறியாமல் எங்கள் வீடுகளில் எப்படிப்பாதுகாப்பாக இருக்கிறோமோ அப்படி நாம் வாழும் இந்தப் பூமியையும் நீர் நிலைகளையும் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் தலையாய கடமை எனக்கொள்வோம்.

பிளாஸ்ரிக் உற்பத்தி மற்றும் அதன் மாசுபாட்டிற்கு எதிராக அரசுகளும் கடுமையான சட்டங்களை அமுல்படுத்த வேண்டும். பிளாஸ்ரிக் பொருட்கள் உபயோகப்படுத்தலை நாம் படிப்படியாகக் குறைத்து, பின்னர் முற்றாகப் புறக்கணிப்பதன்மூலம் இது போன்ற எதிர்கால இயற்கைச் சீரழிவுகளைத் தவிர்க்கலாம். அனைத்துமே மனிதர்களாகிய நம் கைகளில்தான் தங்கியுள்ளது.

ஆவதும் மனிதனாலே?..அழிவதும் மனிதனாலே?...






# யேர்மனிய தமிழ்பெண் எழுத்தாளர்கள் விபரம்..

## தொகுப்பு சாந்தினி துரையரங்கன் -

## யேர்மனி தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்... தொடர்ச்சி - 19





**பெயர் - நிர்மலா ராஜ்சிவா**

புனைபெயர் - நிம்மி சிவா
அப்பா - பாலசுந்தரம்
அம்மா - சரோஜாதேவி
பிறந்த ஊர் -பருத்தித்துறை
கல்வி -வட இந்து மகளீர கல்லூரி
புலப்பெயர்வு - 1987 ம் ஆண்டு
வதிவிடம் -டுசில்டோர்வ், ஜெர்மனி
எழுத்துத்துறை -கவிதை, சிறுகதை
வெளியிட்ட நூல்கள்- 1) என் வானிலே - 2014 (கவிதைத் தொகுப்பு )
2) கிழிந்துபோன டயரியின் மூன்றாம் பக்கம் - 2021 ( கவிதைத் தொகுப்பு )

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் ஆண்டு 10 இல் கம்பராமாயணத்தின் ஒவ்வொரு பாடலையும் கரும்பலகையில் எழுதி அதன் பொழிப்புரையை மிகத்தெளிவாக, அழகாக கோமதி மிஸ், தனது கம்பீரக்குரலால் விளங்கப்படுத்திய போதே கவிதைக்குள் வீழ்ந்தேன். எப்போது வாசிக்க ஆரம்பித்தேன் என்றால், எல்லோரையும் போலே பாடசாலையில் இருக்கும் நூலகத்தில் அம்புலி மாமாவுடன்தான் தொடங்கியது எனலாம். தொடர்ந்து ஆனந்த விகடன், குமுதம் போன்ற சஞ்சிகைகளை, தோழியிடம். இரவலாக வாங்கிப்படிப்பேன் .தவிர ஒரு சில பத்திரிகைகள். நான் உயர்தரம் படித்துக் கொண்டிருந்த போது படித்த முதல் நாவல், சுஜாதாவின் "கொலையுதிர் காலம்" முதலில் படித்த கவிதைத் தொகுப்பு, மு.மேத்தா அவர்களுடையது. அப்போதெல்லாம் சுட்டுப்போட்டாலும் எழுத வராது.

1987இல் புலம் விட்டு ஜெர்மனி வந்தேன். இங்கு 1994 , தமிழாலயத்தில் தமிழ் ஆசிரியரானேன். 15 வருடங்கள் மாணவருடனான இனிதான , ஆரோக்கியமான பயணம்.

2011 இல் 3 வரிகளில் ஒரு கவிதையை எழுதினேன்.


"நீ தூக்கத்திலிருந்து விழிக்க வேண்டு
மென்பதற்காக தொலைந்து போகின்றன
என் ஒவ்வொரு இரவுகளும்"

நிறைய விருப்புகள், நிறையக் வாழ்த்துகள் கிடைத்தன. இவை எனக்கு இன்னும் எழுதத்தூண்டியதன. அந்த ஊக்கம் நிறைந்த வார்த்தைகளை எனதாக்கி எழுதத்தொடங்கினேன். 2011 இலிருந்து சிறு கவிதைகள் எழுத ஆரம்பித்தேன். முகநூல் அதற்கான களமானது. 2014 இல் அகநாழிகைப் பதிப்பகம் ஊடாக, "என் வானிலே" என்னும் முதல் கவிதைத் தொகுப்பாக வெளியானது. தமிழ்நாட்டிலிருந்து "உயிர்மையிலும்" ஜெர்மனியிலிருந்து "தமிழ்டைம்ஸ்" இலும் லண்டனிலிருந்து "காற்றுவெளியிலும்" பல கவிதைகள் பிரசுரமாயின. அதனைத் தொடர்ந்து சிறுகதைகள் எழுத ஆரம்பித்தேன். எனது முதல் சிறுகதை கல்கியில் பிரசுரமானது.

2020இல் கல்கி நடாத்திய சிறுகதைப் போட்டியில் எனது சிறுகதை மூன்றாம் பரிசைப் பெற்றது. அதே ஆண்டில் கொரோனா ஊரடங்கு காலத்தில் நானும் என் தோழி பாலைவன லாந்தரும் இணைந்து, உலகநாடுகள் தழுவிய 20 பெண் கவிஞர்களை உள் வாங்கி, "மனமே யுத்தம்செய்" என்ற காணொளியை வெளியிட்டோம். அதற்கான கவிதைகளை தோழி பாலைவன லாந்தர் எழுத நான் நெறியாள்கை செய்தேன். பின்னர், அதே ஆண்டு கல்கி வார இதழில் ஜெர்மனி பற்றி நான்கு வாரக் குறுந்தொடர் ஒன்றை எழுதியிருந்தேன். 2021இல் மீண்டும் 73 நெடுங்கவிதைகளும், 30க்கும் மேற்பட்ட குறுங்கவிதைகளும் அடங்கிய "கிழிந்துபோன டயரியின் மூன்றாம் பக்கம்" என்னும் இரண்டாவது கவிதைத் தொகுப்பை, யாவரும் பதிப்பகம் வெளியிட்டது. மேலும் தமிழ்நாட்டில் "கருமாண்டி ஜங்ஷன்" அமைப்பு நடாத்திய சிறுகதைப் போட்டியில் சிறந்த முதல் பத்து சிறுகதைகளுக்குள் எனது கதையும் தெரிவானது.

தற்போது 2022 இல் ஈழத்தில் "எங்கட புத்தகங்கள்" சஞ்சிகையில் "ஜெர்மனியில் வாசிப்பும், நூலகங்களும்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை நட்சத்திர விருதைப் பெற்றது. ஈழத்திலும் எங்கட புத்தகங்கள் தலைமையில் "கிழிந்து போன டயரியின் மூன்றாம் பக்கம்" கவிதைத்தொகுப்புப் பற்றிய அறிமுகவிழா ஒன்றை நிகழ்த்தியிருந்தது பெருமகிழ்ச்சி.





## திருமதி சாந்தினி துரையரங்கன் - எசன் - யேர்மனி

இலங்கையில் பண்ணாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யேர்மனி - எசன் நகரில் வசித்து வருபவருமான திருமதி சாந்தினி துரையரங்கன் அவர்கள் பிறந்த திகதி தாயகம் பண்ணாகம் ஊரைச் சேர்ந்த திரு, திருமதி கண்மணி - வாமதேவன் தம்பதிகளின் புதல்வியும் திரு துரையரங்கனின் அன்பு மனைவியும் செல்வன் நகுல் அவர்களின் பாசமிகு தாயாருமாவர்.

யாழ்- பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்ற இவர் யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பட்டாதாரிப் படிப்பையும் நிறைவு செய்திருக்கிறார். யாழ் சைவபரிபாலன சபை நடாத்திய சைவசித்தாந்த பண்டிதர், இளம் சைவப்புலவர் பரீட்சையில் சித்தியடைச்திருக்கிறார். நாட்டின் போர்ச்சுழல் காரணமாக 2005ம் ஆண்டில் இடம்பெயர்ந்து யேர்மனியில் வாழ்ந்து வருகின்றார்.

யேர்மனி - எசன் நகரில் வசித்துவரும் இவர் எசன்நகர தமிழ்மொழிச்சேவை பாடசாலையில் சுமார் 18 வருடங்களாக ஆசிரியராகக் கடமையாற்றிவருகிறார். அதுமட்டுமல்லாமல் "கனகசபை கலாலய நாட்டியப் பள்ளியின்" அதிபராகவும் கடந்த 16 வருடங்களாக கடமையாற்றி நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு நடனம் பயிற்றுவித்துக் கொண்டிருக்கிறார். யேர்மனியின் பல இடங்களில் இவரின் மாணவர்களின் நடன நிகழ்வுகள் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

எசன் தமிழ்மொழிச்சேவை கலாச்சார மன்றப் பாடசாலையில் தமிழ் போதிப்பதுடன் நடனம், சங்கீதம், நாடகம், வில்லிசை, விளையாட்டு எனப் பல துறைகளில் தனது அரும்பெரும் சேவைகளைச் செய்து வருகின்றார். இப்பாடசாலையின் பல ஆண்டு விழாக்களின் இவரின் மாணவர்களின் திறமைகள் வெளிப்பட்டமையை நாம் பலமுறை கண்டு மகிழ்ந்திருக்கிறோம். இவை மட்டுமல்லாமல் நிகழ்ச்சித் தொகுப்பு மற்றும் மேடை அறிவிப்பு நிகழ்ச்சிகளையும் திறம்படச் செய்துமுடிக்கும் ஆற்றல்களும் இவரிடம் உண்டு.

ஒலி, ஒளி ஊடகத்துறையிலும் அதிக ஆர்வம் கொண்ட இவர் லண்டனைத் தளமாகக்கொண்டு கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக இலங்கிவரும் லண்டன் தமிழ்வானொலி மற்றும் "பாமுகம்" தொலைக்காட்சியிலும் இணைந்து நிகழ்ச்சித்தொகுப்புக்களைச் செய்துவருகின்றார். "முற்றத்து மலர்கள்" நிகழ்ச்சியை தொகுத்துவழங்கும் தொகுப்பாளராகவும் கடந்த 2019ம் ஆண்டு தொடக்கம் பணிபுரிந்து வருகின்றார். இதுவரை உலகம் வாழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலை, இலக்கியவாதிகள், கட்டுரையாளர்கள், படைப்பாளர்கள், கல்வியாளர்கள், பொதுநலச் செயற்பாட்டாளர்கள், தமிழார்வலர்கள், ஊடகவியலாளர்கள், மருத்துவவியலாளர்கள், சமயப்பெரியார்கள் எனப் பல்வேறுதரப்பினர் என 168 பிரமுகர்களை நேரடியாகப் பேட்டிகண்டு, பாமுகத் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செய்து உலகிற்கு அறிமுகம்செய்து ஊடகத்துறையிலும் தனது திறமைகளை வெளிப்படுத்திவருகின்றார். இது ஒரு சாதனையாகவும் கருதலாம்.

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக யேர்மனியில் இயங்கிக்கொண்டிருக்கும் யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்துடனும் இணைந்து பல வழிகளிலும் உதவி வருவதுடன் சங்கம் எடுக்கும் அத்தனை பணிகளுக்கும் பெரும் ஆதரவு வழங்கிவருகின்றார். மண் சஞ்சிகையைப் பொறுத்த அளவில் யேர்மனியில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் எழுத்தாளப் பெண்மணிகள் இதுவரை 20 பேரை பேட்டிகண்டு தொகுத்து வெளியிட்டு அவர்களை மண் சஞ்சிகையில் அறிமுகப்படுத்தியுள்ளார். கடந்த 18 வருடங்களுக்கு மேலாக மண் சஞ்சிகையில் பல ஆக்கங்களை எழுதிவந்துள்ளார். மண் சஞ்சிகையால் நடாத்தப்பட்ட ஆண்டுவிழாக்களில் தமது மாணாவர்களைப் பயிற்றுவித்துப் பல நடன நிகழ்ச்சிகளைத் தந்து பொதுமக்களின் பாராட்டையும் பெற்றிருக்கிறார்.

தனது சொல்லும் எழுத்தும் வாழ்வியல் நடைமுறை, சமூகப்பணிகள் ஒன்றித்தித்துப் பயணிக்கும் வகையில் மனிதநேயப்பணியின் சிறப்பு அம்சமாக மண் சஞ்சிகையால் கடந்த பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் தாயக உதவும் கரங்கள் பணிக்காக வருடாவருடம் 480-00 யூரோக்களை வழங்கி வருகின்றார். இப்பணியைக் கடந்த பத்துவருடங்களாகத் தொடர்ச்சியாகச் செய்துவருகின்றார் இவரின் மனிதநேயப்பணிகளை அறியத்தருவதுடன் இச்சந்தர்ப்பத்தில் இவர் குடும்பத்தவர்களுக்கு எமது நன்றிப்பெருக்கையும் தெரிவித்து நிற்கின்றோம்!...

# Erdbeben 6.2.2023 (Earthquake in Turkey and Siriya)
# 51.000 பேரைப் பலிகொண்ட நிலநடுக்கம்... துருக்கி - சிரியா நாடுகளில் பேரனர்த்தம்...

உலகில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களான நிலநடுக்கம், மழைவெள்ளம், சூறாவளி, புயல், மண்சரிவு, கடும்வறட்சி, எரிமலை, சுனாமி போன்றனவற்றால் வருடாவருடம் பல்லாயிரம் மக்கள் மடிந்து வருகிறார்கள் என்பது வேதனையான விடையமாகும். இந்த அனர்த்தங்களில் ஒன்றான நிலநடுக்கம் துருக்கி - சிரியா நாடுகளில் 6.2.2023 அன்று 7.8 ரிச்டர் அளவில் ஏற்பட்டது. சுமார் 51.000 உயிர்கள் பலியாகிய சம்பவம் உலகை உலுக்கியுள்ளது. அதாவது கடந்த 6.2.2023 அன்று 33 மணி நேரத்தில் பல நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. மிக அதிகளவிலான தாக்கம் துருக்கிய நாட்டிலே ஏற்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

தொடர்ச்சியா 2 வாரங்களில் 11 மாகாணங்களில் 6.040 தடவைகள் பூகம்பம் பதிவாகியுள்ளன. இவற்றில் 40 பூகம்பங்கள்தான் கடுமையானவை எனப் பதிவாகியுள்ளன.அந்தநாடுகளில் தற்போது குளிர்காலம், சிரியாவில் போர்ச்சூழல் நிகழ்கையில் இந்தப்பூமி அதிர்வு வந்து மீண்டும் மாபெரும் இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது கவலைக்குரிய விடையமாகும். இன்று இரு நாடுகளிலும் பல லட்சம்பேர்வரை பாதிக்கப்பட்டு அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர். லட்சக்கணக்கானோர் கடும் பசிபட்டினியை எதிர்கொண்டிருக்கிறார்கள். பல லட்சம்பேர் வீடுகளை இழந்திருக்கிறார்கள் என ஐக்கியநாடுகள் சபை அறிவித்துள்ளது.

ஆகவே இந்தப் பூகம்பம் பற்றிய கண்ணோட்டத்தைப் பார்ப்போம் துருக்கிநாடு இந்தப் பூமி அதிர்வால் தனது அமைவிடத்திலிருந்து 3 கிலோமீட்டர் நிலம் நகர்ந்துள்ளது.இந்த நிலநடுக்கத்தால் ஒரு கிராமத்தின் நிலப்பகுதியானது இரண்டாகப் பிரிந்துள்ளன. இரு நாடுகளிலும் சுமார் 50 லட்சம் மக்கள் வீடிழந்துள்ளனர். இருநாடுகளிலும் 28 மில்லியன் மக்கள் பாதிப்பு, பல்லாயிரம்பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என உலக சுகாதார தாபனம் அறிவித்துள்ளது.துருக்கியில் 46.000 சிறுவர்களும் சிரியாவில் 24.000 சிறுவர்களும் பாதிப்பு.துருக்கி நாட்டில் 1.60.000 அடுக்குமாடிக் கட்டிடங்கள் தரைமட்டமாகின.பூகம்பம் நடைபெற்ற இடங்களிலிருந்து சுமார் 50.00.000 மக்கள் இருப்பிடங்களைவிட்டு வெளியேறியிருக்கிறார்கள்.

உணவுத்தட்டுப்பாடு கடுமையாக இருக்கும் வேளையில் தொற்று நோய்கள் என்றுமில்லாத வகையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.மாதாந்த வீட்டுவாடகை 75 - 80 இலங்கை ரூபாவாக இருந்தது பூகம்பத்திற்குப் பின்பு 5 - 6 லட்சம் ரூபாவாக உயர்ந்துவிட்டது.ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த சிரியா - துருக்கி தரைவழிப்பாதை எல்லை மீண்டும திறக்கப்பட்டு நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த 100 ஆண்டுகளில் ஐரோப்பா சந்தித்த மிகப்பெரும் மனித அழிவு எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

மீட்புப்பணியில் 32.000 துருக்கிய-சிரியா படையினரும் மீட்புப் பணியாளர்களும் 9.000 வெளிநாட்டு மீட்புப் பணியாளர்களும் கடமைபுரிந்தனர். சுமார் 70 நாடுகள் இந்தப்பூகம்பத்திற்கு உதவி செய்துள்ளன.

எமது "மண்" சஞ்சிகையின் எழுத்தாளர்கள், வாசகர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் பாதிக்கப்பட்ட இரு நாட்டு மக்களுக்கும் உதவுவதற்காக ஒரு தொகைப்பணத்தை வழங்கியிருக்கிறார்கள் என்பதும் சிறப்பான விடையமாகும். விரைவில் அப்பணம் அனுப்பப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம். விரும்பியவர்கள் எமக்கு அனுப்பி உதவலாம்..

"கண்ணால் காணாத தெய்வங்களுக்கு உதவுவதைவிட கண்ணால் காணும் அவலப்படும் மனித தெய்வங்களுக்கு உதவுவதே மேலானதாகும்"

இறந்த மனிதர்களுக்கு அஞ்சலிகளைத் தெரிவிப்போம். உயிர் தப்பியவர்களுக்கு ஆறுதல் தெரிவிப்போம். பாதிக்கப்பட்ட மனிதர்களுக்கு உதவவேண்டியது மனிதாபிபமான நம் கடமையாகும். ஆகவே முடிந்தவர்கள் உங்கள் பகுதி செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் தொண்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவலாம்.

**நிலநடுக்கம் பற்றிய சிறுகுறிப்பைப் பார்ப்போம்..**

- உலகில் இதுவரை இடம்பெற்ற நிலநடுக்கத்தின் அதிகூடிய தாக்க அளவு
  (1) 9.5 ரிச்டர் - தென்னமெரிக்கா சிலே நாடு -1960ம் ஆண்டு.
  (2) 9.2 "" - அமெரிக்கா - அலெஸ்கா -1964 ""
  (3) 9.1 "" - இந்தோனிஷியா சுமத்திரா -2004 ""
- உலகில் அதிகூடிய இயற்கை அழிவுகள் நடைபெற்ற ஆண்டுகளும் சம்பவங்களும்.. (2000 - 2021 ஆண்டுவரை)
  (1) 2019 - 440 சம்பவங்கள்
  (2) 2008 - 437 ""
  (3) 2018 - 433 ""
- உலகின் இயற்கை அழிவுகளால் அதிகூடிய மக்கள் இறப்பு..
  (1990 தொடக்கம் 2020 வரை)
  (1) 2004- சுனாமி -இந்தோனிசியா ஆசிய நாடுகள் - 2.25.841 பேர்
  (2) 2010- நிலநடுக்கம் - ஹய்டி நாடு - 2.22.570 பேர்
  (3) 1991- சூறாவளி - பங்களாதேஷ் நாடு - 1.38.366 பேர்
- உலகின் இயற்கை அழிவுகளால் அதிகூடிய சொத்துக்களுக்கு ஏற்பட்ட நட்டம்.. (1980 தொடக்கம் - 2019வரை)
  (1) அமெரிக்கா -30.8.2005 சூறாவளி - 164 பில்லியன் டொலர்கள்
  (2) அமெரிக்கா -1.9.2017 "" - 97 "" ""
  (3) அமெரிக்கா -4.5.2016 "" - 63 "" ""

# கவிதையின் சிறப்புக்கள் !..

~ பத்மாசனி மாணிக்கரத்தினம் ~

எங்கும் எதிலும் இடம்பிடிக்கும் கவிதையின் வரைவிலக்கணம் யாது என்னும் கேள்விக்கு இன்று எவராலும் உறுதியான விடையினை உரைத்திட முடியாது.மனித மனங்களில் உருவாகும் எண்ணங்கள்,அனுபவங்கள், ஆழ்ந்த கருத்துக்கள்,கற்பனைகள் என்பவற்றை அழகாய் உள்ளத்தை ஈர்க்கும் வண்ணம் உரைப்பவையே கவிதைகள் ஆகும். சொல்லொடும் பொருளொடுஞ் சுவை சேர்த்து அழகெனும் அற்புதத்தோடு இடும் படையலே கவிதை எனக் கச்சிதமாகக் கூறிடலாம். கவிதை கவிஞனின் சொந்த அனுபவம் ,அபிப்பிராயமென எதுவாகவும் அமையலாம். அங்ஙனம் என் சொந்த அபிப்பிராயத்தில் எழுந்த கவிதை ஒன்று இதோ:-

தருமமதைப் பேணிடுவீர் தாரணியில் வாழுகையில் தரும மொன்றே
வருந்துயரைப் போக்கிவிடும் வாழ்விதுவோ நிலையுமில்லை
வாழுங் காலம் இருப்பதிலே ஈந்திடுவீர் இறையன்பைப் பெற்றிடுவீர் இறப்பை
எண்ணிச்செருக்ககற்றி வாழ்ந்திடுவீர் சேருமிடம் சிறப்புறுமே சிந்திப்பீரே!

1910ஆம் ஆண்டில் "வால்ட் விட்மன்" எனும் ஆங்கிலக் கவிஞர் எழுதிய "புல்லின் இதழ்கள்" எனும் நூலே புதுக்கவிதையின் முதல் நூலாகும். கி.பி 20ஆம் நூற்றாண்டு தமிழிலக்கியத்தில் புதுக்கவிதை தோற்றம் பெற்று இன்றுவரை சிறக்கலானது. பாரதியால் எழுதப்பட்ட வசனக் கவிதைகளே தமிழில் காணும் புதுக்கவிதைக்கு முன்னோடியாக அமைந்தது. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் புதுக்கவிதையும் தன்பெரும்பங்கினை வழங்கி வருகின்றது.

புதுக்கவிதைக்கான இலக்கணமென ஏதும் வரையறுக்கப் படாததினால் தம்மைத் தாமே ஆளும் சிறப்பைப் பெற்று
வளர்ச்சி காண்கின்றன.

புதுமை செய்திடுவீர்-புவியில்
பொலிவாய்ச் செய்திடுவீர்
காலத் தேவைகளைக் -கவியில்
கனிவாய்ச் சொல்லிடுவீர். - Pathmashany Manick

புதுக்கவிதைகள் எளிய மொழி நடையிலுள்ளதால் அனைவராலும் விளங்கிக் கொள்ளக் கூடியதாகவிருக்கும். நவீன தமிழ் இலக்கியத்தின் சிறப்புக்குச் சான்றாக விளங்கும் புதுக்கவிதைகள் எளிய மொழி நடை எல்லோராலும் புரிந்து கொள்ளக் கூடியதாக அமைந்துள்ளது. அதனால் எழுதுவதற்கு இலகுவாக இருப்பதும், பேச்சுவழக்குச் சொற்களோடு ஒலிநயம் காணப்படுவது மற்றுமொரு சிறப்பம்சமாகும். ஒரு கருப்பொருளைக் காட்சியாகக் கொண்டு நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தக் கூடியதாய் புதுக்கவிதைகள் சிறப்பு பெறுகின்றன.

மடையேறிப் பாய்ந்தோடி மாமழைநீர் பாயும்
மணம்வீசும் பூக்கள் மகரந்தம் சிந்தும்
தடையின்றிக் கெண்டையதோ தண்வயலில் துள்ளும்

தகைமரை யோடுங்குவளை தானுங்கண் கவ்வும்
மரபுக்கவிதை
உலகமொழிகளுள் இன்று முதன்மையானதாகவும் தொன்மை

உலகமொழிகளுள் இன்று முதன்மையானதாகவும் தொன்மையானதுமாகவும் விளங்குவது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும்.இந்நூல் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்தது.இத்தொல்காப்பியத்தில் எழுத்து,சொல்பற்றி விளக்கும் செய்யுள்,அகம்,புறம் பற்றி விளக்கும் பாடுபொருள் பற்றியும்,யாப்பு,அணி பற்றிய விளங்கங்களை அறியும் போது மரபுக்கவிதையின் ஆழத்தையும் தொன்மையையும் அறிந்து கொள்ள முடிந்தாலும் கற்றுக் கொள்ள கடினமான பயிற்சியும் பொறுமையும் கால அவகாசமும் தேவையென்பது மறுக்க முடியாத உண்மையாகும்

தொன்று தொட்டு வரும் முறையே மரபு எனப்படும்.எழுத்து ,அசை. சீர்,தளை,அடி,என்பன செய்யுளின் உறுப்புகளைக்கொண்டு, ஓசைநயம் மாறாமல் ,மரபு இலக்கண நூல்கள் எடுத்துரைக்கும் பாவடிவங்களின் வரையறைக்கேற்ப, இயற்றப்படும் கவிதைகளே மரபுக் கவிதைகள் ஆகும்.அதனை ஐயந் திரிபறக் கற்ற வல்லமை படைத்த மரபுக் கவிஞர்களால் மட்டுமே இயற்றும் தன்மையைப் பெறலாம் என்பதில் ஐயமேதுமில்லை.

எண்ணித் துணிதல் இழிவை யொழித்திடும்
மண்ணுலக வாழ்வில் மதிப்பளிக்கும் -பண்பாய்
வள்ளுவ ருண்மை வாக்கே
உள்ளுக! நல்ல ஊக்க மென்றுமே! (மருட்பா வாயுறை வாழ்த்து)

Pathmashany Manick

ஹைக்கூ.

( குறும்பா)ஹைக்கூ என்பது ஜப்பானில் இருந்து உலகம் முழுவதும் பரவிய ஒரு குறுங்கவிதை வடிவம். பதினேழாம் நூற்றாண்டில்பாஷோ என்பவரால் புதுமெருகு கொண்டது.இதற்கென்று தனிப்பட்ட யாப்பிலக்கணம் கிடையாது. ஆனால், கட்டமைப்பும் சில கட்டுப்பாட்டு விதிகளும் உண்டு.ஹைக்கூ எனும் குறுங்கவிதைக்கு இலக்கணத்தை விடப்பொருள் தான் முக்கியம்.ஏதேனும் ஒரு விஷயம் அல்லது நிகழ்வைச் சொல்ல வேண்டும். பின்னர் அது சம்பந்தப்பட்ட மற்றொன்றைச் (உ. ம். காரணம், விளைவு..) சொல்ல வேண்டும். அது எதிர்பாராததாக இருக்க வேண்டும். உ. ம். அது அதிர்ச்சி தரலாம், மகிழ்வு தரலாம், வியப்பு தரலாம்.மூன்று வரிகளோடு ஏழு சொற்களைக் கொண்டது ஹைக்கூ.முதல்வரி- இரண்டு சொற்கள். இரண்டாம் வரி- மூன்று சொற்கள்.மூன்றாம் வரி- இரண்டு சொற்கள்.தமிழ் மொழியில் முதன்முதலில் ஹைக்கூ கவிதைகளை வடித்தவர் கவிஞர் திரு.அப்துல் ரகுமான் அவர்கள் ஆவார்

" பெயரோடு வந்த புயல்
பெயரை விட்டுச் சென்றது
வெறும் காற்றாய்"




# Tennis -Australian Open - 2023
## ரெனிஸ் அவுஸ்திரேலியா பகிரங்க போட்டி

உலகின் தலைசிறந்த விளையாட்டுக்களில் ஒன்றாக விளங்கும் ரெனிஸ் போட்டியின் இந்த ஆண்டுக்கான மிகப்பெரும் போட்டி ஆவுஸ்திரேலியாவில் இரண்டு வாரங்கள் நடைபெற்று கடந்த 29.01.2023 அன்று முடிவடைந்தது. ""கிரண்ட்ஸ்லாம்"" (Grandslam) என்று அழைக்கப்படும் இப்போட்டிதான் வருடத்தில் முதலாவதாக ஆரம்பிக்கும் போட்டியாகும். அடுத்து வருவது Franch Open, Wimbledon, US Open என்பனவாகும்.

ரெனிஸ் போட்டிகளில் இந்த நான்கு போட்டிகளுக்கும்தான் வெற்றியாளர்களுக்கு அதிகூடிய பணப்பரிசுகளும், புள்ளிகளும் வழங்கப்படுவது வழக்கமாகும். இதில் வெற்றிபெறும் ஒருவருக்கு 2.000 புள்ளிகள் வழங்கப்படும். 2023 அவுஸ்திரேலியா பகிரங்கப்போட்டியில்..

**ஆண்கள் பிரிவில்..**

இறுதிப் போட்டியில் சேர்பியா நாட்டவரான நோவாக் டியக்கோவிச்சும்(Novak Djokovic) கிறீஸ்லாந்து நாட்டவரான ஸ்ரெவானோஸ் ரிஸ்சிபாஸ் (Stefanos Tsitsipas) இருவரும் மோதியதில் நோவாக் டியக்கோவிச் 6-3, 7-6, 7-5 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்று 2000 புள்ளிகளைப் பெற்றதுடன் 29.75.000 அவுஸ். டொலரையும் வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றார். தோல்வியடைந்த ரிஸ்சிபாஸ் 1200 புள்ளிகளையும் 16.25.000 அவுஸ் . டொலர்களையும் பெற்றார்.

2023 இந்த ஆண்டு நடைபெற்ற இந்தப் போட்டிகளை மொத்தமாக 9 லட்சம் பார்வையாளர்கள் கண்டுகளித்திருக்கிறார்கள். இதுவே அவுஸ்திரேலியா ரெனிஸ் வரலாற்றில் அதிகூடிய தொகையினர் எனக்கணிப்பிடப்பட்டுள்ளது.

**பெண்கள் பிரிவில்..**

இறுதிப்போட்டியில் பெலரஸ் நாட்டைச்சேர்ந்த அயர்னா சபலென்காவும் (Aryna Sabalenka) கஸகஸஸ்தான் நாட்டைச் சேர்ந்த எலினா றைபாகினா (Elena Rybakina) மோதிக்கொண்டதில் 4-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் சபலென்கா வெற்றிபெற்றார். இவர்களுக்கும் ஆண்கள் பிரிவில் வழங்கப்பட்ட பணம் மற்றும் புள்ளிகள் வழங்கப்பட்டன.

**.அவுஸ்திரேலியா ரெனிஸ் வரலாற்றில் அதிகூடிய தடவைகள் வெற்றி பெற்ற முதல் மூன்று வீரர்கள்கள் விபரம்..**

| | | | |
|---|---|---|---|
| 1-Novak Djokovic (SRB) | -10 | தடவைகள்- | 2008, 2011, 2012, 2013, 2015, 2016, 2019, 2020, 2021, 2023 |
| 2-Roy Emerson (AUS) | -6 | "" - | 1961, 1963, 1964, 1965, 1966, 1967 |
| 3-Roger Federer (SUI) | -6 | "" - | 2004, 2006, 2007, 2010, 2017, 2018 |

.................................................................................................................................

## Under - 19 Ladies - Cricket World Cup - 2023

## இந்தியப் பெண்கள் அணி வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றது..

U-19 (Under-19) பெண்கள் உலககிண்ண கிரிக்கட் போட்டி - 19 வயதுக்குக்கீழ்.. பெண்கள் 19 வயதுக்குக்கீழ் கிரிக்கட் வரலாற்றில் முதன்முறையாக நடைபெற்றது. இப்போட்டிகள் தென்னாபிரிக்காவில் மிக விறுவிறுப்பாக நடைபெற்று முடிந்தது. 29.01.2023 அன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் இங்கிலாந்து பெண்கள்அணியும் இந்தியப் பெண்கள் அணியும் மோதிக் கொண்டதில் இந்திய பெண்கள் அணி வெற்றிபெற்று உலகக்கிண்ணத்தையும் பணப்பரிசையும் பெற்றுக்கொண்டது.

.................................................................................................................................

## Hockey World Cup - 2023

## ஜேர்மனி 17 வருடங்களின் பின்பு உலக கிண்ணத்தைப் பெற்றது..

ஆண்களுக்கான உலக ஹொக்கிப்போட்டியில் 17 வருடங்களின் பின்பு ஜேர்மனி ஆண்கள் அணி உலககிண்ணத்தைப் பெற்றது. 4 வருடங்களுக்கு ஒருதடவை நடைபெறும் இப்போட்டியானது இம்முறை இந்தியா - ஒடிசா மாகாணத்தில் விமரிசையாக நடைபெற்றது.

29.01.2023 அன்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் பெல்ஜியம் நாட்டு அணியுடன் மோதியதில் யேர்மனி வெற்றி பெற்று உலககிண்ணத்தையும் பணப்பரிசையும் பெற்றது. ஹொக்கி வரலாற்றில் ஜேர்மனியின் வெற்றியானது

இது 3வது தடவையாகும். (இதற்கு முதல் 2002, 2006 ஆண்டுகளில் வெற்றி பெற்றது)
16 நாடுகள் பங்குகொண்ட இப்போட்டிகளில முன்னர் அதிகதடவைகள் வெற்றிபெற்ற அவுஸ்திரேலியா தோல்வியடைந்தது. 3வது இடத்துக்கான போட்டியில் நெதர்லாந்து அணியும் அவுஸ்திரேலிய அணியும் மோதிக்கொண்டதில் நெதர்லாந்து அணி வெற்றிபெற்றது.
இவற்றைவிட முன்னைய காலங்களில் ஹொக்கிப் போட்டியில் ஜாம்பவான்களாகத் திகழ்ந்த இந்தியாவும் பாக்கிஸ்தானும் தோல்வி கண்டிருக்கின்றன.

........................................................................................................................................
........

## Handball - WOrld Cup
## கைப்பந்து உலககிண்ணப் போட்டி - 2023

வெற்றிக்கிண்ணத்தைப் பெற்ற டென்மார்க் அணி..
கைப்பந்து உலககிண்ணப் போட்டிகள் கடந்த 29.01.2023 அன்று முடிவடைந்தது. சுவீடன் - போலந்து நாடுகளில் நடபெற்ற தேரிவுப் போட்டிகளில் 32 நாடுகள் பங்குகொண்டன. இதன் இறுதிப்போட்டி 29.01.23 அன்று சுவீடனில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் டென்மார்க் அணியும் பிரான்ஸ் அணியும் மோதிக்கொண்டதில் 34 - 29 என்ற புள்ளி அடிப்படையில் டென்மார்க் அணி வெற்றிக்கிண்ணத்தையும் பணப்பரிசையும் பெற்றது. 3வது வெற்றி அணிக்கான போட்டியில் ஸ்பெயின் அணியும் சுவீடன் அணியும் மோதிக் மோதிக்கொண்டதில் 39 - 36 என்ற புள்ளி அடிப்படையில் ஸ்பெயின் அணி வெற்றி பெற்றது.

**மண் சஞ்சிகையின் விளையாட்டுச் செய்தியாளர்...**

........................................................................................................................................
....

## உலக மொழிகள்...

உலகில் 3000 மொழிகளுக்கு மேல் பேசப்படுகின்றன. ஆனால் 10 லட்சம்பேருக்கு மேல் பேசும் மொழிகள் மொத்தம் 160 தான். 5 கோடிபேருக்கு மேல் பேசும் மொழிகள் 31 மட்டும். சுமார் 70 கோடி பேருக்குமேல் பேசுவது சீனமொழி. 40 கோடி பேர் பேசுவது ஆங்கில மொழியாகும்..

## 578-10 யூரோ - பூகம்ப நிதி உதவி - துருக்கி + சிரியா நாடுகள்!..

## மண் சஞ்சிகை வாசகர்களின் மனிதாபிமான நிதி உதவி!..

கடந்த 06.02.2023 அன்று துருக்கி - சிரியா நாடுகளில் ஏற்பட்ட பூகம்பத்தால் சுமார் 51.000 பேர் பலியாகியதுடன் பல கோடி சொத்துக்கள் இழந்து பல லட்சம் மக்கள் அகதிகளாகியுள்ளமை அனைவருக்கும் தெரிந்த விடையமாகும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுபுரியுமாறு எம்மால் விடுக்கப்பட்ட அன்பான வேண்டுகோளை ஏற்று பல மனிதாபிமானம் படைத்த நல்ல உள்ளங்கள் தாமாகவே முன்வந்து அன்பளிப்புகளை வழங்கினார்கள். அப்படியாகச் சேர்க்கப்பட்ட பணம் ஐநூற்றி எழுபத்தெட்டு யூரோ பத்து சென்ஸ் ஆகும். இப்பணம் 09.03.2023 அன்று யேர்மனிய செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்களின்நன்றிக்கடிதம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. எமது அன்பான வேண்டுகோளை ஏற்று நிதி உதவிபுரிந்த அன்பு உள்ளங்களுக்கு எமது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்களின் விபரம்..

1- திருமதி மேரி எலிசபெத் நோபேட் - 100-00 (Arnsberg)
2- திருமதி இராஜேஸ்வரி சிவராசா - 50-00 (Duisburg)
3- திருமதி சிவதர்சினி பிராங்ளின் - 50-00 (Viersen)
4- திருமதி டொறின் மகாலிங்கம் - 50-00 (Oberhausen)
5- திருமதி தவலக்ஸ்மி தயாபரன் - 50-00 (Duisburg)
6- திரு பரராசசிங்கம் பன்னீர்ச்செல்வன்- 33-10 (London)
7- திரு ஜெகராசா ஜெயசீலன் - 25-00 (London)
8- திருமதி கலைவாணி ஏகானந்தராசா - 25-00 (Weeze)
9- திருமதி நஸ்றீனா முகமது அகீல் - 25-00 (Weeze)
10- திரு வேலும்மயிலும் சின்னையா - 25-00 (München)
11- திருமதி சாந்தினி துரையரங்கன் - 25-00 (Essen)
12- திருமதி டொனா சிவராசா - 25-00 (Karlsruhe)
13- திருமதி பரிஸ்டா மரியதாஸ் - 20-00 (Oberhausen)
14- செல்வன் சாம் சரத்பாபு - 20-00 (Oberhausen)
15- திருமதி கலா மகேந்திரம் - 15-00 (Oberhausen)
16- திருமதி லில்லிமலர் - 10-00 (Oberhausen)
17- திருமதி கெங்கா ஸ்ரான்லி - 10-00 (Erftstadt)
18- திருமதி கே .ஜெயந்தி - 10-00 (Oberhausen)
19- செல்வி இமெல்டா கமலினி - 10-00 (Oberhausen)

---

மொத்தம் - 578-10 யூரோ








Johannes + Nadja Wedding Gift !... - Van - சுற்றுலாவண்டி

**17.63.256-00 ரூபா (5.000-00 யூரோ) அன்பளிப்பு செய்த யேர்மன் தம்பதிகள்!..**
**(பதினேழு லட்சத்து அறுபத்தி மூவாயிரத்து இருநூற்றி ஐம்பத்தாறு ரூபா) ஜோகன்னாஸ் - நட்ஜா திருமண அன்பளிப்பு!..**

மண் சஞ்சிகையில் 33 வருட வரலாற்றில் மிகப்பெரும் அன்பளிப்பு!.. நாம் கேட்காமலே அள்ளித்தந்த மனிதநேயக் கொடையாளரை சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்!... இந்தத் தம்பதிகள் இருவரும் யேர்மனியர்கள்..மணமகன் ஜோகன்னாஸ் அவர்கள் சிறுவயது தொடக்கம் உயர்வகுப்புவரை எனது மகன் சிவாஸ்கருடன் ஒன்றாகப் படித்து பல்கலைக்கழக பட்டம் பெற்றவர். எங்கள் குடும்பத்தோடு நீண்டகாலம் நட்பாய் இருப்பதுடன், மண் சஞ்சிகையின் மனிதநேயப் பணிகள் பற்றியும் நன்கு அறிந்தவர்களாவர்.

ஜோகன்னாஸ் - நட்ஜா தம்பதிகளின் திருமணம் சென்றவருடம் நடைபெற்றது. இத்தம்பதிகள் தமது திருமணத்துக்கு குடும்பத்தவர்கள் மற்றும் நண்பர்களுக்கு அறிவிக்கும் போது அவர்களிடம் வேண்டிக்கொண்டது என்னவெனில் தமக்கு எந்தவித பணமோ, பரிசுகளோ அன்பளிப்பாக வழங்கத் தேவையில்லை என்றும் பண உதவிகள் அனைத்தையும் மண் சஞ்சிகையின் வங்கிக்கணக்கிற்கு அனுப்பிவைக்கும்படி வேண்டியிருந்தார்கள்.

அவரின் குடும்பத்தவர்களும், நண்பர்களும் எமது வங்கிக்கணக்கிற்கு அனுப்பி வைத்த அன்பளிப்புப் பணம் 5.000-00 யூரோவாகும். . நிதி உதவி செய்த அத்தனை மனிதநேய உள்ளங்களைப் பாராட்டுகின்றோம்.

இந்தப்பணம் ( 5.000-00 யூரோ) 18.10.2022 அன்று முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி-துணுக்காயில் இயங்கும் "ஒளிரும் வாழ்வகம்" மாற்றுத் திறனாளிகள் இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த இல்லத்தால் பராமரிக்கப்படும் மாற்றுத் திறனாளிகளை ஏற்றி இறக்க வாகனம் ஒன்று இல்லாமல் பெரும் சிரமப்பட்டனர். இதை நிவர்த்தி செய்யும் நோக்கில் இத்தொகை அவர்களுக்கு அனுப்பப்பட்டு இந்தவான் சுற்றுலாவண்டி (van) எடுக்கப்பட்டது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். மேலேயுள்ள படத்தில் காணப்படுவதுதான் அந்த வாகனமாகும்.

எத்தனை ஆயிரம் தமிழர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் மண் சஞ்சிகையின் 33 வருட வரலாற்றில் இப்படிப் பெருந்தொகை அன்பளிப்பை இதுவரை யாரும் செய்யவில்லை. இந்த அன்பளிப்பை வழங்கி மனிதநேயத்தை நிலைநாட்டி, ஒரு உத்தம மானிடராக விளங்கும் இந்த யேர்மனியத் தம்பதியினரை வாழ்த்தி வணங்குகின்றோம்....இதுபோன்ற உதவிகளைச் செய்யவிரும்புவோர் எம்முடன் தொடர்புகொண்டு உதவலாம்...
நன்றிப் பெருக்குடன்!...

ஆசிரியர் - மண் சஞ்சிகை

## ஜோகானஸ் நட்ஜா தம்பதிகள்..

வழிகாட்டி வாழ்வறம் நுழையும்
தம்பதிகள் அரும்பெரும் பணியே
அழகுற அறம் பேணிய தம்பதிகள்
நுழையும்
மகிழ்வுற வாழ்க்கைப்பயணத்தில்
மனமொன்றிய தம்பதிகளாய்
மகவுகள் பலருடன்
அன்பும் அறனும் ஒன்றித்து
பெருவாழ்வு வாழ்க வாழ்கவென
மண்ணிதழ் வாசகர்களும்
நாமும் இணைந்து
வாழ்த்துகிறோம்.வாழ்க
வாழ்க பல்லாண்டு.
தம்பதிகளின் முன்மாதிரி அறப்பணி
எமக்கும் நல்வழிகாட்டிய அறத்தொண்டு!
நன்றி.
வாழிய வாழிய பல்லாண்டு.
**வசந்தா ஜெகதீசன்.**

## உலகத் தாய்மொழி நாள்!..

கோடியில் முதன்மையாய் குவலயம்
கண்டவளே !
கொள்ளிடக் குளுமையைக் குணமதாய்க்
கொண்டவளே !
சூடிடும் மலர்களின் சுகமணம்
ஆனவளே !
சுந்தரத் தமிழெனும் சுவைமிகுத்
தேனவளே !
நாடிடும் மொழியெலாம் நமதிருக்
கண்ணொளியே !
நற்றமிழ் மொழிவளம் நலம்தரும்
இன்னுயிரே !
தேடிடும் கருத்தெலாம் திகழ்தமிழ்ப்
பொன்முகமே !
தென்னவர் தமிழ்மொழி திருவெனும்
நல்வரமே !
**பாவலர் கோவதன் - மலேசியா**

# 47 லட்சம் ரூபா அன்பளிப்பு!.. 2022ம் ஆண்டில் மட்டும்!..

வாசகர்கள், நட்புக்களின் பேருதவிகளின் பெரும் சிறப்பு!..
மண் சஞ்சிகையின் மனிதநேயப்பணிகளின் தொடர்ச்சி!..

மண் சஞ்சிகையானது தமிழ், கல்வி, கலை, இலக்கிய, எழுத்துப் பணிகளுடன் கடந்த 32 வருடங்களாகத் தாயகத்துக்கான நலிவுற்றோருக்கு உதவும் மனிதநேயப் பணிகளை மேற்கொண்டு வருவதை யாவரும் அறிவீர்கள். அந்தவகையில் சென்ற ஆண்டு (2022) மட்டும் (47.03.012-80) நாற்பத்தேழு லட்சத்து மூவாயிரத்து பன்னிரண்டு சதம் எண்பது இலங்கைப் பெறுமதியான பணம் தாயகத்திற்கு அனுப்பி வைத்தோம்.

இந்த நிதிப் பங்களிப்பை அள்ளி வழங்கிய அனைத்து மனிதநேய உள்ளங்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். மண் சஞ்சிகைமீது வைத்த அன்பு, நம்பிக்கை, நீண்டகாலப் பணிகளாலேயே இக்காரியத்தை செய்து வருகின்றோம். தொடரும் சஞ்சிகைப்பணி, சமூகப்பணி சிறக்க உங்கள் அனைவரின் ஆதரவுக்கரங்களை இறுகப்பற்றிக் கொள்கின்றோம். நன்றியுடன்.. ஆசிரியர்...
2022ம் ஆண்டில் மட்டும் தாயகத்திற்கு எமது சஞ்சிகையூடாக அனுப்பப்பட்ட பணத்தின் விபரங்கள்!..

| | யூரோ | ரூபா |
|---|---|---|
| A- மட்டக்களப்பு மாவட்டம்:- | | |
| (1) "வாசம்" சமூக மேம்பாட்டு அமைப்பு | 138-38 | - 50.000-00 |
| (2) "திருஞானசம்பந்தர் குருகுலம்" | 480-00 | -1.64.703-59 |
| B- திருகோணமலை மாவட்டம்:- | | |
| (1) "சிறீ சண்முகா" மகளிர் இல்லம் | 780-00 | -2.75.092-02 |
| (2) புனிதயோசவ் தேவாலயம் | 140-00 | - 50.355-30 |
| C- மன்னார் மாவட்டம்:- | | |
| (1) "செமாலை அன்னை இல்லம்" | 666-03 | -1.76.622-17 |
| D- யாழ் மாவட்டம்:- | | |
| (1) ஊனமுற்றோர் புனர்வாழ்வுக் சங்கம் | 413-79 | -1.52.812-70 |
| (2) தென்மராட்சி கல்வி. மேம்.அமைப்பு | 182-12 | - 40-000-00 |
| E- வவுனியா மாவட்டம்:- | | |
| (1) "அன்பகம்" சிறுவர் இல்லம் | 1200-00 | -3.55.874-11 |
| (2) "அருளகம்" சிறுவர் இல்லம் | 960-00 | - 3.30.002-75 |
| (3) "அச்சயம்" கல்வி, சமூக அமைப்பு | 138-38 | - 50.000-00 |
| F- முல்லைத்தீவு மாவட்டம்:- | | |
| (1) "நல்லாயன்" சிறுவர் இல்லம் | 644-43 | - 2.14.493-21 |
| (2) "ஒளிரும் வாழ்வகம்" | 7.209-61 | -24.93.057-05 |
| G- இரத்தினபுரி மாவட்டம்:- | | |
| (1) ஐக்கிய சமூக அமைப்பு | 970-00 | - 3.50.000-00 |

தொகுப்பு:-

| | | |
|---|---|---|
| A- மட்டக்களப்பு மாவட்டம் | 618-38 | - 2.14.703-59 |
| B- திருகோணமலை மாவட்டம் | 920-00 | - 3.25.447-32 |
| C- மன்னார் மாவட்டம் | 666-03 | - 1.76.622-17 |
| D- யாழ்ப்பாணம் மாவட்டம் | 595-91 | - 1.92.812-70 |
| E- வவுனியா மாவட்டம் | 2.298-38 | - 7.35.876-86 |
| F- முல்லைத்தீவு மாவட்டம் | 7.854-04 | - 27.07.550-26 |
| G- இரத்தினபுரி மாவட்டம் | 970-00 | - 3.50.000-00 |
| மொத்தம் | 13.922-74 | - 47.03.012-80 |

---

## மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- (முல்லைத்தீவு)
02. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவுதிருகோணமலை
03. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- மன்னார்
04. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா
05. செல்வி அனிதா ரஞ்சன் - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - மட்டக்களப்பு
06. திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா
07 திரு. Johannas Gruendler - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா
08. திருமதி பிங்கலை செந்திலன் - ஜேர்மனி - 600-00
மூன்று பிள்ளைகளின் வருடாந்த முழுச்செலவு - முல்லைத்தீவு
09 செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - கிளிநொச்சி - 150-00
10 செல்வன் பிரணவன் யோகராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 240-00

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-01-2023 + 508-89

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா ரஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen + 100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
08. செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf + 240-00
(ஆதரவற்றசிறார் ஒருவரின் வருடாந்த கல்விச்செலவு அன்பளிப்பு)

+ 820-00

......................

அன்பளிப்புகள்... +1328-89
07- திரு செ.சிவஞானம் குடும்பம் - London + 50-00

விபரம் 69ம் பக்கம்..

19 நல்லுள்ளங்கள்..துருக்கி - சிரியா பூகம்பம் அன்பளிப்பு + 578-10

......................

+ 1.956-99

| | | | |
|---|---|---|---|
| முற்பக்கப்படி | | | + 1.956-99 |
| அனுப்பியது... | | | |
| (1) "ஒளிரும் வாழ்வகம்" - துணுக்காய் | | 750-00 | |
| (2) "அன்பகம்" சிறுவர் காப்பகம் - வவுனியா | | 720-00 | |
| (3) துருக்கி-சிரியா பூகம்ப நிதி உதவி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் - யோ்மனி | | 578-10 | |
| | | ............. | |
| | | 2.048-10 | |
| மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி | | | |
| 01.01.2023 - 31.01.2023 | - 19-79 | | |
| 01.02.2023 - 28.02.2023 | - 24-69 | | |
| | ........... | | |
| | 44-48 | 44-48 | |
| | | .................. | |
| | | - 2.092-58 | - 2.092-58 |
| | | | -------------------- |
| மீதி கையிருப்பு 28.02.2023 (மேலதிகச் செலவு) | | | - 135-59 |
| | | | -------------------- |

பொன்மொழிகள்...

- நம்பிக்கை நிறைந்த ஒருவர் யாரிடமும் மண்டியிடுவதில்லை கையேந்துவதும் இல்லை.
- உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே.
- உன்னுடைய பலவீனங்களை அறிந்து கொள்ளாமல் உன்னால் பலமுள்ளவனாக மாற இயலாது.
- அவமானத்தையும் ஏளனத்தையும் சந்தித்த ஒருவன் வெகுண்டு எழும்போது உங்களால் தாங்க இயலாது..
- நீ யாரென்று ஒவ்வொருவருக்கும் கூறிக்கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லை உனது இலட்சியப் பாதையில் ஒழுங்கமாகச் சென்றாலே போதும்.

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015 T.P:- 0212060620 Fax:-0774868085 FarmNo:-0213204790 Viber:-0774868085 Mobile:-0774868085

திகதி 31/01/2023

திரு. கை.சிவராசா,

பிரதம ஆசிரியர்,

மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை,

ஜேர்மனி.

**நன்றி நவில்கிறோம்**

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், ஆதரவற்ற முதியோர், பெண்தலைமைத்துவ குடும்பங்கள், நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவின் மத்தியில் பணியாற்றி வருகிறது. அந்த வகையில் தங்களால் வழங்கிய 100,000.00 (ஒரு இலட்சம்) ரூபா நிதியினை பயன்படுத்தி பாதிக்கப்பட்ட எமது பயனாளிகளிற்கு பொங்கல் பொருட்கள் மற்றும் பொங்கல் பானை வழங்கினோம்' என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் சமூக நலன் நோக்கிய நற் சிந்தனையுடன் இத் திட்டத்தினை செயற்படுத்த நிதி அனுசரணையினை ஏற்பாடு செய்த தந்த மண்சஞ்சிகை குழுமத்தினருக்கும் எமது அமைப்பு சார்பான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி

செயலாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

www.olirumvaalvu.com olirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai

T.P:- 0212860620 FarmNo:-0213204790 Mobile:-0774868085
R: No:- MU/DS/TNK/RVSS/22/2015 Fax:-0774868085 Viber:-0774868085

திகதி-28/12/2023

வை.சிவராசா,

பிரதம ஆசிரியர்,

மண்கலை இலக்கிய சமூக சஞ்சிகை,

ஜேர்மனி.

### நன்றி நவில்கின்றோம்

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், ஆதரவற்ற முதியோர், பெண்தலைமைத்துவ குடும்பங்கள், நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவின் மத்தியில் பணியாற்றி வருகிறது. அந்த வகையில் அமரர் தம்பையா சண்முகம்பிள்ளை அவர்களின் நினைவாக பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் இணைந்து வழங்கிய 44,449.88 (நாற்பத்து நான்காயிரத்து நானூற்று நாற்பத்து ஒன்பது தசம் எண்பத்து எட்டு) ரூபா நிதியினை பயன்படுத்தி மகிழ்வு இல்லம் பிள்ளைகள், முதியோர்களிற்கு சிறந்த உணவு மற்றும் புதிய உடைகள் வழங்கினோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் அமரர் தம்பையா சண்முகம்பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். இந்நிதி அனுசரணையினை ஏற்பாடு செய்துதவிய மண்சஞ்சிகை குழுமத்தினருக்கு எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு சார்பான நன்றிகளையும் தெரிவித்துநிற்கின்றோம்.

நன்றி

செயலாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

www.olirumvaalvu.com olirumvaalvuthunukkai2012@gmail.com olirumvaalvu thunukkai

# Good Shepherd Children Home

Mullaitivu Road,
Mankulam.
T.P.No : 0213208007

Date : 23. 01. 2023

மாங்குளம் நல்லாயன் இல்லத்தினால் அரவணைக்கப்படும் சிறார்களின் கல்விப்பாதையின் தூண்களாக பயணித்து வரும் மண்சஞ்சிகை அமைப்பின் உறவுகள் ஒவ்வொருவருக்கும் இறையாசீர் கூறி அன்புடன் வரைவது,

உங்களின் தாராள உள்ளத்தின் நிதி அனுசரணையினால் எம் சிறார்களை போசிக்கவும் அவர்களுக்கு கல்வி அறிவூட்டவும் எமக்கு பலமாக இருந்து வரும் உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி கூறுகின்றோம். பல சிரமங்களின் மத்தியில் பிள்ளைகளின் வளர்ச்சிக்காக நீங்கள் நிதி சேமிக்கின்றீர்கள் என்பதை நாமறிவோம். உங்களின் அயராத ஒத்துழைப்பினால் பல பிள்ளைகள் தமது ஆற்றல்கள் திறமைகளை இனம் கண்டு தமது கல்விப்பாதையில் முன்னேறிச் செல்கின்றார்கள். நீங்கள் ஒவ்வொருவரும் செய்து வருகின்ற இரக்கத்தின் அன்பு செயல் பலருக்கு மகிழ்வையும் அர்த்தமுள்ள வாழ்வினை வாழ வழி சமைத்துள்ளது என்பதை எமது உளக்கண்களால் காண முடியும்.

இந்நாட்களில் எமது பிள்ளைகள் கல்வியில் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றார்கள். மேலும் பல புதிய பிள்ளைகள் இல்லத்தில் இணைந்துள்ளனர். தாராள உள்ளத்தினால் செய்கின்ற உதவிகளுக்கு நிச்சயம் இறைவன் நிறைவான வரங்களை அள்ளித்தருவார் என்றும் உங்களின் ஆசீரும் ஒத்துழைப்பும் தொடர்ந்தும் எம்மை வந்து சேரும் என்ற நம்பிக்கையுடன் நன்றியுடன் இணைந்த ஆசீரை கூறி விடைபெறுகின்றோம்.

நன்றி

இப்படிக்கு,

உண்மையுள்ள,

Sister In Charge
Good Shepherd Children's Home
Mankulam.

வாழ்க தமிழ்
தமிழ் பண்பாட்டு ஆய்வு மன்றம்
Tamil Cultural Research Forum
No.10, Pattiowita Road, Ratnapura, Sri Lanka. | Tel/Fax: +94 452 224 255

Date: 28/01/2023

வை.சிவராசா
பிரதம ஆசிரியர் அவர்களுக்கும்,
"மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகைக்கும்,
இதழின் வாசகர் பெருமக்களுக்கும்.

<u>நன்றிநவிழ்தல்</u>

**“பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது”**

**பொருள்:** பயன்கருதாதவர் செய்த உதவியின் நன்மையினை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலையும் விட அளவினால் மிகப் பெரியதாகும். என்பது வள்ளுவன் வாக்கு

இலங்கையில் இரத்தினபுரி மாவட்டத்தில் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மலையக தமிழ் மக்களுக்கு, தைப் பொங்கலை கொண்டாடும் முகமாக **யேர்மனி "மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகை** வழங்கிய கொடையளிப்பானது ஏறத்தாள **24** குடும்பங்களுக்கு தைப் பொங்கலை கொண்டாட உதவி இருப்பதை குறித்து பெருமைக் கொள்கின்றோம். நீங்கள் செய்திருக்கும் இக்கைங்கரியமானது காலத்தின் தேவைக்கேற்ற பெரும்புண்ணியமாகும்.

எவ்விதமான பிரதி உபகரணமும் எதிர்பாராமல் இவர்கள் செய்த உதவி கடலினும் பெரிதாகும். **1,00,700.00** ரூபா பெறுமதியான இந்த பணியானது உண்மையில் வறுமை காரணமாக தைப் பொங்கலை கொண்டாட வழியற்ற பலருக்கு உதவி இருக்கிறது என்பதில் எச்சந்தேகமுமில்லை. உதவிக்கரம் நீட்டிய எம் உறவுகளை ஒரு போதும் மறவோம். எம்மக்கள் சார்பாக **"மண்"** கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகைக்கும், இதழின் வாசகர் பெருமக்களுக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**“செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது”**

**நன்றிகள்**

இவண்.

க.சிவராஜ்வளவன்
தலைவர்
தமிழ் பண்பாட்டு ஆய்வு மன்றம்
இலங்கை

இல.10. பட்டியோவிட்ட ரோட். இரத்தினபுரி. இலங்கை.
Mob: +94 766 161 522, +94 773 984 343 | Email: tamilcultural.lk@gmail.com

# Top-10

1- உலகில் நடைபெறும் போர் சம்பந்தமான தகவல்கள், கொரோனா தொற்று, காலநிலைமாற்றம் போன்ற சமூக ஊடகச் செய்திகள் போன்றவற்றை தவறாகச் செய்திகளை வெளியிடும் முக்கிய சில நாடுகள். 2022 தகவலின் அடிப்படையில்..

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) பிறேசில் | - 54 | வீதம் | (2) பிரித்தானியா | - 46 | வீதம் |
| (3) அமெரிக்கா | - 42 | ” | (4) ஒஸ்திரியா | - 39 | ” |
| (5) பிரான்ஸ் | - 36 | ” | (6) சவீஸ்லாந்து | - 32 | ” |
| (7) யேர்மனி | - 29 | ” | (8) யப்பான் | - 14 | ” |
| (9) ருமேனியா | - 12 | ” | (9) ரஷ்ஷியா | - 10 | ” |

2- இன்றைய காலநிலை, அவசர உலகம், அதிவிரைவு உணவுப்பழக்கம், உடல் உழைப்பின்மை போன்ற காரணங்களால் உலகின் சில நாடுகளில் மக்கள் உடற்பருமன் அதிகரித்துவருகின்றது. இதனால் அரசாங்கத்துக்கும் பெரும் செலவு ஏற்படுகின்றதாம். அந்த வகையில் உடற்பருமன் உடையோர் வரிசையில் முன்னணியில் இருக்கும் நாடுகள்..

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) மெக்ஸிக்கோ | - 75 | வீதம்பேர் | (2) அமெரிக்கா | - 73 | வீதம்பேர் |
| (3) கங்கேரி | - 68 | ” | (4) பிரித்தானியா | - 64 | ” |
| (5) யேர்மனி | - 60 | ” | (6) இஸ்ரேல் | - 51 | ” |
| (7) பிரான்ஸ் | - 49 | ” | (8) யப்பான் | - 27 | ” |
| (9) தென்னாபிரிக்கா | - 22 | ” | (10) இத்தாலி | - 14 | ” |

3- நேட்டோ நாடுகளில் அதிகூடிய பாதுகாப்புச் செலவீனமாக வருடாவருடம் நிதி ஒதுக்கும் நாடுகள் வரிசையில் முன்னணியில் இருக்கும் பத்து நாடுகள்..2022ல் ஒதுக்கிய தொகையாகும். அமெரிக்கா ஒதுக்கிய தொகையைப் பார்த்தால் உலக பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகத்தான் இருக்கும்..

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) அமெரிக்கா | - 811.1 | பில்.யூரோ | (2) பிரித்தானியா | - 72.8 | பில்.யூரோ |
| (3) யேர்மனி | - 64.8 | ” | (4) பிரான்ஸ் | - 58.7 | ” |
| (5) இத்தாலி | - 29.8 | ” | (6) கனடா | - 26.5 | ” |
| (7) ஸ்பெயின் | - 14.9 | ” | (8) நெதர்லாந்து | - 14.4 | ” |
| (9) போலந்து | - 13.4 | ” | (10) துருக்கி | - 13.1 | ” |

---

வாசகப் பெருமக்களுக்கு தமிழ்-சிங்கள
சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துகள்!..



14.04.2023





எமது வாசகரும் டியூஸ்பேர்க்கில் வசிப்பவர்களான திரு ப. சௌந்தரராசா குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளான திரு துவர்மன் - சிவாஹினி தம்பதியினரின் செல்வப் புதல்வன் அஞ்ஜான்தேவ், மற்றும் மனோஜ்சியான் - சூரியா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஆதித்தியா ஆகியோரின் பிறந்தநாளை முன்னிட்டு...இவர்களின் நிதிப் பங்களிப்பில் கடந்த 23.01.2023 அன்று மாங்குளத்தில் அமைந்துள்ள ''நல்லாயன் சிறுவர் இல்லத்தில்'' பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது...

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

**MANN**
**Germany / Ausgabe 218**




## சர்வதேச மகளிர் தின வாழ்த்துகள் - 2023

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | **20€** |
| | ஏனைய நாடுகள் | **25€** |